# தேனகம்

## முத்தமிழ் விழா சிறப்பு மலர்

## 1996



கலாசாரப் பேரவை,
மண்முனை வடக்கு, மட்டக்களப்பு.

*Make An*

*Intelligent Move*

*And*

*Invest*

with

*The National Savings Bank*
*By Over Twelve Million*
*Depositors*

# National Savings Bank

FOR ALL YOUR TOMORROWS

# தேனகம்

## முத்தமிழ் விழா சிறப்பு மலர்
## 1996

மண்ணில் எம் கலைகளைக்
கண்ணென மதிப்போம்.


வெளியீடு:

**கலாசாரப் பேரவை,**
**பிரதேச செயலகம், மண்முனை வடக்கு,**
**மட்டக்களப்பு.**

**மக்கள் வங்கியின் மக்கள் வளம் நோக்கிய பயணத்தில் மீண்டும் ஒரு மைல் கல் ''சுபசெவன'' சமூக மேம்பாட்டுத் திட்டம்.**

எம்மை உருவாக்கிய ஆசிரியர் சமூக வாழ்வு சிறக்க நாம் உருவாக்கிய செயற்படுத்திய "குருசெத்த'' ஆசிரியர்களுக்கான முதலீட்டு சேமிப்புக் கடன்திட்டத்தின் சிறப்பில் திளைத்திருக்கும் வேளையில்,

நாம் நோயுற்ற வேளையிலெல்லாம் எம்மை அன்போடும் கருணையோடும் உபசரித்திடும் தாதியர்க்கென்றே தனித்துவமாக அறிமுகப்படுத்தியிருக்கும் திட்டம் சுபசெவன சேமிப்பு கடன் திட்டம்

**விபரங்கட்கு அண்மையில் உள்ள மக்கள்வங்கிக் கிளையைநாடுங்கள்.**

மக்கள் வங்கியின் சேமிப்புக் கணக்குகளுக்கு உத்தரவாதமும் பாதுகாப்பும் பெற்றிடுங்கள். அத்தோடு அதிகூடிய பரிசுப்பணமும் பெற்றிட இன்றே மக்கள் வங்கியில் பின்வரும் கணக்குகளை ஆரம்பித்திடுங்கள்.

மகளிர் அதிஸ்டக் கணக்கு:

*1ம் பரிசாக மிகச்சிறந்த கார் ஒன்றை பெற்றிடுங்கள். அத்தோடு மங்கையர் மனங் கவர் வீட்டு உபகரணங்கள், தங்கப் பவுண்கள் ஆகியன வருடாந்த சீட்டிழுப்பின்போது வாரி, வாரி வழங்கப்படுகின்றன.*

சிறுவர் சேமிப்புக் கணக்கு: *பலலட்சம் பரிசுகளைப் பெற்றிடுங்கள்.*

சாதாரண சேமிப்புக் கணக்கு:

*1ம் பரிசாக டொயோடா ரேசல் கார் ஒன்றைப் பெற்றிடுங்கள்*

சேமிப்பு உண்டியல்:

*நீங்கள் சேமிக்கும் ஒவ்வொரு கிளையிலும் பரிசில்கள் பெற்றிடுங்கள்.*

*அகில இலங்கை ரீதியில் மாபெரும் பரிசில் போட்டியிலும் சேர்ந்திடுங்கள்.*

**மக்கள் வங்கி மனங்குளிரும் பரிசில்களுடன் கூடிய வட்டியும் நூறு வீத உத்தரவாதமும் வழங்குகின்றது.**

எனவே இன்றே மக்கள் வங்கியின் வளம் தரும் சேமிப்புத் திட்டங்களுடன் உங்களை இணைத்துக் கொள்ளுங்கள்.

மக்கள் மனதறிந்து செயல்படும் வங்கி

# மக்கள் வங்கி

# மண்முனை வடக்கு பிரதேச செயலக
# கலாசாரப் பேரவை - 1996

### தலைவர்:-
திரு. செ. புண்ணியமூர்த்தி *(பிரதேச செயலாளர்)*

### இணைச் செயலாளர்கள்:
திருமதி. கலாமதி பத்மராஜா *(உதவிப் பிரதேச செயலாளர்)*
திருமதி. வாசுகி அருள்ராஜா *(உதவிப் பிரதேச செயலாளர்)*

### இணைப்பாளர்:
திருமதி. நிர்மலா ஜெயராஜா

### விடய எழுதுநர்:
செல்வி. மதிவதனி ஆறுமுகம்

### பேரவை உறுப்பினர்கள்:
திரு. காசுபதி நடராஜா
திரு. எஸ். தங்கவேல்
திரு. கதிர் பாரதிதாசன்
திரு. ஆர். மாஸ்டர் சிவலிங்கம்
திரு. க. குருநாதன்
திரு. க. சரவணபவன்
திரு. அ. இருதயநாதன்
திருமதி. ஹபீபா காதர்
திரு. இரா. துரைரத்தினம்
திரு. கே. லோறன்ஸ்
திரு. எஸ். லோகநாதன்
திரு. மு. கணேசராஜா
திரு. க. கணேசானந்தம்
திரு. ஏ. எஸ். யோகராஜா
திரு. பால. சுகுமார்

### மலர்க்குழு:
திரு. இரா. துரைரத்தினம்
திரு. கே லோறன்ஸ்
திரு. பால .சுகுமார்
திரு. காசுபதி நடராஜா
திரு. எஸ். லோகநாதன்
திரு. க. சரவணபவன்

தரமான அழகிய
வேலைப்பாடமைந்த
தங்க நகைகளுக்கு
சிறந்த
நகை மாளிகை



## நியூ புஸ்பா

34,2ம் குறுக்குத் தெரு,
மட்டக்களப்பு.

WITH BEST COMPLIMENTS

## *Haji M. Abdul Majeed & Sons*

*General Merchants, Importers, Distributors, Contractors, & Civil Engineers*

126, 128, Main Street,
Batticaloa.

*Branch*:
Raffeeck Stores,
18, 20 Main Street, Eravur.

*Phone*: 065-2836
*Fax* : 065-4757

# சக்தி நூல் நிலையம்

- பாடசாலைப் புத்தகங்கள்
- மாதாந்த வாராந்த பத்திரிகைகள்
- கடதாசி ஆலைக் கூட்டுத்தாபன தயாரிப்புகள்
- சகலவிதமான கொப்பி வகைகள்
- பாடசாலை உபகரணங்கள்
- காரியாலய உபகரணங்கள்
- சினிமாப் பத்திரிகைகள்
- எவர்சில்வர் பாத்திரங்கள்
- நாவல்கள்

ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

## SAKTHI NOOL NILAYAM

53, TRINCO ROAD, BATTICALOA.

*T.P— 065-2103*

# ஆசிச்செய்தி

மட்டக்களப்பு இராம கிருஷ்ண மிசன்
**சுவாமி அஜராத்மானந்தா அவர்கள்**


மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை, நடத்தவிருக்கும் கலாசார விழா தொடர்பாக, சிறப்பிதழ் வெளியிடத் தீர்மானித்திருப்பதையறிய மகிழ்ச்சி. இத்தகைய நிகழ்வுகள் மக்களின் கலை கலாச்சாரம் விழிப்புற்று விளங்க தூண்டு கோலாய் அமையும். கலைகள் வளர்ந்தால் இனங்களின்தனித் தன்மை காப்பாற்றப்படும். ஒவ்வொரு இனத்திற்கும் உயிர் நாடியாக விளங்குவது அதன் கலாச்சாரங்களாகும்.

நமது கலாச்சாரத்தில் உயர் மனித விழுமியங்கள் புதைந்து கிடக்கின்றன. அவைகளை நம் இளம் சந்ததியினருக்கு அறிமுகப்படுத்துவது கலாச்சாரப் பேரவை போன்ற அமைப்புக்களின் தலையாய கடமையாகும். வெளியிடவிருக்கும் சிறப்பிதழும், கலாச்சார விழாவும் வெற்றிகரமாகவும் சிறப்பாகவும் நிறைவேற இறைவனை வேண்டுகின்றேன். கலாசாரப் பேரவையினருக்கு எமது வாழ்த்துக்கள்.

இறைபணியில்
**சுவாமி அஜராத்மானந்தா**

★ நம்பிக்கை ! ★ நாணயம் !!

★ நேர்மை !!!



ஓடர் நகைகளை அசல் 22K இல்

குறித்த தினத்தில் செய்து

பெற்றுக் கொள்ள

# பொ. சுப்பிரமணியம்

## நகை மாளிகை

22, U. D. A. கட்டடம்.

லேடி மெனிங் டிறைவ் மார்க்கட், மட்டக்களப்பு.

*T.P. 065-2682*

WITH BEST COMPLIMENTS



## DRESS WELL

115, Trinco Road,
BATTICALOA.

அழகிற் சிறந்த பவுண்
தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்

# உதயா

## நகை மாளிகை

*39, பிரதான வீதி,*
*மட்டக்களப்பு.*
தொலைபேசி 065-2619

---

*ஓடர் நகைகள் குறித்த காலத்தில்*
*உத்தரவாதத்துடன் செய்து*
*தரப்படும்*

# ஆசிச் செய்தி

திருமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்
**பேரருள் கலாநிதி யோ. இங்சிலி சுவாம்பிள்ளை**
**அவர்கள்**

கலாசாரமும், பண்பாடும் ஒரு சமூகத்தின் சிறப்பை, தொன்மையை வெளிப்படுத்துபவை. அத்துடன் அதன் வளர்ச்சிக்கும் இயக்கப்பாட்டுக்கும் துணையாயிருப்பவை. எனவே வாழ்கின்ற, வளர்கின்ற ஒரு சமூகம் தனது கலாச்சார விழுமியங்களை கருத்துடன் போற்றி பாதுகாத்து வளர்த்து வருதல் இன்றியமையாதது.

மட்டக்களப்புப் பிரதேசத்துக்கு வளமான கலாசாரப் பாரம்பரியம் ஒன்றுண்டு. நவீன சமூக, அரசியல், பொருளாதார மாற்றங்களுக்கும் ஈடுகொடுத்து இம் மண்ணில் அது விழுதோடி நிற்பதை நாம் கண்டுகொள்ள முடிகிறது. அது அழிந்துவிடாமல் பாதுகாத்து வளர்த்து வருவது இன்றைய தலைமுறையின் பாரிய பொறுப்பாகும். இந்தவகையில் மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை கலாசார விழா எடுப்பதும், சிறப்பு மலர் வெளியிடுவதும் மிகப் பொருத்தமானதும், பாராட்டுக்குரியதும் ஆகும்.

நமது நாடு, குறிப்பாக வடக்கு கிழக்குப் பகுதிகள் போர்ச் சூழல் ஒன்றுக்கு முகம் கொடுத்து நிற்கின்ற இவ் வேளையில் அழிவுகளும், அவலங்களும் நம்மை வருத்துகின்ற நிலையில் இத்தகைய விழாக்கள் எமது மக்களுக்கு ஆறுதலும், அமைதியும் தருவனவாக அமைகின்றன. இதுபோன்ற முயற்சிகள் எமது சமூகத்தை ஒற்றுமைப்படுத்தவும், வளப்படுத்தவும் தகுந்த வாய்ப்புக்களாய் உள்ளன. எனவே இவை தொடரத்தான் வேண்டும்.

இம் முயற்சிகளுக்கு முன்னின்று உழைப்போர் அனைவரையும் நாம் மனமுவந்து பாராட்டுகின்றோம். விழா இனிதே நடைபெறவும், சிறப்புமலர் சிறப்புறவெளிவரவும் இறையருளை வேண்டி நமது ஆசீரையும் வழங்குகிறோம்.

**பேரருட்திரு. யோ. இங்சிலி சுவாம்பிள்ளை**
**திருமலை - மட்டக்களப்பு ஆயர்.**

★ கழிவுக்கடதாசியை காசாக்க முன் வாருங்கள்!
★ பாவித்துக் கழித்த கழிவுக் கடதாசிகளை மீண்டும் பாவனைக்குகந்த காகிதமாக்கலாம்.
★ வழங்குநர்கள் வளம் பெறலாம்!
★ கழிவுக் கடதாசி மூலம் காசு சம்பாதிக்க இதோ ஒரு வழி
★ உங்கள் விருப்பம் - எங்கள் சம்மதம்

**அதிக இலாபம் பெற நீங்கள் சேகரிக்கும் கழிவுக்கடதாசிகளை பின்வருமாறு வகைப்படுத்துங்கள்.**

1. பாவிக்கப்படாத தூய வெள்ளை காகிதம் ஒரு தொன் ரூபா 7500/-
2. சீமெந்து வெற்றுப்பைகள், கிராப்பேப்பர் ஒரு தொன் ரூபா 5500/-
3. அப்பியாசக் கொப்பிகள், வெட்டுத்துண்டுகள் ஒரு தொன் ரூபா 4500/-
4. அச்சிடப்படாத புதினப்பத்திரிகைத்தாள் ஒரு தொன் ரூபா 3500/-
5. காகித அட்டைகள், பெட்டிகள், அச்சிடப்படாத தாள்கள் ஒரு தொன் ரூபா 2750/-
6. கடித உறைகள் வெட்டுத்துண்டு ஒரு தொன் ரூபா 2500/-
7. கலப்புக் கழிவுக் கடதாசிகள் ஒரு தொன் ரூபா 1750/-

**இவற்றிலிருந்து நீரில் கரையாத பொருட்கள், காபன் கடதாசி, பிளாஸ்டிக் பொருட்கள் ஆகியவற்றை அகற்றியபின் எமக்கு நேரடியாகவோ எமது முகவர்கள் மூலமாகவோ உங்கள் இருப்பை வழங்கி மேலதிக வருமானம் பெறுங்கள்.**

மேலதிக விபரங்களுக்கு:- ஆலை முகாமையாளர்,
காகிதஆலை,
வாழைச்சேனை.

தொலைபேசி இலக்கங்கள்: 065-7311, 065-7312, 065-4705
பெக்ஸ்: 065-4706

## With Best Compliments

From

# THE MODERN JEWELLERY

**SHOW ROOM:**

*No. 32, Beach Road,*
*KATTANKUDY - 4.*
*Res: 065-2051*

*No. 18, Central Road,*
*44, Main Street,*
*BATTICALOA:*
*T.P. 065-2528*

# MESSAGE FROM THE HON. GOVERNOR N.E.P

The People of the North - Eastern Province are proud of their Cultural heritage and traditions. Even du--ring the times of conflict these values are safeguarded. This too has helped the birth of Literary giants, who today are not only recognised in Sri Lanka but all over the world. The rich and varied cultural patterns of this pro--vince have also brought out the glories of all commu--nities Tamils, Sinhalese, Muslims and Burghers who have lived in this province for over the years.

For the 1993 Literary awards there were the novels short stories. Poems, Drama, children's literature and Re--search literature which carried away the awards.

This year the Annual Cultural Festival is to be held in April 1996. A Souvenir published to mark the Annual Festival by the Manmunai North Division Cultural Board not only conveys a message on Cultural, Traditions and Heritage. The message shows the strength in culture progr--esses when there is harmony and peace. I wish the Orga--nisers of this festival all success.

**DR. GAMINI FONSEKA**
*GOVERNOR N. E. P.*



★ நம்பிக்கை !

★ நாணயம் !!

★ நேர்மை !!!

இவை அனைத்திற்கும்

# சுபா கோல்ட் ஹவுஸ்

38F, புனித அந்தோனியார் வீதி, மட்டக்களப்பு.

065-2965

ஒடர் நகைகள் குறித்த தினத்தில் 22கரட் தங்கத்தில்
உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்

*With Best Compliments*

**FROM**

# RAJAH'S BOOKS CENTRE

- *Agent for National Paper Company*
- *Wholesale Dealer for Educational Publications Department*
- *Dealers in all Kinds of Stationeries*
- *School Books*
- *Indian Books & Novels*
- *Photo copy Papers*
- *Telex & Fax Rolls*
- *Packing Materials*
- *Invitation Cards*
- *Birth Day Cards*
- *Sports Items*
- *Trophies Cups & Shields*
- *Office Equipments*

*111, Main Street,*
*BATTICALOA.*

T.P. 065-2371

# வாழ்த்துச் செய்தி

கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர்
**திரு. இ. யோகநாதன் அவர்கள்**

மீன்பாடும் தேன்நாடு என வர்ணிக்கப்படுகின்ற மட்டுநகர் கலைவளம் செழித்தும் கலைப் பாரம்பரியம் ஓங்கியும் காணப்படுகின்ற ஒரு பிரதேசமாகும்.

இங்கு வழக்கிலிருக்கும் பிரசித்தம்வாய்ந்த கூத்து, அம்மானை, வசந்தம் ஆகிய கலையுருவங்கள் பொதுமக்களின் வாழ்வினோடு பின்னிப்பிணைந்து மக்களுக்காக மக்களை வைத்து மக்களால் ஆக்கப்படுகின்ற கலைப் படைப்புக்கள் ஆதலால் ஜனரஞ்சகமானவை என கருதப்படுகின்றன.

துச்சமென கருதக்கூடிய அஃறிணைபாற்படும் பாடும் மீனையும் ஆடும் வாவியையும் கவிதைக்கு பொருளாக வைத்து கவிதை புனையப்பெற்றமை கலையார்வம் எவ்வளவு தூரம் மேலோங்கியுள்ளது என்பதை காட்டிநிற்கின்றது.

கல்லொன்றை போட்டால் அநேகமாக ஒரு கலைஞனின் தலையிலேதான் அக்கல் சென்று விழுமென்று சொல்லக் கூடிய அளவுக்கு கலைஞர்கள் நிறைந்த இப்பிரதேசத்தில் ஆண்டுதோறும் தவறாது மண்முனை வடக்கு கலாசாரப் பேரவையினர் நடாத்திவரும் கலாசாரவிழா ஆக்கமும் ஊக்கமும் அளிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

இவ்விழாவின் ஊடாக ஏற்கனவே நிறைந்து நிற்கின்ற கலைத்திறன் மேலும் பெருகுவதற்கு வழிகோலும் என்பது எனது துணிபு.

**விழாவின் வெற்றிக்கு எனது நல்வாழ்த்துக்கள்.**

இ. யோகநாதன்
மேலதிக செயலாளர்,
கலாசார, சமய விவகார அமைச்சு,
கொழும்பு.

# Mano Stores

மனோ ஸ்டோர்ஸ்

Distributers For: Pure Beverages Co. Ltd.

(Coca Cola, Fanta & Sprite)

**Prop: K.S. MANOHARAN**

*No. 450, Trinco Road,*
*BATTICALOA.*

**Telephone: 065-2899**

அழகிற் சிறந்த தங்க நகைகளுக்கு

# சுசீலா

ஆபரண நிலையம்

17, பிரதான வீதி,
மட்டக்களப்பு.
☎ 065-2519



# மட்டக்களப்பு முக்குக்கண்ணாடி ஸ்தாபனம்

75B, முனை வீதி, மட்டக்களப்பு.

(தனியார் பஸ் நிலையம் முன்பாக)

இலவச கண் பரிசோதனை செய்து
7 நாட்களில் கண்ணாடி வழங்கப்படும்.

கிளை:- *195, திருமலை வீதி, மட்டக்களப்பு.*
*35B, பன்சாலை வீதி, மட்டக்களப்பு.*
*வைத்தியசாலை, கல்முனை.*
*பிரதான வீதி, மருதமுனை.*
*தஸ்லிம் டென்டல் கிளினிக் காத்தான்குடி.*
*நடமாடும் சேவை கிழக்கு மாகாணம்*

# வாழ்த்துச் செய்தி

வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர்
திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்

மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடாத்தும் முத்தமிழ் விழாவுக்கும், சிறப்பு மலருக்கும் வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெரு மகிழ்வடைகிறேன்.

ஒரு சமுதாயத்தின் பண்பாட்டுப் பாரம்பரியக் கருவூலமாக இருப்பது அதன் கலை இலக்கிய கட்டமைப்பேயாகும். ஒரு சமூகத்தின் தனித்துவம் பேணப்படுவதும் இக்கலை இலக்கிய அம்சங்களினாலேயாகும். இத்தகைய மகத்துவம் வாய்ந்த கலையினையும், கலைஞர்களையும் அழித்தோ, சோர்ந்தோ போக விடாது பேணிப் பாதுகாப்பது அவசியமானதொரு நடவடிக்கை ஆகும். ஒரு கட்டிடம் அழிந்தால் அதனைக் கட்டி எழுப்புவது மிகச் சுலபம். ஆனால் கலை இலக்கியப் படைப்புக்கள் அழிவடைந்துவிட்டால் அவற்றை மீளப் பெறுவது இயலாது. அச்சமுதாயத்தின் தனித்துவமே சிதைந்து விடும். எனவே பாரம்பரியக் கலைகளைப் பேணிப்பாதுகாப்பதும், புதியனவற்றை வளர்த்தெடுப்பதும் அவ்வப் பிரதேச மக்களதும் தலையாய கடமையாகின்றது.

அத்தகைய உயர்வான முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் மண்முனை வடக்குப் பிரதேசச் செயலக கலாசாரப் பேரவையைச் சார்ந்த அனைவரையும், பிரதேச செயலாளரையும் பாராட்டுகின்றேன்.

**விழா இனிது நடைபெற எனது வாழ்த்துக்கள்!**

**ஜி. கிருஷ்ணமூர்த்தி,**
பிரதம செயலாளர்.

வடக்கு கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

With Best Compliments
From
# SINGER

## BATTICALOA - SHOW ROOM

**Easy Payment Scheme
Available on
all Products.**

**Hotel Orient Bldg,
187, Trinco Road,
BATTICALOA.**

*With Best Compliments
from*

# KRISHANTH HARDWARE
# &
# ELECTRICALS

**Building Materials, Cement, Tiles, P.V.C. Pipes
Electrical Goods Etc.**

*No. 268, Bar Road,*
BATTICALOA.

*T.P. 065-2321*

# வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்
**அ. கி. பத்மநாதன் அவர்கள்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 12 பிரதேச செயலகங்களுள் ஆண்டுதோறும் கலாசாரப் போட்டிகள், கலாசார விழா, மலர் வெளியீடு என சிறப்பான கலை இலக்கியப்பணி ஆற்றி வரும் மண்முனை வடக்குப் பிரதேச, கலாசாரப் பேரவை பாராட்டுக்குரியது.

சமுதாய மேம்பாட்டுக்காக, நாம் எத்தகைய அபிவிருத்தித்திட்டங் களை மேற்கொண்டபோதும் கலை இலக்கிய வளர்ச்சி இல்லை என்றால் அந்த அபிவிருத்தி பூரணத்துவம் பெற்றதாகாது. சங்க காலம் முதல் இன்றுவரை தமிழர் நாகரீகமும் பண்பாடும் உயர்வாகப் பேசப்படுகிற தென்றால் அதற்குக் காரணம் தமிழரின் கலைகளும் இலக்கியங்களுமே

தமிழர்களுடைய வரலாற்றில் போர்நடந்த காலத்திலும் கலை வளர்ந்திருக்கிறது, அவ்வரலாறு தொடரவேண்டும். அதற்கு ஒரு முக்கிய மான தேவை உண்டு. கலாசார பண்பாட்டு வளர்ச்சி ஒரு புறம் இருக்க சமூகத்தில், அமைதியும், சுபீட்சமும் ஏற்பட அவை மறைமுகமாக உதவுகின்றன.

இன்றைய அமைதியற்ற சூழ்நிலையில், இனங்களுக்கிடையே அமைதியும், சமாதானமும் ஏற்படுவதற்கு கலை, இலக்கியம் என்பன ஒரு நல்ல ஊடகமாக அமையலாம். உள்ளங்களைப் பண்படுத்தி, அவற்றில் நல்ல எண்ணங்களை விதைப்பதற்கு, கலை, இலக்கியம் என்பன காலம் காலமாக உதவி வந்திருக்கின்றன.

இம் முயற்சியில், முன்னுதாரணமாகச் செயற்படும் மண்முனை வடக்கு பிரதேச கலாசார சபை, ஏனைய பிரதேசங்களின் கவனத்தையும் இத்துறையில் ஈர்க்கும் என எதிர்பார்க்கின்றேன். இப்பிரதேசத்தின் கலை இலக்கிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேற வாழ்த்துகின்றேன்.

**அ. கி. பத்மநாதன்,**
அரசாங்க அதிபர்.
மாவட்ட ஆணையாளர்,
மட்டக்களப்பு மாவட்டம்.

## கைத்தறிப் புடவை விரும்பிகளே

தரத்தில் பிரசித்திபெற்ற
மட்டக்களப்பு கைத்தறிப் புடவைகளைச் சகாயமான விலையில்
சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளவும்,

## மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட நெசவாளர்களே

உங்களுக்குத் தேவையான
பலதரப்பட்ட கைத்தறி நெசவு நூல்களையும்,
நெசவு உபகரணங்களையும்,
தரமான சாயமிடப்பட்ட, வெள்ளையாக்கப்பட்ட நூல்களையும்
சகாயமான விலைக்குக் கொள்வனவு செய்யவும்

# மட்டக்களப்பு மாவட்ட
# புடவைநெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

இல. 28, பார் வீதி, மட்டக்களப்பு.
தொலைபேசி இல. 065-2707.

---

*With Best Compliments*

*from*

# V.K.V. & SONS

*GENERAL HARDWARE MERCHANTS*

Specialists in:
PVC Fabricated Fittings, in Different Sizes, Rain Water Gutters, Electrical Conduits, Special Welding Items and Electrical Items

*234, Bar Road.*
**Batticaloa.**

# வாழ்த்துச் செய்தி

மண்முனை வடக்கு கலாசாரப் பேரவைத் தலைவரும்,
பிரதேச செயலாளருமான
**திரு. செ. புண்ணியமூர்த்தி அவர்கள்**

மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை நடாத்தும் நான்காவது முத்தமிழ் விழாவையிட்டு வெளியிடப்படும் சிறப்புமலர் இவ்வாண்டில் தேனகம் என்ற பெயருடன் வெளிவருகிறது.

மண்முனை வடக்குப் பிரிவில் வாழும் அறிஞர் பெருமக்கள் உவந்தளித்த ஆக்கங்களைத் தொகுத்து, இன்றைய இலக்கிய நிலையினைப் பிரதிபலிக்கும் ஒரு வரலாற்றுப் பதிவாக இம்மலரைப் படைத்திருக்கும் மலர்க்குழுவினரை மனதாரப் பாராட்டுகிறேன்.

இத்தகைய இலக்கிய வெளியீடுகளும், விழாக்களும் எமது சமுதாயப் பாரம்பரியங்களைப் பேணவும், புதிய கலைஞர்கள் இலக்கியப் படைப்பாளிகள் ஆகியோரை ஊக்கவும் பெரிதும் உதவும். எனவே பழமை பேணலும், புதுமை ஊக்கலும் எமது கலாசார வளர்ச்சிக்கு மிகவும் அவசியமானவை.

மண்முனை வடக்கு கலாசாரப்பேரவை நடாத்திவரும் முத்தமிழ் விழாக்கள் இப்பகுதி இலக்கியப் படைப்பாளிகள், ஆர்வலர், கலைஞர்கள் ஆகியோருக்கு மதிப்பு, ஊக்குவிப்பு, களிப்பு என்பவற்றை வழங்கி வருகின்றன என்பதை, இவ்வாண்டு நடாத்தப்பட்ட போட்டிகளிலிருந்தும், ஏனைய நிகழ்வுகளிலிருந்தும் தெளிவாக அறியமுடிகிறது. மேலும், இவ்வாய்ப்புக்கள் பயன்படுத்தப்பட வேண்டும் என அவாவுகின்றேன்.

இவ்வாண்டு முத்தமிழ் விழாப் போட்டிகளில் வெற்றியீட்டிய கலைஞர்களுக்கான பரிசுத் தொகையினை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வழங்கியுள்ளது. இதனைப் பொறுப்புணர்வோடு வழங்கிய திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம், உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். தெய்வநாயகம் ஆகியோருக்கு இச் சந்தர்ப்பத்தில் விசேடமாக நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இம் மலரை உருவாக்க ஆக்கங்கள் வழங்கிய அறிஞர்கள், விளம்பரம் மூலம் நிதியுதவி வழங்கிய வர்த்தகப் பெருமக்கள், கிராம உத்தியோகத்தரூடாக நிதி வழங்கிய பொதுமக்கள், கிராமோதய கிராம அபிவிருத்திச் சங்கங்கள், நிதி திரட்டுவதில் முன்னின்று உழைத்தவர்கள், அச்சகத்தார் அனைவருக்கும் இதயபூர்வ நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

தேனகம் உருவாக உணர்வையும் உழைப்பையும் வழங்கிய
மலர்க்குழுவினரை வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

**செ. புண்ணியமூர்த்தி,**
பிரதேச செயலாளர்,
மண்முனை வடக்கு.

## உள்ளே............


01. மட்டக்களப்பில் விமர்சனம் ஒரு நோக்கு ... 21

02. சிந்திப்போமா (கவிதை) ... 26

03. கிழக்கிலங்கையில் சுவாமி விபுலானந்தரின் பாடசாலைக் கல்விப் பணிகள் ... 29

04. மகிமை மிகு மட்டக்களப்பு (கவிதை) ... 33

05. மட்டக்களப்பு மண்ணின் மகத்துவம் ... 35

06. காத்திருப்பேன் (கவிதை) ... 37

07. மட்டக்களப்பில் ஓவியக்கலை ... 38

08. ஆசாரங்கள் (சிறுகதை) ... 41

09 மட்டக்களப்பில் சோதிடக்கலை ... 45

10. மீண்டும் மதுரை எரிதல் வேண்டும் ... 53

11. அர்த்தமுள்ள அடிஎடுப்புக்கள் ... 55

12. என்வாழ்த்து (கவிதை) ... 59

13. குழந்தை இலக்கியமும் நாமும் ... 61

14. பொட்டிடப்படும் பொற்குடங்கள் வரிசையில் ... 66

15. 1995ன் இலக்கிய இழப்பு விமர்சன வீரகாவியம் வீ. ஆனந்தன் ... 72

16. எமது கலை இலக்கியங்கள் பல்துறை நோக்கு ... 79

# ஒரு வார்த்தை..........

மண்முனை வடக்கு கலாசார பேரவை கடந்த மூன்றாண்டு களாக முத்தமிழ் விழாவையும் அதனையொட்டி சிறப்பு மலரையும் வெளியிட்டு வருகிறது. இது நான்காவது ஆண்டு. இம்முறை 'தேனகம்' எனும் பெயருடன் இதழ் வருகிறது.

இப்பிரதேசத்து கலை இலக்கிய சமூக கலாசார நடவடிக் கைகளுக்கு ஊட்டம் தரும் பல்வேறு கருமங்களிலும் கலாசாரப் பேரவையானது செயலாற்றி வருகிறது. பாடசாலை மட்ட, திறந்த போட்டிகள், கலைஞர் கௌரவம், முத்தமிழ் விழா என்றவாறு அமையும் அக்கருமங்களுள் ஒரு பகுதியாகவே இம் மலரும் அமைகி றது.

இப்பிரதேசத்து பல்வேறு அம்சங்கள் குறித்தும் ஆழமான ஆக்கங்களுடன் மலரை கனதியாக அமைக்க விரும்பியிருந்தும், பொதுவாகவே எமது சிந்தனை உலகில் தற்போது காணப்படும் மந்த நிலையும், அறிஞர் பெருமக்களிடம் இருந்து குறித்த திகதிக் குள் ஆக்கங்களை பெறுவதில் ஏற்பட்ட சிரமம் காரணமாகவும் அவ் விலக்கை திருப்திகரமாக எய்த முடியவில்லை.

எனினும் கூட பலரும் சிரமமெடுத்து எழுதி உதவியுள்ளனர். இவ்விதழின் உள்ளடக்கமானது இப்பிரதேசத்தின் கலை இலக்கிய சமூக கலாசார அறிவியல் துறைகளில் எமது அக்கறைகள் எவ் வாறுள்ளன என்பதையும் அவற்றின் ஆழ அகலங்களையும் அறிவதற் கான ஒரு வெட்டு முகமாக அமையும்.

இதழ் சிறப்புற அமைய உதவியவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்!

— மலர்க்குழு —

## இலங்கை வங்கி அறிமுகப்படுத்தியுள்ள பல விசேட அம்சங்களை உள்ளடக்கிய

# "மகளிர் பொற் கணக்கு"

# (Kantha Ran Ginum)

அன்பார்ந்த மகளிருக்கு!

உங்கள் எதிர்கால சுபீட்சம் கருதி இலங்கை வங்கி காப்புறுதிக் கூட்டுத் தாபனத்துடன் இணைந்து இலவசக் காப்புறுதியையும் ஏனைய பல வசதிகளையும் வழங்க முன்வந்துள்ளது. கணக்கு ஆரம்பிக்கத் தேவையான:-

**தகைமைகள்**

i) வயது எல்லை:- 16 முதல் 60 வரை.

ii) ஆரம்ப வைப்பு குறைந்தது 500/-, ஆகக் குறைந்த மாதாந்த தவணைப் பணம் 250/-

**நன்மைகள்**

i) சாதாரண சேமிப்புக் கணக்கிலும் பார்க்க அதிகரித்த வட்டி.

ii) அடகுக் கடன்களுக்கு குறைந்த வட்டி.

iii) இலகு கடன் வசதிகள் குறைந்த வட்டி வீதங்களில் (13 முதல் 15 வரை)

iv) வருடம் தோறும் அதிஷ்டலாபச் சீட்டுக்கள் மூலம் பரிசில்கள்.

v) இலவசக் காப்புறுதி (Life Insurance)

காப்புறுதி நன்மைகள் பெற கணக்கு ஆரம்பிக்கப்பட்டு 6 மாத காலம் பூர்த்தியடைந்தும், கணக்கு மீதி குறைந்தது 3000/- ஆகவும் இருக்க வேண்டும்.

### காப்புறுதி அட்டவணை.

| இழப்பு | இழப்பின் தன்மை | காப்புறுதிக் கொடுப்பனவு |
|---|---|---|
| (i) மரணம்/ பாரிய விபத்து | விபத்து/நோய் இயற்கை ஏதுக்களால் அவயவங்களை இழத்தல் / செயலற்றுப் போதல் | கணக்கிலுள்ள மீதியின் 10 மடங்கு வழங்கப்படும். (அதி கூடிய தொகை 5இலட்சம்) (உ-ம்) க/கு மீதி 50,000/- ஆயின் காப்புறுதியாக 500,000/- வழங்கப்படும். |
| (ii) விபத்துக்கள்/ எரிகாயங்கள், மின்சார தாக்கங்கள் | அவயவங்களின் பகுதியை இழத்தல்/செயலற்றுப் போதல், எரிகாயத்தால் உருக்குலைதல் | கணக்கிலுள்ள மீதியின் 5 மடங்கு வழங்கப்படும் (உ-ம்) க/கு மீதி 50,000/- ஆயின் காப்புறுதியாக 250,000/- வழங்கப்படும். |

மேலதிக விபரங்களுக்கு அண்மையிலுள்ள கிளை முகாமையாளருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

# மட்டக்களப்பில் விமர்சனம் ஒருநோக்கு

— மு. இராசரத்தினம் —

வெருகல் ஆறு, குமுக்கன் ஓயா, வங்கக்கடல், அம்பாறை, பொலநறுவை ஆகியவற்றை முறையே வடக்கு, தெற்கு கிழக்கு, மேற்கு எல்லைகளாகக் கொண்டு 951.6 சதுர மைல் பரப்பளவுடையதாய் விளங்கிய பழைய மட்டக்களப்பு மாவட்டத்தை மையமாகக் கொண்டு இங்கு நிலவிய இலக்கிய விமர்சன முறைமைகளைத் தொட்டுச் செல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

விமர்சனம் அல்லது திறனாய்வு என்பது தமிழில் நவீன காலத்திற்குரிய புதுத்துறையாகும். எனினும் விமர்சனத்தை ஓர் ஆய்வு முறையாகக் கொண்டு நோக்குமாயின் மிகப் பழங்காலத்திலேயே அதனுடைய செயற்பாட்டினைத் தமிழ் இலக்கியப் பரப்பிற் காணலாம். பேராசிரியர் நச்சினார்க்கினியர் முதலியோர் செய்த உரைகளில் விமர்சன முயற்சிகள் தலைகாட்டுவதை முற்றாக மறுப்பதற்கில்லை.

எனினும் கைத்தொழிற் புரட்சியின் விளைவாகத் தோற்றம் பெற்ற நவீன இலக்கியங்களின் வருகையுடன் நவீன விமர்சனமும் இலக்கிய உலகில் நிலை பெற்றது. இந்த முன்னுரையுடன் மட்டக்களப்பு விமர்சனத்தின் போக்கும் நோக்கும் வளர்ச்சியுற்ற முறையினைப் பார்ப்போம்

மட்டக்களப்பின் இலக்கிய விமர்சனம், பண்டிதர்கள், வித்துவான்கள், கவிஞர்கள், கதைஞர்கள் இரசிகர்கள், ஆய்வாளர்கள், விமர்சகர்கள் ஆகிய பலதரப்பட்டவர்களின் கைகளிலும் அகப்பட்டு வரட்சியும், வளர்ச்சியும் கண்டு வந்துள்ளமையை யாவரும் அறிவர்.

“இக்காலத் திறனாய்வாளர்கள் பெரும்பாலும் எடுத்துக் கொண்ட பொருளைக் கோட்டை விட்டு விட்டு அங்கிங்கெல்லாம் சென்று தமது போலித் தன்மையின் ஆழத்தை பறைசாற்றுவர். ஆனால் விபுலானந்த அடிகளோ மிகவும் இறுக்கமாகத் திறனாய்வு செய்வார்” என அடிகளாரைப் போற்றுவார். கே. எஸ். சிவகுமாரன். மதுரைத்தமிழ் சங்கத்தின் பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்த முதலாவது இலங்கையரான விபுலானந்தர் இலங்கையின் தமிழ் விமர்சனத்துக்கும் முன்னோடியானார். இவரது பன்மொழி அறிவும், அகலித்த பார்வையும் ஒப்பியற் சிந்தனையும் நவீன விமர்சனத்துக்கு அவசியமானவை மட்டுமன்றி ஒரு திறனாய்வாளனிடம் இருக்க வேண்டியனவும் ஆகும். எனவே மட்டக்களப்பு விமர்சனக் களத்தின் முன்னோடியாக இவரைக் கொள்வதில் தவறேதும் இல்லை 'இலக்கியச் சுவையாவது யாது? அச்சுவையில் ஈடுபடத் தேவையான மனப் பழக்கம் யாது? இலக்கியம் கற்றற்கியைந்த கருவிகள் யாவை? என அடிகளார் எழுப்பும் வினாக்கள் ஒரு திறனாய்வாளனிடம் இருக்க வேண்டிய முயற்சிகளின் முதற்படிகள். அடிகளார் 'வில்லி பாரதத்தையும் கிரேக்க கவி ஹோமரையும் ஒப்பிட்டார். பாரதியைப் பார் அறியுமாறு செய்தார். கற்றறிந்தார்க்கு கலித்தொகை மட்டுமல்ல கண்ணன் பாட்டும் ஏற்றது. என எடுத்துக்

காட்டினார். பேராசிரியர் க.கைலாசபதி "பழமையையும், புதுமையையும் உயிர் துடிப்புடன் உள்ளவற்றையும் எடுத்துக் காட்டியவர் அடிகள்" என அவரது விமர்சன உள்ளத்தைப் போற்றுகின்றார்.

இவருக்குப் பின்னர் வந்த ஏனைய பண்டிதர்களான, பண்டிதர் க. பூபாலப் பிள்ளை புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை பண்டிதர் வி.சீ. கந்தையா ஆகியோர் ஆசிரியர்களாக விளங்கிப் பழந் தமிழ் இலக்கிய சுவையில் ஈடுபட்டனர். நவீன இலக்கியங்களின் பால் ஈடுபாடற்றவர்களாக இருந்தனர் எனவும் அறியமுடிகின்றது.

அடுத்து வித்துவான்கள் எனப் பார்க்குமிடத்து வித்துவான் F.X.C. நடராசா, வித்துவான் சா. இ. கமலநாதன் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள்.

முன்னவரான F. X. C. அவர்கள் இலக்கியம் என்பது இலக்கணத்தாற் காரியப்படுவது. இலக்கணம் என்பது இலக்கியத்தின் அமைதியாகும் எனவும் வசனநடையில் எழுதப்படும் கதை, கவிதை, நாடகம் இவற்றிற்கு உரை வேண்டியதில்லை. ஆகவே விமர்சனம் தமிழில் எழவில்லை, எழவேண்டிய அவசியமும் இல்லை. ஏனெனில் இலக்கணத்தால் அவை அமைந்தவையும் அல்ல" என்கிறார். இது நவீன இலக்கியம், விமர்சனம் என்பவற்றின் பால் அவரது நோக்கைக்காணப் போதுமானவை எனவே பழமைப் பற்றுடைய கருத்துரைகளாகவே இலக்கியம் பற்றிய இவரது குறிப்புரைகளும் அமைகின்றன.

ஆனால் பின்னவர் பழைமை புதுமை என்பவற்றுக்குப் பாலமாக அமைகின்றார். பழைமையில் உள்ள சிறப்புகளைக் கூறும் அதே வேளையில் புதுமைகளை அறிந்து ஏற்றுப் போற்றுபவராகவே காணப்படுகின்றார். திறனாய்வு தொடர்பாக அவர் எழுதிய கட்டுரை ஒன்றில் 'ஒரு கவிதையிலோ, சிறுகதையிலோ காணக்கூடிய அழகுகளைச் சுவைப்பதும் பிறருக்கு எடுத்துக்காட்டுவதும்தான் திறனாய்வு எனப்பலர் கருதுகின்றனர். இது திறனாய்வுக்கலையின் உறுப்புக்களில் ஒன்றேதவிர இது தான் திறனாய்வு என்று சொல்தற்கு இல்லை" என்று திறனாய்வு தொடர்பான தனது கோட்பாட்டை வெளியிடுகிறார். துரதிட்டவசமாக இவரது எழுத்துக்கள் பரவலாக வெளிவராவிடினும், ஆற்றிய விமர்சன உரைகளும், தலைமை உரைகளும் இவர் மட்டக்களப்பில் விமர்சனத் துறையின் வளர்ச்சிக்கு உதவியுள்ளார் என்பதற்குப் போதுமான சான்றுகளாகும்.

இவர்களை அடுத்து கவிஞர்களாகவும் கதைஞர்களாகவும் தம்மை நிலைப்படுத்திக் கொண்ட பலர் அவ்வப்போது விமர்சனத்திலும் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் தம்மைச் சார்ந்தோரின் நூல்கள் மீதும் அவர் தம் பிரதாபங்கள் மீதும் காட்டிய கரிசனையை இலக்கியத்தின்பாற் காட்டவில்லை. இதனால் இவை வெறும் அபிப்பிராயங்களாக கொள்ளப்பட்டனவே அன்றி விமர்சனமாக அமையவில்லை. எனினும் எம். ஏ. றஹ்மான் சண்முகம் சிவலிங்கம் உமா வரதராஜன் ஆகியோர் கல்முனையிலும், எஸ். பொ. டி. சிவராம், சாருமதி, வீ. ஆனந்தன், செ. யோகராசா சி. மௌனகுரு ஆகியோர் மட்டக்களப்பிலும் விமர்சனத்தைக் காத்திரமாக மேற்கொண்டனர்.

இவர்களிற் பலர் படைப்பாளிகளாக விளங்கிய அதே வேளை விமரிசனத்திலும் ஈடுபட்டனர். கல்முனை

யைக் களமாகக் கொண்டு நிகழ்ந்த இலக்கிய முயற்சிகள் தொடர்பான ஆய்வுகளை மேற் கொள்ளும் எவரும் அங்கு ஆரோக்கியமான இலக்கியங்கள் தோற்றம் பெற்றமைக்கான காரணங் களுள் சிறந்த விமர்சனம் இடம் பெற்ற மையும் ஒன்று என்கின்றனர் இந்த வகையில் புதியவற்றைத் தேடலும், அறிதலும், அறிமுகப்படுத்தலும் அலசல்முறை விமர்சனத்தின் வளர்ச்சி யும் சிறப்பிடம் வகிப்பதை மறுப்பதற் கில்லை. இதில் வியூகம் குழுவினரின் பங்கும் சண்முகம், சிவலிங்கம், எம். ஏ நுஹ்மான் ஆகியோரின் பங்கும் குறிப் பிடத்தக்கவை,

மட்டக்களப்பைக் களமாகக் கொண்டு விமரிசனத்தை அறியவோ விளக்கவோ முற்படும் எவரும் எஸ்பொ வை இருட்டடிப்புச் செய்யவியலாது. "ஒவ்வொரு எழுத்தாளனும் தனது தளத்தில் இருந்து சமூகத்தைத் தரிசிக் கின்றான். இதுவே அவரவர் கோட் பாட்டையும் நிர்ணயிக்கிறது. சொந்த விமர்சனமென்பது விருப்பு வெறுப்புக் களுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும் எனக் கூறும் அவர் மேற் கத்திய விமர்சன அளவு கோல்களை ஈழத்து இலக்கிய விமர்சனங்களுக்குப் பயன் படுத்தியமையைக் கண்டித்தார். "மட்டக்களப்புத் தமிழின் 20ம் நூற் றாண்டுக்கான முனைப்புக்களில் உருபு வாய்ந்த தனி அத்தியாயம்விபுலானந்தர் அவரைத் தொடர்ந்து வந்த பண்டி தர்கள் விபுலானந்தத் தமிழின் வெப் பத்தில் குளிர் காய்ந்தவர்கள்" என்பது இவரது விமர்சனத்துக்கு ஒரு சிறு உதாரணம்.

மட்டக்களப்பின் மற்றொரு விமர் சகராக நிலைத்துள்ள திரு கே. எஸ் சிவகுமாரன் விமர்சனத்தின் திட்ப நுட்பங்களையும் ஆழ அகலங்களையும் அறிந்து முறையியல் சார்ந்த விமர்ச னத்தை மேற் கொள்பவர் ஆவார். தீ ஆட்ஸ்திஸ் வீக், ஆட்ஸ் மகஸின், தீ ஆட்ஸ் ஸீன், விக்டரி குலாட்டர் ஆகிய ஆங்கில வானொலி நிகழ்ச்சிகளி ஈழத்துத் தமிழ் கலை இலக்கியங்க பற்றி விமரிசித்து வரும் இவரது விமர் சனம் சமூகவியற் பார்வை கொண்ட தாக உள்ளது. எனினும் மட்டக்களப்பில் இவரது செயற்பாடுகள் இடம் பெற வில்லை.

Tamil Writting in Srilanka, சிவகு மாரன்கதைகள், கைலாசபதியும் நானும் கலை இலக்கியத் திறனாய்வு என்பன இவரால் எழுதி வெளியிடப்பட்டுள்ள நூல்களாகும். பல்கலைக்கழக கல்வியும் இவர் பின்பற்றுகின்ற இலக்கியக் கோட் பாடும் காத்திரமான திறனாய்வாளர் களுள் ஒருவராக இவரை இனங்காட்டி உள்ளன. எனினும் இவரால் மட்டக் களப்புக்கு ஏற்பட்ட பயன் என்ன? என்பது சிந்திக்கத் தக்கது.

மட்டக்களப்பின் இளைய தலை முறை விமர்சகர்களுள் டி. சிவராம் குறிப்பிடத்தக்கவர் பழந்தமிழ் இலக் கியங்கள் முதல் நவீன இலக்கியங்கள் வரை சகல துறைகளிலும் பரிச்சயம் மிக்க இவரின் ஆங்கிலப் புலமை, சமூகவியற் பார்வை என்பன 80களின் முற்பகுதியில் நடந்த விமரிசன அரங்கு களில் வெளிப்பட்டதை எவரும் மறுக்க வியலாது. திரு. செ. கணேசலிங்கனின் நூல்களுக்கு மட்டக்களப்பு யோகா அகாடமியில் விமர்சனம் நடைபெற்ற போது இதனைக் காண முடிந்தது பின்னர் மட்டக்களப்பு மான்மியம் தொடர்பான இவரது கட்டுரைகள் மலர்களிலும் சஞ்சிகைகளிலும் வெளி வந்துள்ளன. இவையும் இவரது பார்வை யின் தீட்சண்யத்தைக் காண்பனவா கவே உள்ளன. இன்று அரசியல், இராணுவ விமர்சகராக மாறி விட்ட

இவரது கட்டுரைத் தொகுதி யொன்று பிரான்சில் வெளியிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

விமரிசனம் என்பது ஒருவருக் கொருவர் முதுகு சொரிவது என்ற நிலையில் இருந்த காலகட்டத்தில் நுணுக்கமான பார்வையாலும் கூர்மையான மதிநுட்பத்தாலும் தனித்து நோக்கி மார்க்ஸிய அடிப்படையில் நின்று விமர்சனத்தை மேற்கொண்டவர் கவிஞர் சாருமதி.

இவர் நூல் விமர்சனங்கள் சிலவற்றை எழுதியுள்ளதுடன் விமர்சனத் துறைபற்றியும் சில கட்டுரைகள் எழுதியுள்ளார். இலக்கிய வாதிக்கும் வாழ்வுக்கும் இடையேயுள்ள தொடர்பு அவரது படைப்பில் பிரதி பலிக்கும் இலக்கியம் கூறும் செய்தியே பிரதானமானது எனக் கொண்டு தாரதண்பியங்களை எடைபோடத் தயங்காதவர்.

மட்டக்களப்பின் இலக்கியக்களத்தில் விமர்சன இயக்கமொன்றின் உதயம் 1980ல் ஏற்பட்டது. ஆரம்பத்தில் பழந் தமிழ் இலக்கியங்களிலும் பின் நவீன இலக்கியங்களிலும் கவனம் செலுத்திய டி. சிவராமின் முயற்சியினால் ஏற்பட்ட வாசகர் வட்டமே அது. இது மாதம் ஒரு தடவை மட்டக்களப்பு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் கூடி கலை இலக்கிய விமரிசனங்களை மேற்கொண்டதுடன் நூல் அறிமுகம், எழுத்தாளர் அறிமுகம் என்பவற்றையும் மேற்கொண்டமை மட்டக்களப்பின் இலக்கிய வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தவாகும். இந்த இலக்கிய இயக்கத்தின் விமர்சனங்களுக்கு வலுவூட்டியவர் திரு வீ. ஆனந்தன்: உலகியல் யதார்த்தம் இலக்கியத்தின் அடிப்படை எனக் கொண்டு பலவேறு முறைகளையும் அனுசரித்து ஆழமும் அகலமும் வாய்ந்த திறனாய்வுகளை மேற்கொண்டவர் இவர் காலத்திற்கேற்ற வகைகள் அவ்வவ் காலத்திற்கேற்ற ஒழுக்கமும் நூலும் ஞாலம் முழுமைக்கும் ஒன்றாய் எந்த நாளும் நிலைத்திடும் நூலொன்று மில்லை'' எனப் பாரதி உணர்த்தும் கால உணர்வு பற்றிய பிரக்ஞையுடன் விமர்சனத்தை மேற் கொண்டவர் வீ. ஆனந்தன். இவரது வருகை மட்டக் களப்பு இலக்கியத்தின் நோக்கிலும் போக்கிலும் ஏற்படுத்திய தாக்கம் மிக அதிகம்: இன்று பூவரசுகள் கலை இலக்கிய பேரவை என்பனவும் நவீன இலக்கிய நோக்குக் கொண்டனவாய் விமர்சனத்தின்பால் சரிசனை கூடி வருகின்றன. இவர்களுள் கவிஞர் வாசுதேவன் குறிப்பிடத்தக்கவர்

மேலே குறிப்பிடப்பட்டவர்களைத் தவிர திருவாளர்கள் அன்புமணி கிமிலைத்துமிலன், திமிலை மகாலிங்கம் எஸ். எல். எம். கனிபா தங்கன், திருமதி மண்டூர் அசோகா ஆகியவர்களும் இடைக்கிடையே ஆற்றியுள்ள உரைகள் மதிப்புரைகளாகவோ அபிப்பிராய உரைகளாகவோ அமைந்தன. இவர்கள் படைப்பிலக்கியகர்த்தாக்களாகஇருக்கும் அதேவேளை விமர்சனத்திலும் ஈடுபட்டனர். ஆனால் கதைஞர்களாகவோ, கவிஞர்களாகவோ தேறிய அளவுக்கு இவர்கள் தம்மை விமர்சகர்களாக இனம் காட்ட இயலவில்லை.

1994ம் ஆண்டில் தினகரன் பத்திரிகையில் மட்டக்களப்புக்கு என ஒரு பக்கம் ஒதுக்கப்பட்டு ''மீன் பாடும் தேன் னாடு என'' திரு. இரா. துரைரத்தினத்தின் தயாரிப்பில் வெளிவந்தது. இதில் ''தூதுவன்'' எழுதிய கட்டுரைகள் சம்மட்டித்தாக்குதல்கள் போல் நடைமுறை இலக்கிய உலகில் சர்ச்சைகளை உண்டு பண்ணின. இதனால் கண்டனங்களுக்குள்ளான அப்பகுதி வெளிவராமலே தடுக்கப்பட்டது. இது ஒன்றே அதன் தாக்கத்தை அறிந்து கொள்ளப் போதுமானது.

தற்போது திரு. செ. யோகராசா அவர்கள் மட்டக்களப்பு இலக்கியங்கள் பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டு உழைக்கின்றார். இவர் விமர்சனத் துறையில் காத்திரமான பங்களிப்பினை நல்கி வருவதும் வெளிப்படை. விமர்சனக் கட்டுரைகளாகவோ விமர்சன நூல்களாகவோ இல்லாவிடினும் மேடைகளில் இறுக்கமான விமர்சகராக இவர் விளங்குகின்றார்;

இவ்வாறு இங்கு விமர்சனம் என்பது இரசனை முறையானதாகவோ, முதுகு சொறிவதாகவோ கண்டனம் செய்வதாகவோ மட்டுமன்றிக் காத்திரமானதாகவும் அமைந்து வளர்ச்சி கண்டுவருவது எதிர்காலத்தில் நல்ல அறுவடைகளைத் தரும் என்ற நம்பிக்கையை உண்டு பண்ணுகின்றது.


# ஜேசு ரவல்ஸ்
# (JESU TRAVELS)

மட்டக்களப்பு - கொழும்பு
காலை, மாலை, இரவு பஸ் சேவை
மட்டக்களப்பில் ஆசனங்களைப் பதிவு செய்ய

## தயா மோட்டோஸ்

*276 A,* திருமலை வீதி, மட்டுநகர்.
*Fax - 2156,* தொலைபேசி. *065 - 2030, 2156*

கொழும்பில் ஆசனங்களைப் பதிவு செய்ய

## ***HOTEL SOUTH ASIA***

*8,* கீர்த்தி ஒழுங்கை,
*105,* ஒல் கொட் மாவத்தை,
கொழும்பு *- 11.* *T.P. 01 - 423312*

# சிந்திப்போமா?

"நாளைக்கும் நாங்கள் இருப்போமா?"
"ஆமாம், நமக்கென்றோர் வரலாறு இருக்குமானால்"
"வேளைக்கே வீடுவந்து சேர்வம் என்ற
விதிநமக்கு இல்லையையா; இதற்குள்தானா;
பூளைப்பூப் போல்நாங்கள் அள்ளுப்பட்டுப்
போகின்ற சருகுகள் நாம் அலைத்துரும்பு
ஆளைப்பார்; இதற்குள்ளே நாளைவேறா!
அவையெல்லாம் வெறும் கனவு! அழகுக் கானல்".

"கானலைத்தான் மான்நம்பிக் கடிதில்ஓடிக்
களைத்துவிடும், நாங்கள் அந்த மான்களல்ல.
வேனிலைத்தான் எதிர்பார்த்துக் குயில்கள் கூவும்,
வெறும் கூச்சல் போட்டிடநாம் குயில்களல்ல
வானிலையைத் தினம்நோக்கிப் பயிர்கள்வாடும்;
மழைக்காக ஏங்கிடநாம் பயிர்கள் அல்ல
மேனிலைக்காய் விடிவினுக்காய் செந்நீர்ச்சேற்றில்
வித்திட்ட உயிர்க்கனலின் வயிரக்கால்கள்"

"கால்வைக்க இடமில்லை; எங்கும்வேலி;
கடித்துமிழும் வெறிநாய்கள், கழுகின்பாய்ச்சல்:
வேல்பாய்ந்த புண்ணுக்குள் நெருப்புகோல்கள்,
மின்னாமல் முழங்காமல் இடியின் வீழ்ச்சி,
நால்திசையும் முள்நெருக்கம் நடுவில் நாங்கள்;
நடுநடுங்கும் அடிமைகளாய் நாளும் சாவு;
கால்பாய்ச்சும் உயிர்க்கனலின் வயிரம்; என்ன
கதையையா? காதினில்ஏன் பூவைக்கின்றீர்"

"பூவைப்பார்; ஒரேநாள்தான் அதன்மலர்ச்சி
பூமிக்குள் மீண்டும்அது புதைந்து போகும்.
ஆவைப்பார், அதுமேயும் புற்களுக்கு
அதன்எருவே பசளைதரும் அருக்கன்என்ற
கோவைப்பார், அவன்மறைந்த பின்தான் சோதி
கொழுத்தவரும் உதயமென்ற விடிவுதோன்றும்
சாவைப்பார் அதன்பிறகே புதுப்பிறப்பு!
சஞ்சலமேன், புடம்போடல் தங்கத்துக்கே."

'தங்கத்தைப் புடம்போடல், அதுஇதென்ற
தத்துவங்கள் நமக்கிங்கு சரிப்படாது.
வங்கத்தைக் கடைந்தெடுத்த அமுதம்வந்து
வாழ்வளிக்க மாட்டாது எங்களுக்கு
எங்களுக்கு நிம்மதியும், சஞ்சலங்கள்
இல்லாத புதுவாழ்வும் இனிதுவேண்டும்.
பொங்குமிந்தப் புத்தாண்டு வளம் அனைத்தும்
பூத்திடற்குச் செயல்வேண்டும் பூதலத்தே...''

"புத்தாண்டு புதுமையெலாம் பொலியுமானால்
பூரிப்பு நமக்கும்தான். ஆனால் எங்கள்
சித்தாந்தம் சாத்தியமா? கறைப்படாத
சீரியராய் ஏற்பவர்யார்? ஏற்றிட்டாலும்
அத்தனையும் கிடைத்திடுமா? நம்மைநாமே
அணிசெய்யும் நாள்வருமா? ஊழிதோறும்
கொத்தடிமை யாவதிலும் எதுமேல் என்று
கொஞ்சம் - ஒருகணமேனும் சிந்திப்போமா?

- திமிலைத்துமிலன் -


குறித்த நிறையில் குறிப்பிட்ட விலையில்
தரமான மிட்சுயி சீமெந்து
தாராளமாகக் கிடைக்கும்

பிரசாந்தி ஏஜன்ற்
திருமலை வீதி, மட்டக்களப்பு
065-2732, 2335

பங்காளிகள்:- R.J. மனோறஞ்சனி
P. சத்தியமூர்த்தி (ராஜன்)

* விவசாய திணைக்களத்தின் விதை நெல்
* மரக்கறி வகைகள்
* பழமரக் கன்றுகள்
* உரக் கூட்டுத்தாபனத்தின் உரவகைகள்

மற்றும்

* விவசாய கிருமி நாசினிகள்
* நல்லினக் கோழிக்குஞ்சுகளும் தேவையான மருந்து வகைகளும்

எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

# AGRO CENTRE

**Dealers for Lak Krushi Beeja No.** *GO/3/63/610*
(Dept of Agriculture)

*Prop:* V. GOPALAPILLAI

*No.61 Munai Street,*
*BATTICALOA.*

WITH BEST COMPLIMENTS
FROM

# Eswary Enterprises

**Agency Post Office**

*No: 2, Lloyds Avenue,*
*BATTICALOA.*

*T.P:* **4304**
**Fax: 4305**

WITH BEST COMPLIMENTS
FROM

# LAVANIYA
# MOTOR STORES

Dealers in: Bajaj and Motor Cycle Spares

*176, Trinco Road,*
*BATTICALOA.*

# கிழக்கிலங்கையில் சுவாமி விபுலானந்தரின் பாடசாலைக் கல்விப் பணிகள்

- ஏ. எஸ். யோகராஜா

இருபதாம் நூற்றாண்டில் இலங்கையில் தோன்றிய கல்விச்சிந்தனையாளர் வரிசையில் தமக்கென ஒரு தனியிடத்தைப் பெறும் விபுலானந்த அடிகள் இலங்கையின் கல்வி வரலாற்றில்,குறிப்பாக கிழக்கிலங்கை வரலாற்றில் மறக்கவொணாத் தொண்டராக விளங்குகின்றார். கல்விச்சிந்தனையாளர் என்ற வகையில் அன்னாரை ஆராய்வோரும், கருதுவோரும் குறைவாகவே இருந்து வருகின்றனர். தமிழ் அறிஞர் என்றே இவரைப் பொதுவாகப் போற்றிப் பாராட்டுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. தமிழுடன் இணைந்ததாகவும் கலந்ததாகவும் இருக்கும் விபுலாநந்த அடிகளின் கல்விக்கருத்துக்களையும், சிந்தனைகளையும் பிரித்தாராய்ந்து அவற்றின் சிறப்புகளை நோக்குவோர் அண்மைக்காலத்தில் ஓரளவு காணப்படுகின்றனர்.

துறவு வாழ்க்கைக்கு முன்னரும் அதன் பின்னரும்; விபுலாநந்த அடிகளின் சிந்தனை செயல் யாவும் பெரும்பாலும் கல்வித்துறையுடனும்,கல்வித் தொண்டுகளுடனும் ஒன்றித்தனவாக அமைந்திருந்தமையைக் காணமுடிகின்றது. ஆசிரியர் பதவியுடன் ஆரம்பமாகிய அன்னாரது கல்விப்பணி, அதிபர், பாடசாலை முகாமையாளர் போன்ற பதவிகளினூடாகப் பரவிப்பரந்து எழுத்தாளர், பதிப்பாளர், பத்திரிகையாசிரியர் போன்ற பதவிகளால் விரிவாக்கமடைந்து பேராசிரியர் பதவிகள் மூலம் மேலும் நிறைவாக்கம் பெற்றது. விபுலாநந்த அடிகளது கல்விப்பணிகள் இராமகிருஷ்ண சங்கப்பள்ளிக்கூடங்களைப் பொறுப்பேற்ற காலம்முதல், இந்நாட்டின் கல்வி வளர்ச்சியில், குறிப்பாகக் கிழக்கிலங்கையின் கல்வி வரலாற்றில் அடிகளது சேவை முத்திரை ஆழமாகப்பதிக்கப்பட்டுள்ளது.

துறவு வாழ்க்கைக்கு முன்னர் விபுலாநந்த அடிகள் தனது சொந்த கல்வியையும் அறிவையும் வளர்ச்சியடையச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டதுடன் ஆசிரியர் என்ற முறையில் அதற்கான பொறுப்புணர்வுடன், கடமைகளையும் செவ்வனே செய்து வந்தார். 1909 - 1910ம் ஆண்டுகளில் மட்டக்களப்பு அர்ச். மிக்கேல் கல்லூரி, 1911ல் கல்முனை கத்தோலிக்க பாடசாலை, 1911 –1912ல் ஆசிரிய பயிற்சியின் பின்னர் 1913 – 1914ல் மீண்டும் அர்ச். மிக்கேல் கல்லூரி, 1915, 1916ல் இலங்கையின் அரசினர் தொழில் நுட்பக் கல்லூரியில் விஞ்ஞானப் பயிற்சியின் பின்னர், 1917ல் கொழும்பு அரசினர் கல்லூரி 1917 – 1920ல் யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி போன்றவற்றில் ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார். இவ்வாறாக 1920ம் ஆண்டுவரை அடிகளின் கல்விப்பணி ஆசிரியத் தொழிலுடன் தொடர்புடையதாக விரிவுறாத ஆரம்ப நிலையில் இருந்ததென்றே கொள்ளுதல் வேண்டும்.

1922ம் ஆண்டின் பின்னர் விபுலாநந்த அடிகளுக்குமேலும் விரிவான வகையில் கல்வித் தொண்டுகள் ஆற்றுவதற்கு ஏற்ற சூழ்நிலையும் சந்தர்ப்பமும் பெருமளவு வாய்க்கப் பெறலாயிற்று. இராமகிருஷ்ண இயக்கத்தில்

இவர் கொண்ட ஈடுபாடு காரணமாக துறவு பூண்டு விபுலாநந்த அடிகள் என்னும் நாமம் பெற்று பிரமச்சாரிய வாழ்க்கையை மேற் கொண்ட காலத்திலிருந்து சமூக சேவையில் ஈடுபாடும், கல்விப் பணியுமே அவரது வாழ்க்கையாக அமைந்திருந்தது.

1903ம் ஆண்டளவில் கொழும்பு, யாழ்ப்பாணம், மானிப்பாய், மாத்தளை திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற இடங்களில் விவேகாநந்த சபைகள் நிறுவப்பட்டன. இவை இந்து சமய விழிப்புணர்வையும் இந்து கலாசார கல்வியையும் அளிக்கும் நிலையங்களாகச் செயற்பட்டன. இவற்றோடு தொடர்பும் ஈடுபாடும் கொண்டிருந்த விபுலாநந்த அடிகளின் கல்விப் புலமையை நன்கறிந்து கொண்ட இராமகிருஷ்ண சங்க இயக்க நிருவாகம் இலங்கையில் உள்ள அவ்வியக்கத்தின் பள்ளிக் கூடங்களை ஏற்று நிருவகிக்கும் மிக முக்கியமான முகாமையாளர் பொறுப்பை 1925ம் ஆண்டு விபுலாநந்த அடிகளிடம் ஒப்படைத்தது. 1925 — 1930ம் ஆண்டு வரை இப் பள்ளிக் கூடங்களின் முகாமையாளராகக் கடமையாற்றி கிழக்கிலங்கை பாடசாலைக் கல்வி வளர்ச்சிக்கு அரும் பெரும் பணியாற்றினார்.

1925ம் ஆண்டு திருகோணமலையில் இராமகிருஷ்ண ஆச்சிரமம் தொடங்கப்பட்டதைத் தொடர்ந்து இப்பிரதேசத்தில் இந்து சமயப் பின்னணியில் இந்து மாணவர் கல்வி கற்பதற்கு வழிவகுக்கப்பட்டது. இதே ஆண்டில் திருகோணமலை இந்து ஆண்கள் ஆரம்பப்பள்ளிக் கூடத்தின் நிர்வாகப் பொறுப்பையும் அதைத் தொடர்ந்து திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா வித்தியாலயத்தையும் அடிகள் பொறுப்பேற்றார். ஸ்ரீகோணேஸ்வரா வித்தியாலயம் என்ற பெயரையும் அடிகளே சூட்டினார். திருகோணமலையிலே பாடல் பெற்ற தலமாக விளங்கும் திருக்கோணேஸ்வரம் சார்பாக அடிகள் சூட்டிய இப்பெயர் மிகப் பொருத்தமானதாகும். இன்று இப் பாடசாலை திருக்கோணமலை மாவட்டத்திலேயுள்ள பாடசாலைகளில் மிகத் தரமான சிறப்புள்ள பாடசாலையாக மிளிர்கிறது. அன்றிலிருந்து திட்டமிட்டுச் செயலாற்றி பல முயற்சிகளை மேற்கொண்டு அடிகளிட்ட அத்திபாரமே இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது.

விபுலாநந்த அடிகளின் திருகோணமலை வருகையின் பின்னர் அவரது கல்விப் புலமையாலும் அயரா உழைப்பினாலும் இராமகிருஷ்ண தத்துவத்தாலும் கவரப்பட்ட இந்து மக்கள் — இந்துக் கல்லூரியின் முகாமையை இராமகிருஷ்ணசங்கத்திடம் ஒப்படைக்க முடிவெடுத்தனர். இதைத் தொடர்ந்து சுவாமி விபுலாநந்தரின் நேரடி மேற்பார்வையின் கீழ் இப்பாடசாலை வளர்ச்சி காணத் தொடங்கியது. 1925ம் ஆண்டு நவம்பர் மாதம் இங்கு ஆங்கிலக்கல்லூரிக்கான அத்திவாரக் கல் நாட்டப்பட்டது. 1928 ம் ஆண்டு ஆனி தொடக்கம் 1930 ம் ஆண்டு ஆடி வரையுள்ள காலப்பகுதியில் இக்கல்லூரியின் அதிபராகவுமிருந்து பல கட்டிடங்களைக் கட்டியும் மாணவர் தொகையை அதிகரித்தும் தகுதியான ஆசிரியர்களை நியமித்தும் தொண்டாற்றினார். திருகோணமலை இந்துக்கல்லூரிக்கு புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களை 1926 ம் ஆண்டு ஆனி மாதத்தில் தலைமைத் தமிழ்ப் பண்டிதராக விபுலாநந்த அடிகள் நியமனம் செய்தார். அடிகள் செய்த இப் பொருத்தமான நியமனம் புலவர் மணியின் தமிழ்த் தொண்டினை திருகோணமலைப் பகுதி மக்களும் பெறக் கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தியதனையும் மறக்கவியலாது.

விபுலாநந்த அடிகள் மட்டக்களப்பில் ஆங்காங்கே பல இடங்களிலும், சிறப்பாக கிராமப் புறங்களின் ஆரம்பக்

கல்வி அபிவிருத்தியிலும் பெண் கல்வியிலும் இராமகிருஷ்ண சங்க இயக்கத்தினூடாக பெரும் தொண்டாற்றியுள்ளார். 1925ம் ஆண்டு மே மாதத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்த காரைதீவு, மண்டூர், ஆரைப்பற்றை ஈச்சந்திவு, ஆனைப்பந்தி ஆகிய ஐந்து பாடசாலைகளை ஏற்று நடத்தும் பொறுப்பும் அடிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. கல்லடி உப்போடை உயர்தர பெண்கள் பாடசாலை அடிகள் எடுத்துக் கொண்ட முயற்சியினால் 1926ம் ஆண்டு மாசி மாதம் இராமகிருஷ்ண சங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டது. முறக்கொட்டாஞ்சேனை ஸ்ரீகணேசானந்த வித்தியாலயத்தை அடிகள் 1927ம் ஆண்டு இராமகிருஷ்ண சங்கச்சார்பில் பொறுப்பேற்றுக் கொண்டார். இதே போல அக்காலத்தில்தமிழ்க்கிராமங்கள் பலவற்றிலும் சைவப் பாடசாலைகளின் பரிபாலனத்தை கையேற்று நடத்திக் கொண்டிருந்தார். 1927ல் கல்முனை இந்து வாலிபர் சங்கத்தால் அமைக்கப்பட்ட மடாலயத்தை 1936ல் 50 மேற்பட்ட குழந்தைகளும் ஓர் ஆசிரியரும் கொண்ட கல்விச் சாலையாக ஆரம்பித்து வைத்தார். மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலைப் பகுதியில் 1934ல் தான்தோன்றியார் கோயிற் பூசகர் அமைத்த தற்காலிகக் கட்டிட பள்ளிக்கூடம் பதிவு செய்யப்படாது அரசின் நன்கொடை பெறாது கஷ்டமுற்ற காலத்தில் விபுலாநந்த அடிகள் இப்பள்ளிக் கூடத்தைப் பதிவு செய்வதற்கு தம்மாலான முயற்சிகளை மேற்கொண்டு அதனை இராமகிருஷ்ண சங்கப் பாடசாலையாகப் பொறுப்பேற்று நடத்தி 1937ல் அது பதிவு செய்யப்படகூடியதாக அமைந்தார்.

1925ம் ஆண்டு ஐப்பசிமாதம் 28ந் திகதி புதன்கிழமை காரைதீவு சாரதா வித்தியாலயத்திற்கு அத்திவாரக்கல் அடிகளால் நாட்டப்பட்டது. தான் பிறந்த ஊரில் பெண்கள் கல்வியின் அவசியத்தை உணர்ந்தே இதனை மேற்கொண்டார். இதே வருடம் சித்திரைமாதம் மட்டக்களப்பில் ஆங்கிலக் கலாசாலையொன்று ஏற்படுத்துவது பற்றி ஆலோசிக்கக் கல்லடி உப்போடையில் ஒரு மகாசபையைக் கூட்டினார். — இதன் பிரதிபலிப்பாக கார்த்திகைமாதம் 6ந் திகதி வெள்ளிக்கிழமை கல்லடி உப்போடையில் சிவாநந்த வித்தியாலயத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. அடிகளின் கல்வித் தொண்டிற்கு என்றும் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவது இவ்வித்தியாலயமே.

வெறும் மணல் வெளியாகவும் காயான் பற்றைக்காடாகவும் காணப்பட்ட இடத்தை கவிஞர் தாகூரின் ''சாந்தினிகேதன்'' போன்று மட்டக்களப்பில் சிவாநந்த வித்தியாலயமாக ஆக்கியளித்த பெருமை சுவாமி விபுலாநந்தருக்குண்டு. அன்றைய நிலையில் ஆங்கிலக்கல்வி கற்பதற்காக மதம் மாற வேண்டிய சூழ்நிலையில் தம் தனித்துவமான கலாசாரத்திற்குப் பாதிப்புக்களை உருவாக்கக்கூடிய துர்ப்பாக்கிய நிலையில், அவதியுற்ற இந்துக்களுக்கென ஆங்கிலக்கல்வியின் அவசியத்தை அடிகள் நன்குணர்ந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலானார். அந்நிய சமயத்திற்கு மாறாமலும் தம் சொந்த பண்பாட்டுப் பாரம்பரியங்களை மீறாமலும் ஆங்கிலக்கல்வியறிவைப் பெற சிவாநந்த வித்தியாலயம் மட்டக்களப்பிலும், இந்துக்கல்லூரி திருகோணமலையிலும் அமையவேண்டுமென்பதில் கூடிய கவனம் காட்டினார். அடிகள் தனியே இந்துத்தமிழ் மக்களுக்கென இவ்வித்தியாலயங்களை அமைக்காது இனவொற்றுமை நோக்கில் இஸ்லாமிய சகோதரர்களும் இங்கு கல்வி கற்பதற்கான வழிகளனைத்தையும் ஏற்படுத்தியிருந்தமையும் கவனிக்கத்தக்கதாகும். சிவாநந்த வித்தியாலயம் பூரணத்துவம் பெற்று பயனுடைத்தக்கதாக 1930ல் சிவாநந்த வித்தியாலயத்துடன் இணைந்த வசிப்பிட

விடுதியாக மாணவரில்லம் ஒன்று அமைக்கப்பட்டது. இவ்வில்லம் இன்று வரை ஏறத்தாழ நூற்றுக்கு மேற்பட்ட அநாதை மாணவர்களது கல்வித்தேவைகளையும் வாழ்க்கை வசதிகளையும் அமைக்கும் புனித இல்லமாக மிளிர்ந்து வருகிறது:

சிவாநந்தவித்தியாலயத்தில் சுவாமி விபுலாநந்தர் அமைத்த பயிற்சி வகுப்புக்கள், கற்பித்தல் முறைகள், சங்கீத வகுப்புக்கள், சமயவகுப்புக்கள், யோகாசனப் பயிற்சிகள் இன்றும்கூட சிறந்த எடுத்துகாட்டாகவுள்ளன. இவற்றின் மூலம் மாணவர் உளவிருத்தியும், உடல் விருத்தியும், ஆன்மீக விருத்தியும் பெற்று சமூகவாழ்க்கைக்கேற்ற முறையில் தயார் செய்யப்பட்டார்கள். மனிதனை பூரணத்துவமாக உருவாக்கும் கல்வியே இவ்வித்தியாலயத்தின் அடிநாதமாக அமைய வேண்டுமென்பதே அவரது கருத்தாகவுமிருந்தது.

இவ்வாறாக இராமகிருஷ்ண தத்துவத்தால் உந்தப்பட்ட விபுலாநந்த அடிகளது வாழ்க்கை இலட்சியமாக மக்கள் சேவையே முக்கியம் பெற்று விளங்கியது இராமகிருஷ்ண தத்துவத்தின் சமரச நெறியையும், பாரதி காட்டிய சமூக நீதியையும், சமதர்ம நெறியையும் தமிழோடு கலந்திருந்த அவரது கல்விச் சிந்தனைகள் தொண்டுகளினூடாக கிழக்கிலங்கையில் மட்டுமன்றி முழு இலங்கையிலும் பாரதத்திலும் அடிகள் பாயச் செய்தார்.


With Best Compliments
From

**AL-MADEENA**

*No. 36, Bazaar Street,*
*BATTICALOA.*
065-2445

அழகிற் சிறந்த தங்க
நகைகளுக்கு

**சண்முகா**
ஜுவலரி

இல. 41A, பிரதான வீதி,
மட்டக்களப்பு.

# மகிமை மிகு மட்டக்களப்பு

மட்டக்களப்பென்னும் மாண்புமிகு நாடு
எட்டுத்திசைகளிலும் ஏற்றம் பெறுநாடு.
பட்டிப்பசுக்களிலே பால்சுரந்து ஓடி
கட்டித்தயிர் மலிந்து களிப்பூட்டும் நாடு.

இந்துவும் முஸ்லிமும் இணையாகக் கிறிஸ்தவரும்
சொந்தங்கள் கூறிச் சேர்ந்த திருநாடு.
கந்தையா வீட்டில் காசிம் விருந்துண்ண
கபரியேல் வருவான் கலந்துசுவை ஊட்ட,

வைகாசிப் பூரணையில் வார்குழலாள் கண்ணகிக்கு
அம்மானைபாடி, ஆடிச்சடங்கு வைத்தும்,
கொம்புமுறித்தும், குதூகலித்தும், தாம் மகிழும்
பெருமைகள் கொண்டமட்டக் களப்பெங்கள் நாடு

நறுந்தேனைச் சொட்டுகின்ற நற்காவில் மந்தியினம்
தெரிந்துகனி புசிக்கின்ற செழுமைமிகு நாடு.
விரிந்து மலர் சிதற பாலை வெடிக்கும்
இளம் தென்னஞ் சோலைகளால் செழுமை பெறும்நாடு.

பன்பாயும் முந்திரிப் பருப்பும் சுவைமிக்க
பலாவின் பழமும், பசும்கீரை, கத்தரிக்காய்,
வெற்றிலைக்கும், இறாலுக்கும் விரும்பிப்பலர் வருகின்ற
இந்நாட்டின் புகழ் கூற என்னால முடியாது.

அன்னையரின் அன்பான தாலாட்டுப் பாடல்களும்
வெண்ணிலவைக் காட்டி உணவூட்டும் கதைப்பாடல்களும்
கன்னியர்கள் ஊஞ்சல் உதைத்துப் பாடுகின்ற இசைப்பாடல்களும்
இன்னும் ஒலித்துக் கொண்டிருக்கிறது இனியதிருநாட்டில்

**சி. சிவகாந்தன்**
மட்/சிவானந்தா தேசிய பாடசாலை.
பாடசாலை மட்டப்போட்டியில் முதலாம் இடம் பெற்ற கவிதை.

அழகிற் சிறந்த தங்க
நகைகளுக்கு

நம்பிக்கையான இடம்

# ஆர்த்தி
ஜுவலர்ஸ்

இல. 22, மெயின் வீதி,
மட்டக்களப்பு.
065-2305

WITH BEST COMPLIMENTS
FROM

# AHILA HARDWARE
Dealers in D.I.C. Paints,
Building Material Suppliers

**16, Station Rd,**
**BATTICALOA.**

*T.P. 065-2784*

WITH BEST COMPLIMENTS
FROM

# TIP - TOP

**No. 4, Main Street,**
**BATTICALOA**

**T. P. 065-2221**

*WITH BEST COMPLIMENTS*
*FROM.*

# Singing Fish Restaurant
*COMFORT ATMOSPHERE &*
*PERSONALISED SERVICE*

**110, Bazaar Street,**
**Batticaloa.**

# மட்டக்களப்பு மண்ணின் மகத்துவம்

பொன்னொளி வேந்தன் பூமிக்கு இருளெனும் இரணியனை அகற்ற உதித்தருளும் கிழக்குத்திசையிலே நீலக்கடல் அலைகள் ஆர்ப்பரித்து எழுந்து தலை தடவ செய்யும் அற்புதம் நிகழ்வது இம் மட்டுமா நகரிலேயாம் '' எட்டுத்திசையுள்ளும் எத்திசை முதலிடம் என்னின் கிழக்குதிசையேதாம் நான்கண்ட பொற்றிசை '' என கவிஞர் கண்ணதாசனும் கிழக்கினது பெருமையை குன்றிலிட்ட தீபமதாய் விபரித்துக் காட்டுகிறார். வானுயர்ந்த தென்னமரங்களின் தலை முடிகளைக்கலைப்பது போல் வாசமுடன் வீசும்தென்றல் தலைதடவிச் செல்லும் இன்பம் இங்கு விட்டால் எங்கு கிடைக்கும்.

ஆதி கால புராண இலக்கிய, இதிகாசங்களிலேயும் இப்புகழ்பூத்த நாட்டிற்கு பொன்மகுடம் அணிவிக்கப்பட்டுள்ளதை இராமாயணம் மூலம் அறிந்து கொள்ளலாம். இராமபிரான் சிவலிங்கத்தைப் பூஜை செய்ய நேரம்கடந்த போது மண்ணாலே லிங்கம் அமைத்து மகேஸ்வரனைவழிபட்டதும்இம்மண்ணிலேதான். இராம பெருமானது கைப்பட்டப்பிடித்த சிவலிங்கத்தை உள்ளடக்கிய கோயில் உள்ளதும் இம் மண்ணேதாம். ''வாரை வேகன் அனுமான் இராவணனது தலைநகரை தீக்கிரையாக்கிவிட்டு எரிந்து கொண்டிருந்த வாலை இங்குள்ள மாமாங்கப்புண்ணிய தலத்திலே அணைத்ததற்குக்காரணம் இலங்காபுரியிலேயே புண்ணிய பூமி இதுதான் என்பதற்கேயாம்.

பாரத தேசத்து புண்ணியதலங்களில் எல்லாம் ஜலம் சேகரித்து மட்டு மாநகரின் மாமாங்கத்தலத்தில் ஊற்றினாரே ஒரு முனிவர் அப்புண்ணிய தலங்கள் அனைத்தையும் அடக்கிய ஒரே ஒரு தலமும் இதுதான். இது இருப்பதும் இங்கேதான் என்பதும் எமக்குப்புகழல்ல, எம் மட்டுமாநகரம் எனுந்தாய்களித்த பெருங்கொடை.

இந்தியாவிலே அண்ணாநகர்ப்பல்கலைக் கழகத்திலேயும் முதல் தமிழ் பேராசிரியராகி தமிழ்க்குலத்திற்கே பெருமை எனும் மாலை அணிவித்த விபுலானந்த அடிகளும் இம்மண்ணின் புதல்வனே. மண்டூர்க் கந்தனது பெருமைகளை விளக்கிய,'' மக்களுக்கு கடவுளின் புனிதம்பற்றி உணர்த்திய புலவர் பெரியதம்பிப்பிள்ளைகூட இம்மண்ணின் ஓர் புத்திரனே.

ஆங்கிலேயர்கள் நமது நாட்டை விட்டுப்பிரியும் போது தளபதியாக இருந்த அலென் என்பவர் '' இலங்கையில் இருந்து போவதற்காகக் கவலைப்படவில்லை. அழகிய சொர்க்கமான மட்டக்களப்பைப் பிரிவதுதான் முடியாத ஓர் காரியமாக உள்ளது'' என்கிறார். ஒரு ஆங்கிலேயனுக்கு ஒரு விருப்பை ஏற்படுத்தியது நமது கலாச்சாரமும் பண்புந்தான் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

வில்லிலே பறக்கும்அம்பைப்போலுள்ள இனங்களை ஈரமாக்குவோம். ஒவ்வொரு ஏவுகணையிலும் மட்டக்களப்பு மண்ணின்புகழ்தனைவேற்றுலகமும் அறியவிண்ணுக்கு ஏவுவோம். ஓர் தாய் மக்கள் நாம் என்பதை உணர்ந்து மட்டக்களப்பு மண்ணின் மகத்துவம் பேணதோளோடுதோள் நின்று பெருமை காப்போம். இதுவரை காத்தபண்பை கலாச்சாரத்தை உலகம் அழியும் வரையும் காப்பாற்றுவோம். ஓர் தாய் மக்களைப்போல ஒன்றிணைந்திடுவோம் இனங்கள் வெவ்வேறென்றில்லை. மட்டுமண்ணின் புதல்வர்கள் நாம்.

வாழ்க மட்டுமண்மாதா! வளர்க மண்புகழ்!

தர்மசுந்தரம்துஷ்யந்தன்
மட்/மெதடிஸ்த மத்தியகல்லூரி மட்டக்களப்பு.
(பாடசாலை மட்டப்போட்டியில் முதலாம் இடம்பெற்றகட்டுரை)

WITH BEST COMPLIMENTS
FROM

**S.S.M. Cholukkars&Bros**

GOVERNMENT SUPPLIERS
GENERAL HARDWARE &
BRASSWARE MERCHANTS.

☎ 065-2755
065-4788
Fax: 4788

**72, 76, 78, Bazaar Street,**
**BATTICALOA.**

WITH BEST COMPLIMENTS
FROM

**R. KONESWARAN**

**S.A. Selvanayagam & Sons**

**Dealers for**
Ceylon Petroleum Corporation

*126, Trinco Road*
*BATTICALOA.*

சிறந்த முறையில், குறைந்த
கட்டணத்தில், குறுகிய காலத்தில்
மும்மொழிகளிலும் அச்சிட்டு
பெற்றுக்கொள்ள

**சென்். செபஸ்தியார்**
**அச்சகம்**

*C T.B பஸ் நிலைய முன்பாக*
*மட்டக்களப்பு.*

**திருமண வைபவங்கட்கு**
❀ மணமகன் தலைப்பாக்கள்
❀ மணமகள் சோடனைகள்

**22Kt.** தங்க
ஆபரண நகைகட்கும்
நாட வேண்டிய ஸ்தாபனம்

**சிவா**

தங்க நகை மாளிகை

***SIVA JEWELLERY***
69 *A. Main Street,*
*BATTICALOA.*

பரிசு பெற்ற கவிதை

# காத்திருப்பேன்.........

அன்புள்ள மாமி பெற்ற
அழகு நிறை எந்தனத்தான்
உங்களன்புப் பாறிமச்சாள்
நானெழுதும் கடிதமிது,
அறுவடைக்குப் பின்நமக்கு
திருமணமாம் சித்திரையில்
அம்மாச்சி சொன்னவராம்
அதனாலே எழுதுகின்றேன்

பட்டியிலே வள்ளிப்பசு
போட்டதொரு கன்றுநாம்பன்
நாம்பனுக்கு உங்கள்பெயர்
நான்வைத்துக் கூப்பிடுறேன்;
வட்டியடி வைரவர்க்கு
வருந்திங்கட் கிழமைபொங்கல்
கரத்தைகட்டிப் போகின்றோம்
கையோடு வந்திடுங்க.

மத்தளமும் கூத்தென்றும்
மத்தியிலே களரிகட்டி
சித்திரைக்கு நம்மூரில்
சரியான முசுப்பாத்தி;
பவுர்ணமிக்கு சலங்கைகட்டு
பரியாரி குடிப்பூசை;
வாளவீமன் கூத்துக்கு
அண்ணாவி, நல்லதம்பி.

களமொழிஞ்சி வீடெல்லாம்
அட்டியிலே நெல்புரையும்,
இளவட்டம் நிலவினிலே
கிளித்தட்டு விளையாடும்,
முச்சந்திப் புளியையிலே
ஊஞ்சல்கட்டி ஊராடும்,
சித்திரையும் நெருங்குவதால்
சேர்ந்தாப்போல் வந்திடுங்க

பெரியப்பா செல் விழுந்து
பெரியாஸ்பத்தி ரிவாட்டில்
மூத்தம்மான் சந்தியிலும்
புதிதாக ஒரு 'சென்றி'
மாரியம்மன் பூசாரி
ஆமிசுட்டுச் செத்துப்போனார்
மறக்காம கையோட
'ஐடின்டி' கொண்டுவாங்க

பாட்டியுடன் பால்கறந்து
சட்டியிலே நெய்யுருக்கி
சுட்டபணி யாரம்நல்ல
அரியதரம் சோகியென்று
வட்டியிலே இலைபோட்டு
வெல்லத்தில் பாகுமிட்டு
கட்டித் தயிர்போலக்
காத்திருப்பேன் வந்திடுங்க.

அ. ச. பாய்வா
513/21, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

(திறந்த போட்டியில் முதலாம் இடம் பெற்ற கவிதை)

# மட்டக்களப்பில் ஓவியக்கலை

- பவான் -

அழகு நிறைந்த ஓவியக்கலை மட்டக்களப்பைப் பொறுத்தவரையில் மிகவும் பழமையான பாரம் பரியத்தைக் கொண்டதாகும். இதன் சிறப்பினை முந்திய காலங்களில் கோயில்களின் திரைச் சேலைகளில் அதிகமாகக் காணக்கூடியதாகவிருந்தது. அத்தோடு பாடசாலைகளில் சித்திரம் வரைவதற்கான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு மாணவர்களுக்கு ஒரு பாடமாக கற்பிக்கப்பட்டு வந்தது இருப்பினும் இந்தப் பாடத்திற்கான ஆர்வம் மாணவரிடையே மந்தமான நிலையிலேயே இருந்து வந்துள்ளது. சித்திர ஆசிரியர்களில் காலஞ்சென்ற திரு. அருளானந்தம், திரு. நல்லையா திரு. இராஜேந்திரம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களை விடவும் பலசித்திர ஆசிரியர்கள் மட்டக்களப்பில் பணி புரிந்தவர்கள் என்பதும் நினைவு கூரத்தக்கது.

இது தவிர நாட்டுக்கூத்து ஒப்பனையாளர்கள் அதற்கான அணிகலன்களைத் தயாரிப்பதற்கு ஆரம்பத்தில் அவைகளின் வடிவங்களைக் கற்பனையில் ஓரளவு வரைந்த பின்னரே வடிவமைத்து வந்துள்ளனர்.

மேற்கண்ட வகைகளிலிருந்து சற்றுவேறுபட்ட அதேவேளை அதிகமான ஓவியங்கள் மட்டக்களப்பை பொறுத்த மட்டில் தொழில் ரீதியான விளம்பர ஓவியங்களே என்பதைக் குறிப்பிட வேண்டும். இந்த வகையினில் சிவலிங்கம், மணியம், செல்வம், ஜெயா, சோமு, கந்தசாமி ஜனராஜா, கைலாஸ், பாஸ்கர், பாலன், ரவி, தம்பி இப்படி அதிகமான ஓவியர்களைக் குறிப்பிடலாம் இதில் சில ஓவியர்கள் திரைச்சேலைகள் அவ்வப்போது வரைவதுமுண்டு.

அடுத்தவகையான அட்டைப் பட ஓவியத்தை எடுத்துக் கொண்டால் திரு. சிவதாசன் அவர்களால் ஆரம்பித்து செயற்பட்ட உதயம் நிறுவனம் இவ்வகை ஓவியர்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்ததைக் குறிப்பிடலாம். ஒரு சில ஓவியர்களே (டாக்டர் வேலாயுதம்பிள்ளை அவர்களும் அடங்குவர்) 'தங்களின் திறமைகளை இதுவரையிலும் வெளிப்படுத்தியிருப்பதால், எதிர் காலத்தில் நன்குபயிற்சிபெற்ற ஓவியர்கள் அவசியம் தேவை என்பதைக் கருத்தில் கொண்டு வளர்ந்து வருகின்ற இன்றைய இளம் ஓவியர்கள் அதற்கான முயற்சிகளை

மேற்கொள்ளவேண்டியது வரவேற்கத்தக்கதாகும்.

ஓவியக் கண்காட்சிகள் மட்டக்களப்பில் சில நடந்தபோதிலும், ஓவியரசனையுள்ளவர்கள் மத்தியில் அக்கண்காட்சிகள் குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை என்றே கூறவேண்டும். கிழக்குப்பல்கலைக்கழக விரிவுரையாளர் செல்வி அருந்ததி அவர்கள் சில நவீன ஓவியக்கண்காட்சிகளை நடாத்தினார். கிழக்குப்பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியிலேயே அதன் பயன் உணரப்பட்டது என்பதையும் குறிப்பிடவேண்டும்.

ஓவியக்கண்காட்சி ஒன்றினைச் சென்ற வருடத்தில் நடாத்துவதற்காக மட்டக்களப்பைச் சேர்ந்த பிரபல ஓவியஆசிரியர் திரு. கமலச்சந்திரன் அவர்கள் முயற்சிகள் மேற்கொண்டது பாராட்டுவதற்கு உரியதாகும். எனினும் இக்கண்காட்சி தவிர்க்கமுடியாத சிலகாரணங்களினால் நடாத்தப்படவில்லை இருப்பினும் இவ்வாண்டில் அதனை நடாத்துவதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டால் வரவேற்கத்தக்கதாகும்.

அண்மைக்காலமாக மட்டக்களப்பில் திருமதி. வாசுகி அவர்களும் ஓவியத்தில் ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியுள்ளார். இவரது ஓவியங்களில் நவீனத் தன்மையையும் காணலாம்.

மட்டக்களப்பில் கீழ்க்குறிப்பிடப்படும் ஓவியர்கள்பலர் தமது திறமைகளை அவ்வப்போது வெளிப்படுத்திக் கொண்டு வருகின்றனர். குறிப்பாக சஞ்சீவ், ரூபன், சௌ, ரவி, கிக்கோ, ரமேஷ், வேல்முருகு, மேகவண்ணன், டானியல், சுந்தரலிங்கம் போன்றோர் இதில் அடங்குவர். குறிப்பிடப்பட்டுள்ள ஓவியர்களில் அதிகமானோர் நவீனஓவியங்களையே வரைகின்றனர். இங்கு குறிப்பிடப்படாத வளர்ந்து வரும் ஓவியர்கள்பலர் உள்ளனர். அவர்களின் பெயர் விபரங்கள் குறுகிய காலத்தேடலின் போது அகப்படாமல் போனது துரதிஷ்டவசமே.

எதிர்காலத்தில் மட்டக்களப்பில் ஓவிய வளர்ச்சிக்கான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும் திறமையுள்ள, நன்கு அனுபவம் வாய்ந்த ஓவியர்கள் தங்களின் ஓவியங்களை முடிந்தவரையில் கண்காட்சிகளை நடாத்தியும், பயிற்றுவித்தும் ஓவியத்தின் வளர்ச்சிகுன்றாமல் ஒரு திடமான பாதையை அமைத்துக் கொடுக்க வேண்டியது இவர்களின் வரவேற்கத்தக்கதொரு பணியாகும்.

*With Best Compliments*
*from*

# SNJ GROUP

**Civil Engineering Consultants and Builders**

***Eng.S.E. Jeyarajah*** *Dip.Eng IEng.*
*M.I.E D.(Lond)M.I.E*
Civil Engineer.

**No.211, Trinco Road,**
**BATTICALOA.**
**065-2565**
**065-4776**

**19A, Boundary Road,**
**BATTICALOA.**
**065-2932**

Visit to:
**For Latest Designs and**
**22 Carat Gold Jewels**

# GOWRIY

## Jewellery Palace

*15, Munai Street,*
*BATTICALOA.*
*T. P. 065-2838*

# நியூ மர்ழியாஸ்

1996ம் ஆண்டு முத்தமிழ்
விழாவுக்கு எங்கள் நல்லாசிகள்

**New**

# MARLIYAS

**No: 82, Main Street,**
*BATTICALOA.*
*T. P. 065-2900*

பரிசு பெற்ற சிறுகதை

# ஆசாரங்கள்

— அ. ச. பாய்வா —

சோளகம் தன் ஆங்காரத்தின் இறுதிவரிகளை எழுதிக்கொண்டிருக்கும் ஓர் புரட்டாதி மாதம். மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கெல்லைக் கிராமமான கதிரவெளியின் ஓர் ஓலை வீட்டுக்குள், வேதக்கார வாத்தியாரென்றும் சின்னத்துரை வாத்தியாரென்றும் அழைக்கப்பட்ட, உலகத்தை சுருட்டித் தன் சுங்கானுக்குள் வைத்திருந்த குருசு வாத்தியார் ஆறடிப் பலகையில் தன் இறுதிப் பயணத்துக்காகப் படுத்திருந்தார்.

சராசரித் தமிழாசிரியனாய் சொற்ப சம்பளத்தில் வாழ்ந்த அவரின் பொருளாதாரம், பெரிதாய் சாதிப்பதற்கு இடந்தரவில்லையென்பதற்கு அவரது சிறிய மண் வீடே சாட்சியாயிருந்தது. சித்திரை வருடத்துக்கு வெளிச்சுவர் மீது இரண்டு பிரிவாகப் பூசப்பட்டிருந்த வெள்ளை, சிவப்புக்களியும், அதன் மீது ஆங்காங்கே வரையப்பட்டிருந்த சிறிய கோலங்களும், வாத்தியார் திருக்கோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த கொட்டியாபுரத்தைச் சேர்ந்தவரென்றாலும், கதிரவெளியில் திருமணமான தன் பின் அதன் கலாச்சார, பாரம்பரியங்களுக்குள் எவ்வாறு இரண்டறக் கலந்தாரென்பது இன்றுவரை அவரை அறிந்த யாவருக்கும் அதிசயமாயிருந்தது.

"கொட்டியாபுரத்தில் இருந்து என்ர ஆக்கள் வந்து எனக்கெல்லாம் செய்வானுகள் நீ தங்கம் ஒண்டுக்கும் கவலைப்படாத என்று சாவதற்குமுன் சேடம் இழுக்கும் நேரத்திலும் மனைவியிடம் கூறியதும், மீன் செத்த அன்றே சினையும் செத்துப்போச்சு" என்று அவரால் மிகவும் நேசிக்கப்பட்ட மருமகன் செல்லப்பாக்கியம் உட்பட ஓரிரு உறவுகள் வந்ததும் தெரியாது போனதும் தெரியாது என்ற நிலையிலும், அந்த ஏழைக் கிராமமே வாத்தியாரைப் பொறுப்பேற்றுக் கொண்டது.

தான் இறுதியாகக் கற்பித்த கதிரவெளியில் அவரது மனைவி இறந்து அவர் தபுதாரனானதும், அதே ஊரில் விதவையான அன்ன முத்துவைக் கைப்பிடித்து தன் பிள்ளைகள் போலவே அவளது பிள்ளைகளையும் நேசித்து வளர்த்ததையும் யாரால்தான் மறக்க முடியும். அது தவிர பாடசாலைக்கு வராத பிள்ளைகளை வீடு வீடாய்த் தேடிச் சென்று கூட்டி வந்து எழுத வாசிக்கக் கற்றுக் கொடுத்ததையும் ஊரால் மறக்க முடியுமா இன்று கூட கையெழுத்துப் போடும் ஒவ்வொருவனும் இது குருசுவாத்தியாரிட்ட பிச்சை என்றுதான் சொல்வார்கள்.

வேஷ்டியும், ஆள்வாரமும் சால்வையுமாக இரண்டு கைகளையும் வீசி கம்பீரமாக நடக்கும் அவரைப்போன்ற அந்தநாள் ஆசிரியனை நினைத்துப் பார்ப்பவர்களால் இந்த நாள் ஆசிரியர்களை ஏனோ ஏற்றுக்கொள்ள இயலவதில்லைதான் அந்த கம்பீரம் எல்லாம் அந்த நாட்களுக்குச் சொந்தமானவைதான்.

தலைமழைக்கு முன்னர் பழஞ்சேனை வெளியாக்குவதிலும், புதுக்காடு பற்றவைப்பதிலும் ஈடுபட்டிருந்த குடும்பங்கள் சாவியளங்கேட்டு மாலையானதும் அதிக எண்ணிக்கையில் வரத் தொடங்கினர். வீட்டுக்குள் ஒன்றும் வெளியில் ஒன்றுமாக பெற்றோமெக்ஸ் விளக்குகள் வெளிச்சத்தை உமிழ்ந்து கொண்

டிருந்தன. வாத்தியாரின் குழந்தைகள் அழுதகளைப்பாலும் பசிக்களையாலும் உறங்கிப்போயின. அன்னமுத்து மட்டும் தலைமாட்டில் உட்கார்ந்து ஓயாது அழுது கொண்டிருந்தாள். தனக்குக் கிடைத்த இரண்டு வாழ்க்கைகளும் தன்னைவிட்டுப் போனதன் ஆற்றாமை அவளது ஒவ்வொரு ஒப்பாரியிலும் பிரதிபலித்தது.

எங்களைத் தனியா விட்டுட்டுப் போறீங்களே என்றவள் பிலாக்கணமெடுக்க "நாங்கெல்லாம் இருக்கக்க, ஏனக்க தனியாப் போனியெண்டு கத்திற ........" என்றவள் தங்கை காளி சொல்லியும் அன்னமுத்து எதையும் ஏற்றுக்கொள்வதாய் தெரியவில்லை. அன்னமுத்து என்ன, தான் பிறந்த ஊரைப்பற்றித் தெரியாதவளா தங்கள் குடும்பங்களையே கொண்டு நடாத்த வக்கில்லாத இனசனத்தால், தன்னையும் தன் குடும்பத்தையும் எப்படிப் பராமரிக்க இயலுமென்பதை அறியாதவளா. ஆனால், "அத்தான் செய்த புண்ணியங்களென்னாலும் உன்ட குடும்பத்தைக் காப்பாத்தும் அக்க" என்று அவள் தம்பி சீனி வெறியில் சொன்னாலும் அதற்கு அர்த்தமிருப்பதாக உணர்ந்து கொண்டாள்.

புண்ணியங்களென்றதும் அன்னமுத்துவுக்கு அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது. வீடுதேடி யார் எந்த நேரத்தில் வந்தாலும் 'குடுறி ...... குடுறி ...... ஏழைச்சனங்கள்' என்று எதையாவது கொடுத்து விடுவாரே.

குருசுவாத்தியார் அன்னமுத்துவைக் கைப்பிடித்த புதிது. கதிரவெளியிலிருந்த சிறிய உபதபாற் கந்தோருக்குப் பாடசாலையிலிருந்து நாள்தோறும் கடிதங்கள் பார்க்கப்போவார். அங்கு அந்த நாட்களில் தபாற் சேவகர் என்று எவருமில்லை. முத்திரை குத்துவதிலிருந்து தபால் பஸ்சுக்கு தபால்பை கொடுப்பதுவரை சகலமும் உபதபாலதிபர்தான் செய்யவேண்டும்.

அப்படிச் சென்று மெயில் பஸ்ஸை எதிர்பார்த்து நின்ற ஒருநாள், கதிரி கந்தோருக்கு அருகில் இருந்த பொதுக் கிணற்றடியில் வெகுநேரமாக குடமொன்றை வைத்துக்கொண்டு நின்றதைக் கண்டு அருகிற்சென்று விசாரித்தபோதுதான் அவள் வண்ணார் அம்பட்டர் கிணற்றுத் துலாவைத்தானும் தொடக்கூடாதென்றும், தங்களைத்தவிர்ந்த ஊரார் எவராவது வந்து தண்ணீரள்ளித் தரும்வரை அவர்கள் காத்திருக்க வேண்டுமென கூறித் தெரிய வந்தது.

இது வாத்தியாருக்குப் புதுமையாகவும் வேதனையாகவுமிருந்தது. ஆகமங்கள் என்று சொல்ல, அறியாத சனங்கள் வேறுவிதமாய் அவற்றுக்கு அர்த்தங் காண்பிக்கிறார்களென்பதால் ஒரு பக்கம் இந்தப் படிப்பறிவற்ற சனத்தின் மீது ஆத்திரமும் வந்தது.

யூதர்கள் கீழ்த்தரமாக மதிக்கும் அந்தச் சமாரியப் பெண்ணிடமே தண்ணீர் வாங்கிக் குடித்த இயேசுவை வணங்குபவரல்லவா அவர்

> யூதனாகிய நீர் சமாரியப் பெண்ணான என்னிடம் தண்ணீர் கேட்பதெப்படி என்றவள் கேட்க கடவுளுடைய கொடை இன்னதென்பதையும். உன்னிடம் தண்ணீர் கேட்பவர் இன்னாரென்பதையும்

மூன்று பிள்ளைகள் பெற்றும், 'மசுவாது' என்ற நிலையில் வாழ்ந்தாராயினும் எந்தச்சந்தர்ப்பத்திலும் தன் திரிகாலச் செபங்களையோ இராச்செபங்களையோ சொல்ல மறந்தவரல்லர். அதேபோன்று இந்துக்களுக்குச்

சமானமாக தேவாரம் திருப்பாசுரங் களை மனனஞ் செய்து உருக்கமாகப் பாடவும் வல்லமை பெற்றிருந்தார்.

இவரா இந்தச் சிலரின் வைராக்கி யத்துக்குப் பலியாவார்! கட்டாடிக் குடிக்குக் கிணறு அமைத்துக் கொடுத்ததற்கு நன்றியாகக் கதிரி, வாத் தியாருக்கு மிகவும் விருப்பமான புகை யிலையை எப்போதாவது கொண்டு வந்து கொடுக்கத் தவறுவதில்லை. அந் தக் கதிரிகூட வாத்தியாரின் கால்மாட் டில் ஊனுறக்கமின்றி அழுதவண்ண மிருந்தாள்.

விடிந்ததும் சவ அடக்கத்துக்கான முஸ்த்திப்புகளில் மைத்துனன் சீனி இறங் கினான் இந்து முறைப்படி வாழை, தென்னங்குருத்து முதலியன கொண்டு பாடையும் தயாரானது என்ன நினைத் தாளோ அன்னமுத்து வெளியில் வந்து சுவாமியாரும் வரமுடியாதெண்டு சொன்னாலும் அவர அவர்ர வேத முறப்படித்தான் தாக்க வேணும் ஆரா வது வாகரைக்குப்போய் அங்க வேதக் காறாக்களுக்கிட்ட எப்பிடிப் பாட செய்யிறதெண்டு விசாரிச்சு வாங்க நம்மட முறப்படி நான் செய்ய உட மாட்டன் எல்லாரும் என்ன மன்னிச் சுக்குங்க என்று முடிவாகக் கூறி வீட்டி னுள் சென்று விட்டாள் அதனை எதிர்க்க யாருக்கும் திராணியில்லாத தால் பாடை பிரிக்கப்பட்டது ஒரு வேளை மூதூர் வேதக்காரர் குருத்தைக் கோவிலுக்குள்கூட அனுமதிப்பதில்லை என்கிற ஐதீகத்தை வாத்தியார் அன்ன முத்துக்கு எப்போதாகிலும் கூறியிருக் கலாம்

எனவே வாகரையிலிலிருந்து விபரங் கள் அறிந்து தட்டி தயாரிக்கப்பட்டு. முதிரையாற் செய்யப்பட்ட பெட்டியில் பெயர் பிறப்பு இறப்பு ஆகிய முகாந் திரங்கள் எழுதப்பட்ட சிலுவை முன் செல்ல கதிரவெளிக் கிராமத்துக்கு முற்றிலும் புதிதான பிரேத ஊர்வலம் ஊர்மயானத்தை நோக்கி நகர்ந்தது.

அடுத்து என்ன செய்வதென்பதறி யாத அன்னமுத்து தனது சமய முறைப் படி மூன்றாம் நாட்கிரியைகளைச் செய்யத் திராணியற்று ஓரிருவருடன் வாத்தியாரின் மிகவும் பிரியமான மகன் நவரெத்தினராசாவை அனுப்பி கல்லற யைத் தரிசித்து விட்டாகிலும் வருமாறு அனுப்ப கல்லறையில் கட்டப்பட்டிருந்த சிலுவை உடைக்கப்பட்டு நிலத்தில் வீழ்த்தப்பட்டுக் கிடந்ததைக் கண்டு தந்தை இறந்ததைவிட மேலும் துக்க மடைந்து அன்று முழுவதும் அழுதான்.

அன்னமுத்துவுக்குத் தெரியும் இதை யார் செய்திருப்பார்களென்று ஆசாரங் களுக்குப் பலியான ஒருவரின் புதிய சரிதம் அங்கு எழுதப்பட்டதை அங்கீ கரிக்காத அன்னமுத்து மகனிடம்'பென் சன் எடுத்த முதல் வேலையா அப்பு வுக்கு கல்லால கல்லற கட்டுவம்'என்று சொல்ல தனது அப்பாவுக்கு அழிக்க முடியாத கல்லறையொன்று அமையப் போகின்றதென்ற அசையாத நம்பிக் கையில் நவரெத்தினராசா உறங்கிப் பானான்

(யாவும் கற்பனை)

(மண்முனை வடக்கு கலாசார பேரவை நடாத்திய போட்டியில் முதலாம் இடம் பெற்ற சிறுகதை)

பனை உற்பத்திப் பொருட்களையும்
பிரதேச உற்பத்திப் பொருட்களையும்,
ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள
பனை அபிவிருத்திச் சபையின்

# "கற்பகம் - KATPAHAM"

## விற்பனை நிலையங்களை நாடுங்கள்

*இலங்கையில் "கற்பகம்" விற்பனை நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள்:-*

கற்பகம்,
*244, காலி வீதி,*
*கொழும்பு: 04.*
*தொ. பேசி: 586820, 589190*

கற்பகம்,
*சந்தைச் சதுக்கம்,*
*மட்டக்களப்பு.*
*தொ. பேசி: 065-2433*

கற்பகம்,
*கிறீன் வீதி,*
*திருகோணமலை.*
*தொ. பேசி: 026-22103*

கற்பகம்,
*மட்டக்களப்பு வீதி,*
*கல்முனை.*

கற்பகம்,
*மன்னார்,*
*தொ. பேசி: 023-2053*

கற்பகம்,
*பஸ்தரிப்பு நிலையம்,*
*வவுனியா,*
*தொ. பேசி: 024-2483*

மற்றும் யாழ் மாவட்டத்தின் பலபாகங்களிலும்

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்து சுய தொழில்
வாய்ப்பைப் பெருக்கிடுவோம்.

பனை அபிவிருத்திச் சபை,
*மட்டக்களப்பு.*

# மட்டக்களப்பில் சோதிடக்கலை

— எஸ். தெய்வநாயகம் —

புகழோங்கிய உலக மொழிகளுக்குள்ளே தமிழ்மொழி காலத்தால் மூத்தமொழி. கருத்தால் முதிர்ந்தமொழி. இருபது நூற்றாண்டுகளுக்கு மேலாய் எழுத்து மொழியான இலக்கியச் செல்வங்களை தொடர்ந்து பெற்றுவருகின்ற வளம் செறிந்த வாழ்வியல் மொழி "வாழ்வதெல்லாம் வாழ்க்கையன்று உயர்ந்த நெறிகளோடும், உன்னத உணர்வுகளோடும் வாழ்வாங்கு வாழ்வதே வாழ்க்கை'' எனத் தமிழ்மொழி வற்புறுத்துகின்றது.

இத்தகைய வற்புறுத்தல்களின் விரிவாக்கல்களே தமிழ் மொழியின் இதிகாசங்களும், புராணங்களும், சோதிடக்கலைகளும், இலக்கியச் செல்வங்களும், தளராத சமய நம்பிக்கையுமாகும். இத்தகைய மொழிக்கு உரிமையுடையவர்களாகத் திகழும் தமிழ் மக்கள் தன்னிகரில்லாத் தன்மையுடன் சென்ற இடமெல்லாம் சிறப்புப் பெற்று வாழ்வதற்கு அவர்களின் ஒழுக்க சீலமும், இந்து சமயப் பாரம் பரியங்களும் நெறிமுறைகளும் காரணமெனலாம். அன்று தொட்டு இன்றுவரை தமிழர் தம் பண்பாட்டை மறக்கவும் இல்லை. மறந்து போகும் நிலைக்கு ஆளாகாமல் வாழ்ந்து வருவதற்கு இந்து சமய நம்பிக்கையே மூலகாரணமெனலாம். அந்த நம்பிக்கையின் ஒரு அங்கமாகத் திகழ்வது சோதிடக்கலையாகும்.

சோதிடக்கலை இன்று எல்லா நாடுகளிலும், வளர்ந்து வரும் கலைகளுள் ஒன்றாகத் திகழ்கின்றது. இலங்கையில் அன்று தொட்டு இன்றுவரை சிங்கள மக்களிடையேயும், தமிழ் மக்களிடையேயும், சோதிடக் கலைக்கு நல்ல வரவேற்பு கிடைத்து வந்துள்ளது என்பதை பண்டைய வரலாற்றுச் சான்றுகளில் இருந்து உணர்ந்து கொள்ளமுடிகின்றது. தமிழ் மன்னர்களும் சிங்கள மன்னர்களும், சோதிடக்கலை வளர்ச்சிக்கு தம்மால் இயன்ற பங்களிப்புக்களைச் செய்துள்ளதை வரலாற்றுச் சான்றுகள் உணர்த்துகின்றன. சிங்கள மன்னர்களில் கஜபாகு, விஜயபாகு, முதலாம் பராக்கிரமபாகு போன்றவர்கள் நன்கு சோதிட அறிவு பெற்று இருந்துள்ளனர். அதே போல், தமிழ் மன்னர்களில் யாழ்ப்பாணத்தை அரசு புரிந்த பரராஜ சேகரன், சங்கிலியன் போன்றவர்களும், சோதிட திறமை பெற்றவர்களாகத் திகழ்ந்தனர்.

மட்டக்களப்பு பிரதேசம் பண்டைக்காலத்தில் கண்டிய இராசதானியுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தது. கண்டிய மன்னர்களின் நேரடி ஆட்சியின் கீழ், மட்டக்களப்பு இருந்து வந்துள்ளது என்பதை வரலாற்றுச் சான்றுகளில் இருந்து உணர்ந்து கொள்ளலாம். சிங்கள மக்களுக்கும் மட்டக்களப்பு மக்களுக்கும் இடையில் அன்னியோன்யம், பரஸ்பரம், கலாசாரத் தொடர்புகள் வேரூன்றி வந்துள்ளதை இந்த வரலாற்றுச் சான்றுகள் உணர்த்தி நிற்கின்றன.

மட்டக்களப்பு பிரதேசம், கிழக்கே பொத்துவில், தெற்கே மகா ஓயா, மேற்கே வெருகல்துறை வடக்கு வங்காளவிரிகுடா என முன்னர் வரையறை செய்து இருந்தனர். ஆனால் இன்று மட்டக்களப்பு துறைநீலாவணை வரையும் என வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த பிரதேசத்தில் வாழுந் தமிழ், முஸ்லீம், பறங்கியர் போன்ற மக்களின் வாழ்க்கைச் சூழலில், சோதிடக்கலை ஓரளவு இடம்பிடித்துள்ளது என்றே கூறவேண்டும். குறிப்பாக தமிழ் மக்கள் மட்டக்களப்பில் சோதிடக்கலையை வளர்த்துள்ளார்கள் என்று கூறுவதற்கு போதிய சான்றுகள் இல்லை. அதே போல் முஸ்லீம் மக்களிடையேயும் சோதிடக்கலையை வளர்த்தெடுக்க யாரும் முன்வந்ததாகத் தெரியவில்லை. முஸ்லீம் மக்கள் சோதிடக் கலைக்கு மதிப்பளித்துள்ளார்கள் என்பதற்கு இடமில்லை ஏனெனில் அன்றையநிலையில் முஸ்லீம் மக்கள் சோதிடத்தில் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்துள்ளார்கள் என்பதற்கு போதிய ஆதாரங்கள் இல்லை. ஆனால் மட்டக்களப்பில் தமிழ் மக்கள், சோதிடக்கலையில் ஆழ்ந்த நம்பிக்கையுள்ளவர்களாக வாழ்ந்துள்ளார்கள் என்பதற்கு போதிய சான்றுகள் உண்டு.

மட்டக்களப்பு மக்களுடைய எந்த சமய நிகழ்வுகளிலும் கலாசார பண்பாட்டு நிகழ்ச்சிகளிலும் சோதிடம் இடம் பெற்றுள்ளதோடு தமிழ் மக்களின், திருமணம் குழந்தை பிறப்பு, இறப்பு, ருது ஜெனனம் என்பவைகளில் முக்கிய இடம் வகித்து வந்துள்ளது. அன்று வாழ்ந்த மக்களும் சரி இன்றைய மக்களும் சரி தமது வாழ்நாள் கருமங்களுக்கு சோதிட உதவியை, பலனைப் பார்த்து கருமங்களை ஆற்றி வந்திருக்கின்றனர். மட்டக்களப்பு மக்களில், இந்து சமயத்தை சார்ந்தவர்களும், கிறிஸ்தவர்களும் சோதிடக்கலைக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். ஆலய கும்பாபிஷேகம் தொடங்கி திருவிழா வரை சோதிட சுப நேரம் பார்த்து செய்யப்படுகின்றன. திருமணம், ருது ஜெனனம் பிள்ளை பிறப்பு என்பவைகளும் சோதிட சுப நேரக் கணிப்பை பின்பற்றி செய்யப்பட்டு வருகின்றன. அன்று தொட்டு இன்று வரை சோதிடம் கேட்பவர்கள் பெருகிக் கொண்டு வருகின்றார்களே ஒழிய சோதிடம் படிப்பவர்கள் குறைவாகவே இருந்து வருகின்றனர். சோதிடம்

படித்தவர்கள் கூட மற்றவர்களுக்கு அதைச்சொல்லிக் கொடுத்து வளர்க்க வேண்டும் என்றநினைப்பு ஆர்வம் இருந்ததாகத் தெரியவில்லை.

மட்டக்களப்பு மக்களின், கலைச் செல்வங்களில் சோதிடக் கலையும் ஒன்று. இந்த சோதிடக் கலையானது பல்வேறு பட்டவர்களால், பலவிதமாக சோதிடம் பார்க்கப்பட்டு வருகின்றது. வெற்றிலைச் சோதிடம், கிரகநிலைச் சோதிடம், கைரேகை, தொடுகுறிச் சோதிடம், பகடைச் சோதிடம், மலர்ச் சோதிடம், அருள் சோதிடம், என பலவகை நிலையில் சோதிடம் பார்க்கப் படுகின்றது. இவைகளில் வெற்றிலைச் சோதிடம் கிரகநிலைச் சோதிடம், கைரேகை என்பவைகளே கூடுதலாக மட்டக்களப்பு மக்களிடையேபிரபல்யம் அடைந்து விளங்குகின்றது. பிள்ளை பிறப்பு என்றால், வெற்றிலைச் சோதிடமும், கிரகநிலையும் பார்த்து, அப்பிள்ளையின் வருங்காலத்தை நிர்ணயித்துக் கொள்கின்றனர். எந்த வேலையைத் தொடங்கும் போதும் சோதிடம் பார்த்து செய்யும் வழக்கம் இன்றும் நடைமுறையில் உண்டு. மட்டக்களப்பு மக்களின் வாழ்க்கையில் சோதிடம் பின்னிப் பிணைந்துள்ளதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் சோதிடக் கலையை வளர்த்து எடுக்க வேண்டும் என்ற ஆர்வம் யாரிடமும் இல்லை எனக் கூறலாம். சோதிடம் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் எல்லோரிடமும் உண்டு. எங்கெங்கு எந்த எந்த துறையில் சோதிடம் பார்க்கின்றார்கள் என்று அறிந்தால் அங்கு சென்று தங்கள் பலனை அறிந்து கொள்ளுகின்றனர். கொழும்பில் காண்டம் பார்க்கின்றார்கள்என்று அறிந்ததும் பஸ் எடுத்து புகையிரதம் மூலம் கொழும்பு சென்று காண்டம் பார்த்தவர்களில் அதிகமாக மட்டக்களப்பு மக்களே இருந்தனர் என்று காண்டச் சோதிடர்கள் வாயாரக் கூறியதை காதால் கேட்க முடிந்தது. ஆனால், காண்டம் எத்தகையது என்பதை அறியாமல் தாய், தந்தை பெயர் சகோதரர் பெயரைக் கூறிவிட்டால் சரி என்று ஒப்புக் கொள்ளும் தன்மையை மாற்றி அந்த காண்டத்தில் மறைந்துள்ள ஏமாற்று வித்தையை உணர்ந்து கொண்டு, சோதிடம் பார்த்து நம்பிக்கை கொள்ள வேண்டும்.

சோதிடக்கலை என்பது புனிதமானது. அதை வயிற்று பிழைப்புக்கும் வருமானத்துக்காகவும் பாவித்து சோதிடம் பார்ப்பதால் அதன் மகத்துவமும் உண்மையும் மறைந்து சோதிடம் பொய் எனும் தன்மைக்கு மாற்றிவிடுகின்றது. மட்டக்களப்பில் பல்வேறு துறைசார்ந்த சோதிடர்கள் வாழ்ந்துள்ளார்கள். வெருகல் தொடங்கி பொத்துவில் வரை பிரபல்யம் பெற்ற வெற்றிலைச் சோதிடர்களும் கைரேகைக் கிரக நிலைச் சோதிடர்களும் வாழ்ந்து சோதிடம் பார்த்து மறைந்துள்

ளனர். இவர்கள் அனைவரும் தாங்கள் வாழும் போதே பின் சந்ததியினரை தங்கள் மறைவுக்கு பின் உருவாக்க வேண்டும் என நினைத்துப் பார்த்ததில்லை. அப்படிப் பார்த்து இருந்திருந்தால் இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் சோதிடக்கலை வளர்ச்சி பெற்றகலையாகத் திகழ்ந்திருக்கும். கடந்த நூற்றாண்டு காலத்திற்குள் புகழ் பூத்த சோதிடர்களாக பலர் வாழ்ந்து மறைந்துள்ளனர். ஆனால் இன்று வாழ்பவர்கள் தமது வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதில் சோதிடக்கலையைப் பயன்படுத்திக் கொள்கின்றனரே தவிர அதைப் பயிற்றுவித்து உண்மைத் தெளிவை ஏற்படுத்துவார் யாரும் இலர்.

மட்டக்களப்பில், யார் வீட்டிற்கு போனாலும் அங்கு கதை பேச்சுக்களில் சோதிடம் புகுந்து விளையாடுகின்றது. தனக்கு சரியான பிரச்சனை, பலன் சரியில்லை, என்ன காலபலனோ தெரியாது. மகளுக்கு ஏழரைச் சனி, மகனுக்கு ஜென்மத்து வியாழன், மனைவிக்கு அட்டமத்துச் சனி என்று தங்களுக்குள்ளே அலட்டிக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். ஆனால், சோதிடக் கலையை நன்கு உணர்ந்து, ஓரளவாவது படித்துக் கொண்டால், மேற்கூறப்பட்ட அலட்டல்கள் ஏற்பட வழியில்லை. காரணம், ஒவ்வொரு கிரகங்களின் தன்மையையும் அறிந்தவர்கள் மனச்சஞ்சலம் அடையத்தேவையில்லை.

கிரகங்கள் ஒன்பது. சூரியனைத் தலைவராகக் கொண்டு கேது வரை அந்த ஒன்பது கிரகங்களும் செயலாற்றுகின்றன. இராசிகள் பனிரெண்டு மேடம் தொடங்கி மீனம் ஈறாக இந்த பனிரெண்டு இராசிகளிலும் ஒன்பது கிரகங்களும் சஞ்சரித்து வருகின்றன. அந்த சஞ்சரிக்கும் காலங்களில் ஏற்படும் மாற்றங்களே பலாபலன்களாகக் கொள்ளப் படுகின்றன. இது கிரக நிலைச் சோதிடத்தில் முக்கியமாகக் கொள்ளப் படுகின்றன. அதே போல் வெற்றிலைச் சோதிடமும் கிரக உதிப்பை மையமாக வைத்து கணிக்கப்பட்டு, பலன் கூறப்படுகின்றது. கை ரேகையும், ரேகை பதிவைக் கொண்டு கணிப்பீடு செய்து பலன் சொல்லப் படுகின்றன. இந்த மூன்று சோதிட அமைப்புக்களுமே மட்டக்களப்பில் இன்று முக்கியமாகப் பிரபல்யமாக விளங்கிவருவதால் மட்டக்களப்பு மக்கள் மத்தியில், இத்துறை சார்ந்த அறிவு கூடுதலாக ஏற்படும்போது சோதிடம் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் குறைந்து போலிகளுக்கு வருவாய்க்கு சோதிடம் பார்க்கும் நபர்களுக்குமதிப்பளிக்கும் தன்மை மாறும். சோதிடத்தை கொண்டு ஏமாற்றுபவர்கள் இதனால் தங்கள் ஏமாற்று வித்தையை தவிர்த்துக் கொள்வார்கள். சோதிடக் கலையின் எதிர்காலமும் சுடர் விட்டுப் பிரகாசிக்கும்.

சோதிடக்கலை, மட்டக்களப்பில் வேரூன்றியகாலம் தொடங்கி

இன்றுவரை பலதரப்பட்ட சமூகத்தவர்களிடையேயும் வளர்ச்சி கண்டுள்ளது. ஆனால், அந்தச் சமூகத்தில் உள்ளவர்கள் தங்கள் சமூகத்தைச் சார்ந்தவர்களுக்கே சோதிடக்கலையை பயிற்றுவிக்க வேண்டும் என எண்ணியதுமில்லை, பயிற்றுவிக்கவுமில்லை.

எல்லாச் சமூகத்திலும் சோதிடம் பார்ப்பவர்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள். சோதிடம் என்பது கணிதத்துறை, இக்கணிதம் சரியாகக் கணிக்கப்பட்டால் சொல்லும் சோதிடம் பிழையில்லாமல் இருக்கும். இல்லாவிடில் அந்தச் சோதிடம் பிழை என்ற கருத்தை தோற்றுவித்துவிடும். இத்தோற்றுவிப்பினால் எல்லாச் சோதிடர்களும் பொய்யானவர்கள் என்ற தன்மைக்கு ஆளாக்கிவிடும்.

எனவே மட்டக்களப்பில் சோதிடக்கலை வளர்ச்சி பெறவில்லை என்றே கூறவேண்டும். ஆனால் மட்டக்களப்பில் சோதிடம் பார்ப்பவர்கள் கூடுதலாக உள்ளனர். முக்கியமாகத் திகழும் வெற்றிலைச் சோதிடம், கிரகநிலை, கைரேகை என்பவைகளில் கூடுதலான அறிவை மட்டக்களப்பு மக்களிடையே புகுத்த மேற்கூறிய துறை சார்ந்த சோதிடர்கள் முன்வர வேண்டும். அப்போது சோதிட அறிவு வளர்ச்சி காண்பதோடு சோதிடம் பார்ப்பவர்கள் தொகையும் குறைவுபட்டு சோதிடக் கலைக்கு தனியான ஒரு இடம் கிடைக்கும். இல்லையேல் பணத்திற்காக சோதிடத்தை பாளாக்கி அக்கலையின் மகத்துவத்தை போக்கிவாழும் போலிகளின் நிலை கூடிக் கொண்டேயிருக்கும். சோதிடம் நம்பு ஆனால் நம்பி நடவாதே என்ற தன்மை கொண்டது. இதை மட்டக்களப்பு மக்கள் பின்பற்றினால் சோதிடக்கலை வளர்ச்சி இம்மாவட்டத்தில்மேலோங்கி நிற்கும். எந்தக்கல்வியும் வளர்ச்சி பெறும்போது, அது சமூகத்தின் மறுமலர்ச்சிக்கு உறுதுணையாக அமைகின்றது. இதேபோல் சோதிடக் கல்வியும் மக்கள் மனதில் பதியும் போது சோதிட உண்மைகளை வெளிப்படுத்தி, சோதிடக்கலையின் மகத்துவத்தை உணர்த்தி நிற்கும் தன்மையுடன் பிரகாசிக்கும் என்பதில் ஐயமில்லை.

**உஷாத்துணை நூல்கள்:-**


1. சோதிடசிந்தாமணி
2. மட்டக்களப்பு மான்மியம்
3. சோதிடக்கலை மரபு
4. பரராசசேகரன் பாமாலை
5. சோதிடக்கலையும் நாமும்

பாடசாலை மட்ட போட்டிகளிலும்
திறந்த போட்டிகளிலும்

வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை
வழங்கிய

இந்து சமய கலாசார அலுவல்கள்
திணைக்களத்திற்கும்,

மேற்படி திணைக்கள பணிப்பாளர்
**திரு. க. சண்முகலிங்கம்**

உதவிப் பணிப்பாளர்
**திரு. எஸ், தெய்வநாயகம்**

ஆகியோருக்கும்

## எமது நன்றிகள்

# மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை
நடத்திய
# போட்டி முடிவுகள் - 1996

## ❁ பாடசாலை மட்டப் போட்டிகள்:

கட்டுரைப் போட்டி:

*1ம் இடம்:* தர்மசுந்தரம் துஷ்யந்தன்
மட்/மெதடிஸ்த மத்திய கல்லூரி மட்டக்களப்பு.

*2ம் இடம்:* மகாலிங்கம் ரமணசுந்தரம்
மட்/புனிதமிக்கேல் தேசிய கல்லூரி மட்டக்களப்பு.

*3ம் இடம்:* றமாஜினி மோகனதாஸ்
மட்/புனித சிசிலியா மகளீர் கல்லூரி மட்டக்களப்பு.

பேச்சுப் போட்டி:

*1ம் இடம்:* மேரி அனிற்றா அன்ரனி
மட்/புனித சிசிலியா மகளீர் கல்லூரி மட்டக்களப்பு.

*2ம் இடம்:* பிரியதர்சினி மேகநாதன்
மட்/புனித சிசிலியா மகளீர் கல்லூரி மட்டக்களப்பு.

*3ம் இடம்:* தவராஜா சிந்துஜா
மஞ்சந்தொடுவாய் சாரதா வித்தியாலயம் மட்டக்களப்பு.

கவிதைப் போட்டி:

*1ம் இடம்:* சி. சிவகாந்தன்
மட்/சிவானந்தா தேசிய பாடசாலை மட்டக்களப்பு.

*2ம் இடம்:* சுபத்திரா அற்புதராஜா
மட்/புனித சிசிலியா மகளீர் கல்லூரி மட்டக்களப்பு.

*3ம் இடம்:* தி. புகழேந்தினி
மட்/சிவானந்தா தேசிய பாடசாலை மட்டக்களப்பு.

## ❁ திறந்த போட்டிகள்

கோலப்போட்டி:

*1ம் இடம்:* கே. சிவராசா
சாய நிலையம் கல்லடி, மட்டக்களப்பு.

*2ம் இடம்:* சுகிர்தசுகுணம் ஆனந்தராஜா
மெதடிஸ்த குருமனை
கோட்டமுனை மட்டக்களப்பு

*3ம் இடம்:* சின்னராஜா ரூபன்
திசவீரசிங்கம் சதுக்கம் மட்டக்களப்பு.

நாட்டுக்கூத்து

1ம் இடம்: குந்தி புலம்பல்
கே. கனகையா குழு, 41 திசவீரசிங்கம் சதுக்கம்,
எல்லை வீதி, மட்டக்களப்பு.

2ம் இடம்: சூரியன் அளித்த சுடர் மணி
சிவஸ்ரீ கா. சி. மா. பஞ்சாட்சரக்குருக்கள், சோலைத் தென்றல்
குழல் விழிப்புணர்ச்சி மன்றம், புன்னச்சோலை மட்டக்களப்பு.

பங்குபற்றுதலுக்காக:

வள்ளி திருமணம்
வேலாப்போடி செல்வநாயகம் (குழு)
காமதேனு கலைஇலக்கியமன்றம், சேத்துக்குடா, மட்டக்களப்பு.

கவிதை:

1ம் இடம்: காத்திருப்பேன்
அ.ச. பாய்வா, 513/21 திருமலை வீதி, மட்டக்களப்பு.

2ம் இடம்: அமைதி வழிதேடி
ஏரம்பமூர்த்தி சுகேசினி,
நொச்சிமுனை, மட்டக்களப்பு.

3ம் இடம்: மட்டுநகர் புறப்படு
எஸ். மோசஸ், 115 டச்பார் வீதி, கல்லடி, மட்டக்களப்பு.

சிறுகதை:

1ம் இடம்: ஆசாரங்கள்
அன்ரனி சத்தியசீலன் பாய்வா
513/21 திருமலை வீதி, மட்டக்களப்பு.

2ம் இடம்: தருணம்
கண. மகேஸ்வரன், 18/7 தர்மலிங்கம் லேன், மட்டக்களப்பு.

3ம் இடம்: அகதிகள் அந்தஸ்து
எஸ். மோசஸ், 115 டச்பார் வீதி, கல்லடி மட்டக்களப்பு.

நாடகம்

1ம் இடம்: கிழக்கு வானம்
அலோசியஸ் பைனாட்ஸ் கலைக்குழு
மட்டிக்கழி, மட்டக்களப்பு.

2ம் இடம்: கோடுகள் அழிகின்றன
உழைக்கும் மகளீர் அபிவிருத்தி நிறுவனம்,
மாமாங்கம், மட்டக்களப்பு.

3ம் இடம்: விடிவைத்தேடி
சோலைத்தென்றல் குழல் விழிப்புணர்ச்சிமன்றம்
புன்னச்சோலை, மட்டக்களப்பு.

# மீண்டும் —
# மதுரை எரிதல் வேண்டும்

— சாருமதி —

அரசியல் பிழைத்தோர்க்கு
அறம் கூற்றாகும்.
மன்னன் மடிந்தான்
மன்னன் மனைவி
மாதேவியும்
அவன்
மடியில் மடிந்தாள்

வெந்து தணியவில்லை மார்பு
அது
செந்தழலாய் தகித்தது
பிய்ந்து போனது ஒன்று
மதுரை
பிடி சாம்பலானது.

கன்னிமை கழித்தும்
கையில் குழந்தையைக்
காணாத
கண்ணகியின்
பேர் முலை
பெரிதாய் புரிந்த சாதனை
மதுரை எரியாதமை.

இருங்கள்! இருங்கள்!
இன்னும் அந்த நெருப்பு
இங்கு அணைய வில்லை
பிஞ்சாய் குஞ்சாய்
அது
இன்னும்
பெயரோடு இருக்கிறது
ஆங்கோர் பொந்து
அதற்காய்
காத்துக் கிடக்கின்றது.

பொந்து
நொந்து நொந்து
வாழ்வோரை
நோகச் செய்யும் பொந்து
ஆணவமாடும்
அந்தப் பொந்தில்
அணையாத அந்த
அக்னிக் குஞ்சை வைப்போம்
நொந்தவர் சிரிக்க
எரியட்டும் காடு
மீண்டும் எரிய மதுரை உண்டு

இப்பொழுது அதை
எரிக்கப் போபவள்
கருவை அறியாக்
கண்ணகி அல்ல.

மணிமேகலையை
தன்
மடியில் போட்டு
பாலூட்டிய
மார்பை உடைய
மாதவி
பாவப்பட்ட மாதவி

WITH BEST COMPLIMENTS
FROM

SIVA
**TRADERS**

சந்தைச் சதுக்கம்,
மட்டக்களப்பு.

அழகு சாதனப் பொருட்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
விளையாட்டுப் பொருட்கள்

அனைத்தையும்
பெற்றுக் கொள்ள
நாடுங்கள்

**நியூ ஆஸிக்**
ரேடர்ஸ்

இல.14, பஜார் வீதி,
மட்டக்களப்பு.
*T. P. 065-2116*

அழகிற் சிறந்த தங்க
நகைகளுக்கு

**கணேஷா**
ஜுவலர்ஸ்
45, மெயின் வீதி,
மட்டக்களப்பு.
065-2714

WITH BEST COMPLIMENTS
FROM

**LANKA**
**HARDWARE STORE**
**48, Bazaar Street,**
**Batticaloa.**
**065-2022**
**065-2656**

Head Office:
*194, George RDe Silva*
*Mawatta, Kotahena, Colombo 13.*
*T.P. 01-446615*
*071-22374*
*072-71944*
*B,caloa. 065-2560*
*065-4650*

# அர்த்தமுள்ள அடி எடுப்புக்கள்

**(பேணுதல், செம்மைப்படுத்தல், நவீனப்படுத்தல்)**

— கலாநிதி. சி. மௌனகுரு —

மட்டக்களப்புப் பிரதேசத்தில் அருகி வரும் கூத்துக்கலையை எவ்வாறு பாதுகாக்கலாம்?

கூத்துக்கலையின்பால் ஆர்வம் கொண்டோர் மத்தியில் எழும் பாரிய வினா இது. கூத்துக்கலை பற்றி பல்வேறு மட்டங்களில் ஆய்வுகள் நடத்தப் பட்டுள்ளன; கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன; கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன, இக்கலையின் ஆழ அகலங்கள் உணரப்பட்டுள்ளன.

இதன் ஆழ அகலங்கள் அறியப்பட்டமையினாலும் அதன் அருகிவருநிலை உணரப்பட்டமையினாலும் ஏற்பட்ட ஆதங்கத்தின் வெளிப்பாடுதான் அருகி வரும் கூத்துக்கலையை எவ்வாறு பாதுகாக்கலாம்? என்ற வினா. மேல்நிலை (அரசு, அறிஞர், பணம் படைத்தோர், செல்வாக்கு மிக்கோர்) ஊக்குவிப்பு, பயில் நிலை (கூத்தைப் பழக்கும் அண்ணாவிமார், பங்கு கொள் கலைஞர்) எழுச்சி என்னும் இருவழிப்போக்கும் சமாந்தரமாக இயங்கையில் இதன் வளர்ச்சி சாத்தியப்பாடாகும்.

இக் கருத்தை மையமாகக் கொண்டு எத்தனையோ வழிமுறைகளை நாம் கண்டு பிடிக்கலாம். நான் இங்கு அவற்றை விபரிக்கவோ விவாதிக்கவோ வரவில்லை. எத்தகைய வழிகளில் இவ்வளர்ச்சியை இட்டு நாம் சிந்திக்கலாம் என்பது பற்றிய என் கருத்துக்களையே இங்குவைக்க விரும்புகிறேன்.

பேணல், செம்மைப்படுத்தல், நவீனப்படுத்தல் என்ற மூன்று பதங்களும் நம்மை வழிநடத்தும் பதங்களாகும்.

## பேணல்:-

பேணல் என்பது யாது? கூத்துக்கலை எந்தப்பிரதேசத்தில் எவ்வாறு ஆடப்படுகிறதோ அவ்வாறே அதனைப்பேண முயற்சி எடுத்தல் பேணல் ஆகும். ஒரு பிரதேசத்தில் ஆடப்படும் கூத்து என்பது மரபு மரபாக அப்பகுதி வாழ்ந்த முன்னோரால் அப்பகுதி மக்களுக்கு கையளிக்கப்பட்டு வரும் கலையாகும். தனது தந்தை அல்லது தனது மாமா அல்லது தனக்கு மூத்த உறவினர் ஆடுகின்ற கூத்தை அவை அளிக்கும் முறைமையைப் பார்த்து உள்வாங்கிய அடுத்த தலைமுறை, அதனைக் கையேற்று தமது வயமாக்குகையில் பேணல் இயல்பாகவே நடைபெற்று விடுகின்றது. இடைக்கிடை பல்வேறுபாதிப்புக்களினால் சிற்சில மாற்றங்களை அவை பெறினும்

அடித்தளத்தில் பாரியமாற்றங்கள் ஏற்படுவதுமில்லை, ஏற்பட சமூகம் அனுமதியும் தராது. இவ்வகையில்தான் மட்டக்களப்பின் சில பிரதேசங்களில் கூத்துக்கள் ஆடப்பட்டு வருகின்றன. இக்கூத்துக்களை ஆடுபவர்கள் அரச உதவியையோ, ஏனையோரின் உதவியையோ பெறுவதில் நாட்டம் கொள்ளமாட்டார். படித்த குழாத்தினதோ, அறிவாளர்களினது ஆராய்ச்சிகளையோ பற்றி இவர்கட்குக் கவலையில்லை. கூத்து ஆடுதல் என்பது அவர்கட்கு ஒரு இன்பம். சுயமகிழ்ச்சி தாம் மகிழ்வதோடு ஊரும் மகிழ்வதனால் ஏற்படும் ஒரு மகா சுயதிருப்தி. இவர்களைப் போன்றோர்களால்தான் இன்றுவரை கூத்து வாழ்கிறது. கூத்துக்கலையின் மிகப்பலமான அத்திவாரக்கற்கள் இவர்கள். இவர்களை அவர்களின் விருப்பப்படி ஆடவிடுதலும். மேலும் ஆடும்படி ஊக்குவித்தலும் கூத்துக்கலை மேலும் வாழ உந்து சக்தி தரும் இவ்வகையில் பேணல் என்பது நடைபெறவேண்டும்.

**செம்மைப்படுத்தல்:-**

செம்மைப்படுத்தல் என்பது இதனின்று வித்தியாசப்பட்டதாகும். செம்மை என்ற பதம் வந்த மறுகணம் அங்கே படித்த ஒருவர்க்கம் உள்நுழைந்து விடுவதனைக் காணுகின்றோம் இவ்வர்க்கம்தான் கூத்தை ஆராய்பவர்களாக கூத்தை தேசிய எழுச்சிக்கும் அரசியல் நலன்களுக்கும் பயன்படுத்துபவர்களாக உள்ளனர்.

செம்மைப்படுத்தல்என்பது என்ன? கூத்தில் காணப்படுகின்ற தேவையற்ற, செம்மையற்ற விடயங்களை நீக்கி அதனை அழகான ஒன்றாக உருமாற்றம் செய்தலாகும். இம்மாற்றம் கிராமத்திற் சாத்தியமாகாது போகவும் கூடும். இது நகரம் சார்ந்த முயற்சியாகும். இச்செம்மைப்படுத்தலை பேராசிரியர் சு. வித்தியானந்தனும் பல ஆசிரியர்களும் 1960 களிலும் அதன் பின்னரும் மேற்கொண்டனர்.

கூத்துப்பாடல்களை ஒருசுருதிக்குள் பாடல், ஆடல்களை தாளக்கட்டுக்களுக்கு இயைய ஆடல்; கிராமியமாகி நிற்கும் தாளத்தையும் இராகத்தையும், சரியானபடி நேராக்கி அதனை செம்மையுறச் செய்தல், ஒப்பனை, உடை என்பனவற்றில் செம்மையை ஏற்படுத்தல் என்பன செம்மைப்படுத்தலின் சில அம்சங்களாகும்.

கர்னாடக சங்கீத ஞானமுற்றவர்களையும் பரத நாட்டிய, கதகளி ஞானமுற்றவர்களையும் மிருதங்க வித்துவான்களையும் உடன் வைத்து இவற்றைச் செய்யலாம். கர்னாடக ஞானமுற்றவர்களின் காதுக்கு காட்டுக்கத்தலாகக் கேட்கும் கூத்துப் பாடல்களின் சத்தத்தை ஒரு சுருதிக்குள் கொண்டு வருவதன் மூலம் அதனை அவர்களும் ஏற்கும் ஒரு சங்கீதமாக மாற்றலாம். நாட்டியகாரர்கட்கு வெறும் துள்ளலாக, குதிப்பாகத் தெரியும் கூத்தை சரியான தாளக்கட்டுக்களை, ஜதி

களைக் கண்டறிந்து செம்மைப் படுத்தி சரியானபடி அவற்றிற்கு கால் போட வைப்பதன் மூலம் அவர்களும் அதனை ஏற்கும் ஒரு நடனமாக மாற்றலாம்.

இம்முயற்சிகள் ஒழுங்காகமேற் கொள்ளப்பட்டமையி னாலே யே கேரளரின் கதகளியும் கர்னாடக ரின் யகடி கானமும் சிங்களரின் கண்டிய நடனமும் செம்மையுற்ற கலைகளாக மாறின. இவ்வண்ணம் செம்மையுறும் வீரியம் மட்டக்களப் புக் கூத்துக் கலைக்குமுண்டு. இவை இன்னும் முழுமையாகச் செய்யப்படவில்லை. இம்முயற்சிக்கு கூத்து அண்ணாவிமார் கலைஞர் மாத்திரம் போதாது. கூத்தை அறிந்து படித்த குழாம் பரத, கதகளி விற்பன்னர் கர்னாடக இசை அறிந்தோர், மிருதங்க, தபேலா வித்துவான்கள் ஆகியோ ரின் கூட்டு முயற்சி அவசியம். கிழக்குப்பல்கலைக்கழகவிபுலாநந்த இசை நடனக் கல்லூரி இணைப்பு இதனைக் காரிய சாத்தியமாக்க உதவக் கூடும். இப்பணியில் கூத்துக் கலை கிராமத்திலிருந்து பிரிக்கப் பட்டு நகரம் சார்ந்ததாகவும் கற்றோர் ஈடுபடுவதாகவும் மாறி விடும் வளர்ச்சியில் இது தவிர்க்க முடியாத ஒன்றே. இவ்வளர்ச்சியில் இரண்டு விடயங்கள் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ஒன்று வட்டக்களரியில்ஆடப்பட்ட கூத்தை புறோசினியம் மேடையில் ஆடியது. இதற்கும் வட்டக்களரிக் கும் வேறுபாடுண்டு.

இரண்டு, கோரஸ் ( Chrous ) எனும் குழுப்பாடலைச் சேர்ந்தது இது சரத் சந்திராவின் 'மனமே' வழியாக வந்தது.

மேற் குறிப்பிடப்பட்ட தேடல் கள் மேற்கொள்ளப்பட்டுக் கூத்தின் பரிமாணங்கள் அகலிக்கப்பட்டு, ஆழப்படுத்தப்படுகின்ற பொழுது கூத்தின் இன்றைய'மரபுகள்'மாறும் இது பல விவாதங்கட்கு இடம் தரும்.

நவீனப் படுத்தல் என்பது இவை அனைத்தினின்றும் வேறுபட் டதாகும்.

கைத்தொழிற்புரட்சியின் பின் னும் அதைத் தொடர்ந்து வந்த மனித குல வேகவளர்ச்சியின் பின் னும் மனிதனுக்கும் சமூகத்திற்கு முள்ள முரண்பாடுகள் மிகச் சிக்க லடைந்து விட்டன. இச் சிக்கல்க ளை வெளிப்படுத்த நாடகம் பல வடிவங்களைத் தேடுகின்றது. இந் நிலையில் கூத்தின் ஆற்றுகை முறைக்குள்ளேயே காணப்படும் அரங்கியற் சாத்தியப் பாடுகளை (Theatrical Protentialites of the Performance) கண்டுபிடித்து அத னூடாக ஒருவடிவத்தை நவீன பிரச்சனைகளைக் கூறப் பயன்ப டுத்துகையில் கூத்தின் நவீனப்பாடு ஆரம்பமாகும்.

கூத்து வடிவத்திற்குள்ளேயே நவீனத்தைக் கொண்டு வரும் முயற்சிகள் நடந்தேறியுள்ளன கூத்தின் அரங்கியற் தன்மைகளை

நாடகத்திற் பாவிக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் அவை பூரண நிலை காணவில்லை.

எனவே கூத்தின் வளர்ச்சியை இட்டுச் சிந்திப்போர் பேணல், செம்மை, நவீனம் என்ற மூன்று நிலைகளில் சிந்தித்தல் பயனுள்ள அறுவடைகளைத் தரும்.

தமிழைப் போலவே கூத்தும் மிகப் பழமையானது. ஆனால் இவற்றின் சிறப்பு அதன் பழமையில் மாத்திரமல்ல அதற்கு மேலாக அவற்றின் தொடர்ச்சியிலேயே தங்கியுள்ளது.

இயக்கமுள்ள உயிர்களுக்கு மேலேமேலே செல்லும் அடி எடுப்புகள் அவசியம். மட்டக்களப்புக் கூத்தும் ஒரு இயக்கமுள்ள கலை, பேணல், செம்மை, நவீனம் என்ற அடி எடுப்புகள் அதனை மேனிலைக்கு இட்டுச் செல்லும்.


உங்களுக்குத் தேவையான
அன்பளிப்புப் பொருட்கள்
அழகு சாதனப் பொருட்கள்
மற்றும் வீட்டுப் பாவனைப்
பொருட்கள்

அனைத்தையும்
மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள

சண்
பன்ஸி ஹவுஸ்

168, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

With Best Compliments
from

K.R. IGNACIOUS
FURNITURE SHOP

*FURNITURE & BUILDING MATERIALS*

*No. 11, Station Road,*
*BATTICALOA.*

T.P. 065-2717

# என் வாழ்த்து..........

வெளவாலே நீ வாழ்க!
உலகின் வழி மறுத்து
உன் வழி நீ செல்லும்
தனித்துவமே!
என் குருவே! வாழ்க!

''எல்லாத் திலுமே நீ
தலைகீழ் தான்'' என் றென்னை
வீட்டார் பேசுகையில்
என் அடைக்கலமே! வாழ்க!

முரன்பட்டு
மனங் களைத்து
மூச்சிரைக்கும் போதினிலென்
அருமருந்தே! வாழ்க!

சட்டமும் ஒழுங்கும்
சம்பிரதாயமும் உயிர் வாழ
வேசத்தில் உயிர் நீத்த
பயணிகள் கொண்டாடும்
பகலினை வெறுத்தாய், வாழ்க!

புரியாத இரவுக்குள்
உள்ளுணர்வில் வழி பிடித்து
சாரத்தின் வாசனை ஈர்க்க
தோற்றத்தில் மயங்காத
தூய உறவுகளில்
வாழ்வு செளித்தாய், வாழ்க!

உன்போல்தான் நானும்
உலகின் கண்ணுக்கு
தலைகீழாய்
தொங்கும் ஜீவன்

உண்மையில் காலூன்றி
நிமிர்ந்தது குற்றம்தான்
பொய்மையில் தலைகீழாய்
போய்விட்ட உலகத்தில்

வெளவாலே வாழ்க நீ!
என் லட்சியமே நீ வாழ்க!

- வாசுதேவன் -

## LAKE VEIW INN

**APPROVED GUEST HOUSE**

*Prop:* *A. SOOSAITHASAN*

22, Mudaliyar Street,
Batticaloa.
Shri Lanka.

Tele: 065-2593

*No. 6B, Lloyds Avenue,*
*Batticaloa,*
*Shri Lanka.*

*Tele:* 065-2339
2113

அழகில் சிறந்த
தங்க நகைகட்கு

## சாந்தினி
## கோல்ட் ஹவுஸ்

மெயின் வீதி,
மட்டக்களப்பு.

அன்பளிப்புப் பொருட்கள்
அழகு சாதனப் பொருட்கள்
விளையாட்டுப் பொருட்கள்

அனைத்தையும்
பெற்றுக் கொள்ள
நாடுங்கள்

## "பவுசீஸ்"

*58, பிரதான வீதி,*
*மட்டக்களப்பு*

**065-2215**

**Authorised Dealers for**

**Kelani, Ceat, Nitto**

**Tyres and Tubes**

## RONALD SONS

*Old Rest House Road,*
*BATTICALOA.*

*T. P. 2670*

# குழந்தை இலக்கியமும் நாமும்

— திமிலை மகாலிங்கம் —

மனிதன் அறிவு வளர்ச்சி காரணமாகவே மிருகங்களிடமிருந்து வேறுபடுகின்றான். இந்த அறிவு வளர்ச்சிப் பாதையில் மனிதனை இட்டுச் செல்வதற்குப் பல தரப்பட்ட அறிவு நூல்கள் உதவி செய்கின்றன. வாழ்க்கையை வளமுள்ளதாக உணர வைக்கும் மனப்பாங்கு இலக்கியங்களாலேயே வளர்கின்றன என்று கூறலாம். காலத்து நிலையை எடுத்தியம்பும் வரலாற்றுப் பதிவுகள் இல்லாத இடங்களிற்கூட இலக்கியங்கள் காலங்களை உணர்த்தும் கண்ணாடிகளாகத் திகழ்ந்திருக்கின்றன. இவைக்கெல்லாம் காரணமாக அமைந்தது இலக்கிய ரசனையேஎன்றுதுணிந்து கூறலாம்.

இலக்கிய ரசனையென்பது எடுத்தவுடன் ஏற்படக் கூடிய ரசனையல்ல. நூலை ரசிக்கும் ஆர்வமும் அறிவைத்தேட நூலைத் தேடு என்ற உண்மையை உணரும் பக்குவமும் சிறுவயதிலேயே அமைந்திருக்க வேண்டும். அப்போதுதான் இலக்கியத்தை ரசிக்கும் ஆர்வம் ஏற்படும். சிறுவயதிலிருந்தே நேரத்தை வீண்விரயம் செய்யும் பழக்கத்தை நிறுத்திக் கொண்டு இலக்கியரசனையை வளர்க்கும் பணியில் மனதைத் திருப்பிவிடும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இதுவே எதிர்காலத்தில் ஒரு நல்ல இலக்கிய ரசனைமிக்க உள்ளங்களை உருவாக்க உதவும்.

சாதாரண இலக்கியத்திற்கும் குழந்தை இலக்கியத்திற்கும் பல வேறுபாடுகள் உள்ளன. இலக்கிய அறிவும் எடுத்தாளும் திறனும் இருந்தால் சாதாரண இலக்கியத்தைப் படைத்து விடலாம், கதையாக, கவிதையாக அல்லது கட்டுரையாக இது அமையலாம். ஆனால் குழந்தை இலக்கியம் படைப்பதற்கு இரண்டு ஆற்றல்கள் மாத்திரம் இருந்தால் போதாது. குழந்தைகளின் மன இயல்புகள் தெரிந்திருக்க வேண்டும். குழந்தைக்கென்று சிலர் இலக்கியம் படைத்திருப்பார்கள். அதன் உள்ளடக்கம் பெரியவர்களுக்கே விளங்கிக் கொள்ள முடியாததாக இருக்கும். குழந்தை எதனை விரும்புகின்றது எந்த உருவை அமைத்தால் குழந்தை மகிழ்வோடு அதனை ஏற்றுக் கொள்ளும் என்பவற்றையெல்லாம் உணர்ந்து கொண்டே குழந்தை இலக்கியம் படைக்க முனைய வேண்டும்.

குழந்தை இலக்கியம் ஒரு தனிப்பட்ட இலக்கியமாக இனம் காணப்பட்டு வளர்ந்து வருவதற்கான கால நிர்ணயம் வேறுபட்டாலும் கிட்டத்தட்ட உள்ள ஒரு காலத்தை நிர்ணயித்துக் கொள்ள முடியும். ஆனால் குழந்தை இலக்

கியம் உண்மையில் ஆரம்பித்தது எப்போது? என்று ஆராய்ந்தால் குழந்தை பிறந்த உடனேயே இலக்கியமும் பிறந்து விட்டது என்றே சொல்ல வேண்டும். தனது கண்ணால் காணவும் காதால் கேட்கவும் அறிவு பெற்று விட்ட குழந்தை தானே இலக்கியம் படைக்க ஆரம்பித்து விடுகின்றது. இந்த இலக்கிய வளர்ச்சி தாய்தந்தையரின் ஒத்துழைப்பைப் பொறுத்து குறைந்தும் கூடியும் குழந்தைகள் உள்ளத்தில் வளர்ந்து விடுகின்றது. கதை ''கேட்டுப் பாருங்க'' என்று சொல்வார்கள் குழந்தையைக் கையில் எடுத்ததும் கதை கேட்க ஆரம்பிப்பார்கள். (குழந்தையல்ல பெரியவர்) அப்பா எங்கே? அம்மா எங்கே? என்று கதை கேட்க ஆரம்பித்ததும் குழந்தை தனது மழலைக் குரலில் ஏதாவது சொல்லும். அது கேட்பதற்கு இனிமையாகவும் ரசனை மிக்கதாகவும் இருக்கும். மீண்டும் ஒரு முறை சொல்லாதா என்று மனம் எதிர்பார்க்கும்.

''குழல் இனிது யாழ் இனிது என்பர் தம்மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்'

என்று திருவள்ளுவர் குறிப்பிடுவது இந்த வகை இலக்கியத்தைத்தான். கேள்விகள் தொடர அங்கே குழந்தை இலக்கியம் ஆரம்பித்து விடுகின்றது.

குழந்தையிடம் பெரியவர்கள் கதை கேட்கும் பருவம் முடிந்ததும் பெரியவர்களிடம் குழந்தைகள் கதை கேட்கும் பருவம் தொடர்கிறது. ''கதை சொன்னாத்தான் சாப்பிடுவன்'' என்று அடம்பிடிக்க ஆரம்பித்து விடுகிறது குழந்தை. எப்படியாவது உணவை ஊட்டி விட வேண்டுமே என்பதற்காகத் தாயானவள் கதைகள் சொல்ல ஆரம்பிக்கிறாள். தாய் சொன்ன கதையை மகள் (தாயானதும்) சொல்ல, மகள் சொன்னதை அவளின் மகள் சொல்ல அங்கே பாட்டி சொன்ன கதை ஆரம்பமாகி விடுகின்றது. இதுவும்குழந்தை இலக்கியத்தில் ஒரு பகுதிதான்.

குழந்தைகள் எதையும் துள்ளலோடு சொல்லும் உள்ளம் கொண்டவர்கள் ''அப்பா வந்திட்டார்'' என்று அம்மா சொல்வது சாதாரண தமிழ் ''அப்பா வந்திட்டாரே'' என்று மகிழ்ச்சிக் களிப்பைச் சொல்லிலே தடவி அதற்குச் சிரிப்புணர்வெனும் மெருகை ஊட்டி இரண்டு கைகளையும் ஒன்றாகச் சேர்த்து ஒலிகிழப்பி ஓடி வந்து எதிர் கொள்ளும் பொழுது குழந்தை இலக்கியம் மாத்திரமல்ல குழந்தை நாடகமே உருவாகி விடுகின்றது.

கள்ளமற்ற உள்ளத்திலே எதையும் மறைத்து வைக்கும் பழக்கம் இருப்பதில்லை. வெட்ட வெளிச்சமாக உள்ளக் கிடக்கைகளை வெளியிடும் தன்மையே குழந்தைகளிடம் உண்டு அந்த உள்ளம் ரசிக்கவும் மகிழவும் கட்டுப்பாடுகளே கிடையாது. மழை சோராமாரியாகக் கொட்டுகிறது. என்போம் பெரியவர்கள். குழந்தை அதே கருத்தை ''திடுதிடென்டு

மழைபெயிது'' என்று சொல்லும். இத்தகைய சொல்லாக்கங்களை அவதானித்தால் அந்த மழலை பாஷைக்கென அகராதியே படைக்கும் அளவுக்கு சொல்லடுக்குகள் தோன்றும். அந்தச் சொல்லின் அடுக்குகளே குழந்தைக் கவிதைகளாக மலருகின்றன. குழந்தைக்கவிதையென்பது குழந்தை உள்ளத்தில் ஏற்படும் உணர்வுகளின் ஒளித் தெறிப்பாக அமைந்து விடுகின்றது. இந்த ஒளி ஒலித்தெறிப்பாக மாறும்பொழுது கவிதைத்தொகுப்பாகிவிடுகின்றது இந்த உணர்வின் அடிப்படையிலே படைக்கப்படும் குழந்தை இலக்கியங்கள் சாகா வரம் பெற்றவை. தாயிடமிருந்து மகளுக்கும் மகளிடமிருந்து பேத்திக்கும் இப்படித் தொடர் சங்கிலியாகப் பின்பற்றிவரும் இயல்பு கொண்டவை.

ஆனா ஆவன்னா என்று எழுத்துக்கள் அறிமுகம் செய்யப்படும்பொழுது அலுப்பில்லாமல் ஏற்றுக்கொள்ளும் மனநிலை குழந்தைகளுக்கு ஏற்படுவதற்கான மனநிலையை உருவாக்குவதற்குக்கூடப் பிரயேத்தனம் செய்யவேண்டி ஏற்பட்டு விடுகின்றது. ரசிக்கக்கூடிய விதத்தில் ஒரு கவிதையையோ கதையையோ சொல்லி ரசிக்க வைத்தபின் பாடத்தை ஆரம்பித்தால் குழந்தை ஆவலோடு கேட்கின்றது. பாடத்தில் அலுப்புத் தட்டுவது போல உணர்வு ஏற்படும்பொழுது குழந்தைக்கு மாற்றுச் செயற்பாடு அறிமுகம் செய்ய வேண்டி ஏற்பட்டு விடுகின்றது. இந்தக் கட்டங்களில் குழந்தை இலக்கிய ஆக்கங்கள் பெரிதும் உதவக்கூடியவை என்பதை சாதாரணமான பெற்றோர் உணர்ந்திருப்பது இயல்பு.

எழுத்துருவம் பெறாத குழந்தை இலக்கியங்கள் பரம்பரை பரம்பரையாகச் செவியேறல்களாகப் பின்பற்றப்பட்டு வந்தன.

ஆக்காண்டி ஆக்காண்டி
எங்கெங்கே முட்டைவைத்தாய்
கல்லைப் பிழந்து
கடலருகே முட்டைவைத்தேன்
வைத்ததுமோ மூன்று முட்டை
பொரித்ததுவோ இரண்டு குஞ்சு
மூத்த குஞ்சுக்கு இரைதேடி
மூணுலகம் சுற்றி வந்தேன்
இளைய குஞ்சுக்கு இரைதேடி
ஏழுலகம் சுற்றி வந்தேன்
மாயக் குறத்தி மகன்
வழிமறித்துக் கண்ணிவைத்து வைத்தான்
நான் அழுத கண்ணீரும்
என் குஞ்சழுத கண்ணீரும்
வாய்க்கால் நிரம்பி
வழிப்போக்கர் புக்கை பொங்கி
இஞ்சிக்குப் பாய்ந்து
இலாமிச்சைக்கு வேரோடி
மஞ்சளுக்குப் பாய
வருகுது காண் அம்மானன்''

இது ஒரு நாட்டுப்பாடலாக அமைந்திருந்தாலும் இதன் அமைப்பும், சொல்லின் வலிமையும் குழந்தைப் பாடலுக்குரியதாக அமைந்திருப்பதைக் காணலாம். இத்த

கைய எளிமையும், இலகு நடையும் கொண்ட குழந்தைப் பாடல்கள் கிராமப்புறங்களில் இன்னும் புழக் கத்தில் உள்ளன.

கவிதையைப் போன்று இலகு நடையிலமைந்த குட்டிக்கதைகள் கிரகிக்க எளியவையாகவும், இலகு வில் மனதில் பதியும் இயல்புடை யதாகவும் அமைந்திருப்பது குழந் தைகளின் விருப்பத்துக்குரியன ஆகிவிடுகின்றன.

செவிவழியாக இருந்துவந்த குட்டிக்கதைகளும், குழந்தைப் பாடல்களும் எழுத்துருவில் வரத் தொடங்கிய போதே குழந்தை இலக்கியம் வளர ஆரம்பித்தது எனலாம். இரக்கம், அன்பு, நேர்மை போன்ற குண இயல்புகளால் ஏற் படும் நன்மைகளை விளக்கும் கதை களும் பொறாமை, போட்டி, பிடிவாதம், பேராசை போன்ற தீய இயல்புகளால் நிகழக்கூடிய விளைவுகளை விளக்கும் கதைக ளும் குழந்தைகளின் இலக்கியத்தில் அதிகம் இடம்பிடித்தன. காலப் போக்கிலே பொழுதுபோக்கு உணர்வு மகிழ்ச்சியான சூழல் ஆகியவற்றை ஏற்படுத்தும் கதைக ளும் கவிதைகளும் வெளிவரத் தொடங்கின. சமீபகாலமாக வெளிவரும் கதைகளும் கவர்ச்சி கொண்ட படைப்புக்களாக வெளி வருவதை நாம் அவதானிக்கலாம். மனித முன்னேற்றம், அறிவியல் கருத்துக்கள் கொண்ட விடையங் கள் தற்கால குழந்தை இலக்கியங் களிலே மிளிர்வதை நாம் அவதா னிக்கலாம்.

குழந்தை இலக்கியத்தின் முன் னோடிகளாகப் பலர் இருந்திருக் கின்றனர். காலத்துக்கு காலம் சிறப்பான குழந்தை இலக்கிய ஆக்கங்களை உருவாக்கிய பெருமை கொத்தமங்கலம் சுப்பு குழந்தைக் கவிஞர், அழ. வள்ளியப்பா போன் றோரையே சாரும்.

இலங்கையைப் பொறுத்தமட் டிலே குழந்தை இலக்கிய தமிழ் நாட்டைப் போன்று பரந்து விரிந்து உருவத்திலே அமைய வில்லை. ஆயினும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளது என சொல்லலாம். அச்சகக் காகிதங் களின் விலை உயர்வு, பொருளா தாரத்தின் ஆரோக்கியகுறைவு, அரச உதவிகளின் பின்னடைவு போன்றவை இந்தநிலைக்குகாரண மாக அமையலாம். இத்தகைய முட்டுக் கட்டைகளுக்கு மத்தியிலே குழந்தை இலக்கியம் இந்த அள வுக்கு வளர்ச்சி கண்டதே பெரிய காரியம் என்று திருப்தியடைவதை தவிர வேறு வழியில்லை.

மனத்திருப்திக்கும், எதிர் காலத் துணிவின் செயல் பாட்டிற் கும் நம்பிக்கையூட்டும் எண்ணம் இருப்பது மிகவும் நல்லதே. ஆயி னும் குழந்தை இலக்கியத்திற்குப் பெரியவர்கள் கொடுக்கும் மதிப்பு போதாது என்றே கூறவேண்டும். குழந்தைகளுக்கென்றொரு இலக் கியமா? என்பது போல வளர்ந் தவர்கள் நடந்து கொள்வதை நாளாந்தம் அவதானிக்கக் கூடிய தாக உள்ளது. நாம் சிறுவர்களாக இருந்த பொழுது எத்தகைய நூல்

களை விரும்பினோம்? எத்தகைய நூல்களைத் தேடினோம் என்பதை நினைவில் வைத்திருந்தால் இன்றைய குழந்தைகளின் தாகம் எத்தகையதாக இருக்கும் என்பதைஉணரலாம். குழந்தைகளின் உள்ளம் வலிமை பெறவும் உணர்ச்சியடையவும் நூல் வாசனை பெரிதும் உதவுகின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. புத்தகம் படிப்பது போன்று அறிவு சேகரிக்கும் முயற்சி வேறொன்றும் இருக்க முடியாது. அறிவு நூல்களே மனிதனை பூரண மனிதன் ஆக்குகின்றது என்பதை உணரும் பெரியவர்கள் தமது குழந்தைகளுக்கு வாசிக்கும் பழக்கத்தை ஊக்கப்படுத்துவதில் பின்னிற்கக் கூடாது.

''புத்தகத்தைக் கையில் தொடாமல் சும்மா ஊர் சுற்றித் திரிகிறானே'' என்று குழந்தை வளர்ந்து குமரனான பின்பு குறை கூறுவதில் அர்த்தமில்லை. குழந்தை குழந்தையாக இருக்கும் பொழுதே இலக்கிய ஆர்வத்தை அவர்களுக்கு ஊட்டிவிட வேண்டும்.

புத்தகங்களை வாசிக்கப்பழகியவனுக்கு தனிமையென்பதே கிடையாது. அறிஞர்களின் படைப்புக்களான நூல்கள் அருகிலிருந்தால் அறிவின் ஊடாடல் அங்கு நிகழும். தனிமை மறையும் அறிவு வளரும்.

இனிப்புக்கும், ருசிப்புக்கும், எத்தனையோவகை உடுப்புக்குமாகச் செலவிடும் பணத்தின் ஒரு பகுதியையாவது குழந்தைகளின் உள்ள வளர்ச்சிக்கு உதவும் வகையில் செலவிடுகின்றோமா? இத்தகைய சிந்தனைகள் பெரியவர்கள் மத்தியில் எழ வேண்டும். அப்போதுதான் எதிர்கால அறிஞர்களாக வரக்கூடிய இன்றைய இளைஞர் பரம்பரை அறிவு நூல்களுடன் உறவாட அவாவுறுவார்கள்.

சிறுவர்களை இலக்கியத்துறையில் ஈடுபடச் செய்யும் சிறுவர் இலக்கிய நூல்கள், சிறுவர் மத்தியில் செல்வாக்கடையும்போதுதான் எதிர்கால முன்னேற்றத்தின் அறிகுறி தோன்றும். எதிர்கால அறிஞர்களை உருவாக்கும் இந்த ரசனையை ஊக்கப்படுத்தவும், உற்சாகப்படுத்தவும் பெரியவர்கள் முன்வர வேண்டும்.

# பொட்டிடப்படும் பொற்குடங்கள் வரிசையில்.....1996

ஆண்டுதோறும் இப்பிரதேசத்தின் ஆக்க இலக்கியம், இசை, நடனம் போன்ற கலைப்பணியினை ஆற்றிவரும், கலைஞரைக் கௌரவித்து வரும் மண்முனை வடக்குக் கலாசாரப் பேரவையின் நோக்கு இவ்வாண்டு சற்றே விரிந்தது. அதன் பலனாக வழமையான கலைப்பணி மாத்திர மன்றி கல்வியல், வாழ்வியல் முதலிய பொதுத்துறைகளிலும், ஆய்வுத் துறைகளிலும் ஈடுபட்டு எமது பிரதேசத்துக்குப் பெருமை சேர்க்கும் சான்றோர் பலர் இலை மறை காயாக வாழ்ந்து வருவதும் புலனாகியது. எனவே அத்தகையோரையும் பாராட்டவேண்டுமென்று பேரவை தீர் மானித்து வழமையான எண்ணிக்கையினரை விட மேலும் இருவரை வாழ்த்துக்கு உரித்தாக்குகின்றது............



இயற்பெயர்: சாமுவேல் இமானுவேல் கமலநாதன்

புனைபெயர்கள்: காயத்திரி, கனப்பூர், முளரியார், மனுவேலன், வித்துவான் சா.இ

கௌரவிக்கப்படும்துறை: ஆய்வுத்துறை

மட்/புனித மிக்கேல் கல்லூரியின் அதிபராக இருந்து இளைப்பாறியவர்

கலை இலக்கியப்பணி:

- நாடக ஆசிரியர், நடிகர், நெறியாளர் பாடசாலை நாடகங்கள் அகில இலங்கை ரீதியாக மேடையேற்றப்பட்ட நாடகங்கள் பல இதில் அடங்கும்.
- 'தமிழுக்கு' என்ற கவிதை மூலம் கவிதைத்துறையில் பிரவேசித்தவர். கிறிஸ்தோதய கீதங்கள் தொடராக வெளியிடப்பட்டதுடன் வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டது.
- சிறுவர் இலக்கியத்திலும் பாலர் பாடல்கள் பலவற்றை வெளியிட்டு பங்காற்றியவர்.
- சிறுகதை இலக்கியத்தில் 1946ம் ஆண்டில் நினையாதது என்ற முதல் சிறுகதையை ஈழகேசரியில் வெளியிட்டு அத்துறையிலும் கால் பதித்தவர்.

ஆய்வுப் பணிகள்:

- தமிழியல்ஆய்வில்-எழுத்துச்சீர்திருத்தம்,இலக்கியத்திறனாய்வு,ஐங்குறு நூறுக்காட்சிகள் என்றபல ஆய்வுக்கட்டுரைகள் வெளியிட்டுள்ளார்.
- உளவியல் ஆய்விலும் ஈடுபட்டுக் கட்டுரைகள் வெளியிட்டுள்ளார்.



இயற்பெயர்: வைரமுத்து சிவசுப்பிரமணியம்
புனைபெயர்: சிவா
கௌரவிக்கப்
படும்துறை: ஆக்கஇலக்கியம்

**கலைப்பணிகள்:**

- 1946ம் ஆண்டிலிருந்து சிறுகதை எழுத்தாளராக அறிமுகமானவர்.
- கிழக்கிலங்கையின் மக்கள் இலக்கியம் பற்றிய கட்டுரைகளை ஈழகேசரி, தினகரன் என்பவற்றிற்கு எழுதியுள்ளார்.
- 1949ம் ஆண்டிலிருந்து ஞாயிறு தினகரனில் செய்திக் கடிதங்கள் தொடராக எழுதியுள்ளார்.
- விபுலானந்தர் தரிசனம் என்ற நூலை வெளியிட்டு விபுலானந்த நூற்றாண்டு விழாச்சபையின் பரிசு பெற்றவர். சுவாமி விபுலானந்தர் பற்றிய பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.
- சிறுவருக்காக மகாத்மா காந்தி என்ற நூலையும் வெளியிட்டுள்ளார்.

சமூகப்பணி:

- காந்திசேவா சங்கத்தலைவராவார். மட்டக்களப்பு ஆனைப்பந்தி பிள்ளையார் அறங்காவலர் சபையின் தலைவராகவும், மட்டக்களப்பு விழிப்புலனற்றோர் பாடசாலை தரிசனத்தின் முதற்தலைவராகவும் பணிபுரிந்துள்ளார்.

---



இயற்பெயர்: நா. இராஜு முதலியார்
புனைபெயர்கள்: ராஜு மாஸ்டர்
கௌரவிக்கப்படும்
துறை: இசைத்துறை
பட்டங்களும்
விருதுகளும்: சங்கீதபூசணம், இசை அரசு, ஏழிசைச்செல்வன், கந்தர்வ கானன், இசைப்பேரரசு, இன்னிசைக் கலாபமணி, கலாபூஷணம்
தகைமை: சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசைப்பயிற்சி பெற்றவர்

கலைப்பணி:

- 1953லிருந்து புனித மிக்கேல் கல்லூரியில் இசை ஆசிரியராகவும் மட்டக்களப்பு இசைக்கலையின் ஆசிரிய ஆலோசகராகவும், மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையின் பகுதிநேர விரிவுரையாளராகவும் கடமை புரிந்தவர்.
- இவரது சேவைகள் நாடு முழுமையும் பரந்துபட்டனவாய் அமைந்துள்ளன.
- மட்டக்களப்பில் இசைப்பயிற்சி பெற்றவர்களில் இருபது பேர் ஆசிரியர்களாகப் பணிபுரிகின்றனர்.
- கர்நாடக இசை வளர்ச்சி மன்றம் அமைத்து இசை விழாக்கள் நடாத்தியுள்ளார்.
- மட்டக்களப்பு சங்கீதசபா பஞ்சாயத்து உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார்.
- இவர் பெற்ற விருதுகளும், பட்டங்களும் இவரது இசையின் மகத்துவத்தைத் தெளிவாக்க வல்லன.



இயற்பெயர்: சின்னையா கிருஷ்ணப்பிள்ளை

புனைபெயர்கள்: திமிலைத்துமிலன், கிருஷ்ணபாரதி, மாலதி, ஆலையடிச்சோலையான், பேய்மகன், இளமாலதி, கிருஷ்ணா

கௌரவிக்கப்படும்துறை: ஆக்க இலக்கியம்

தகைமைகள்: கலைமானி (**B.A.**), பேராதனைப் பல்கலைக்கழக பயிற்றப்பட்ட முதலாம்தர ஆசிரியர் (**TTI**), கல்வி டிப்ளோமா - கல்வி நிருவாகசேவை (**SLEAS**)

கலை இலக்கியப்பணி:

- 1948ம் ஆண்டிலிருந்து எழுத்துத்துறையில் ஈடுபட்டவர். இதுவரை 3000க்கு மேற்பட்ட கவிதைகள், நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகள் இருநூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகள் என்பன வெளியிட்டுள்ளார். இவை ஈழத்துப் பத்திரிகைகளில் மாத்திரமல்ல தமிழகத்தின் பல்வேறு சஞ்சிகைகளிலும் வெளிவந்தன.

❀ பதினைந்துக்கு மேற்பட்ட மேடை நாடகங்களும், வானொலி தொடர் நாடகங்கள் பலவும் ஒலிபரப்பாயுள்ளன.

❀ வானொலிச் சித்திரங்கள் வானொலிக் கருத்தரங்குகள் வானொலிப் பேச்சுக்கள் பலவும் ஒலிபரப்பப்பட்டுள்ளன.

❀ வீரகேசரியில் சித்திரக்காவியத்தொடர்கள் பல பிரசுரமாகியுள்ளன

❀ நாவல்கள் நான்கு எழுதியுள்ளார்.

பரிசில்கள்

❀ இவருடைய 'வழிதவறிய வண்டு' என்ற கவிதைக்கு சென்னை எழுத்தாளர் சங்கம் 1961லும் இழப்பு என்ற கவிதை ஆனந்த விகடன் போட்டிக்கவிதையில் பரிசுகளை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது

❀ கதம்பம் பத்திரிகை நடத்திய சிறுகதைப் போட்டியிலும் பரிசினை வென்றுள்ளார்.

❀ நாடகங்கள் பலவும் பரிசு பெற்றுள்ளன.

❀ 'சிவசக்தி நர்த்தனம்' என்ற கண்ணாடி ஓவியமும் பரிசு பெற்றுள்ளது.

❀ அணில் வால் என்ற சிறுவர் கதை கலாசார அமைச்சின் பரிசினை பெற்றுள்ளது.

வெளிவந்த நூல்கள்:

காவியம்:- நீரே மகளிர், கொய்யாக்கனிகள், எல்லாம் எங்கள் தாயகம்

இசைப்பா:- நெஞ்சம் மலராதே

குழந்தைக் கவிதை:- அழகுமுல்லை

நாவல்:- மஞ்சு நீ மழைமுகில் அல்ல

இலக்கிய நாடகம்:- முத்தொழாயிரம்

உலகளாவிய இலக்கிய ஆக்கங்கள்:

(மொழிபெயர்ப்புக் காவிய ஆக்கம் 'கலேவலா' பின்லாந்தின் தேசியக் கருவூலம் சுமார் 23,000 அடிகள் கொண்டது கெல்சிங்கி பல்கலைக் கழகத்தில் 1994ல் வெளியிடப்பட்டது.)



இயற்பெயர்: செல்லையா சிவஞானம்
கௌரவிக்கப்படும்
துறை: வாத்தியத்துறை

வயலின் ஆசிரியரானது:-
1953 அளவில் அட்டாளச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் கடமை பார்க்கத் தொடங்கி இருபது வருட சேவையின் பின் 1973ல் ஒய்வு பெற்றார்.

அனுபவங்கள்:
யாழ்நகரைச் சேர்ந்த பிரபல வித்துவான் வீரமணி ஐயா, காஞ்சிபுரம் சமஸ்தான வித்துவான் T.A. ராஜசேகரன் ஓதுவார் நல்லூர் ஆதீனம் ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், திருப்பூலங்குடி ஆறுமுகம் காரைக்கால் H.M. தாவீது ஆகியோரின் கச்சேரிகளில் வயலின் வாசித்த அனுபவம் உண்டு. அத்துடன் உள்ளூர் கலைஞர்களான, சங்கீத பூஷணம் என். ராஜு, பண்ணிசை வேந்தர் திரு குழந்தைவேல், பண்டிதர் வடிவேல் (திருமலை), சாம்பசிவம் ஆகியோருடன் வயலின் இசைவழங்கிய அனுபவம் உண்டு.

பாராட்டுக்கள்:
- திரு. கனகரெத்தினம் பொத்துவில் எம்பியாக இருந்த காலத்தில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.
- அக்கரைப்பற்று விபுலானந்த சபை பாராட்டியது.
- 1993ல் மட்டக்களப்பில் நடந்த சாகித்திய விழாவில் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.



இயற்பெயர்: எஸ். பிரான்சிஸ்
புனைபெயர்: ஆசிரியதிலகம்
கௌரவிக்கப்
படும்துறை: கல்விப்பணி, சமூகப்பணி

தகைமை:
- பயிற்றப்பட்ட 1ம் தர ஆசிரியர் (1936) பாலபண்டிதம் (1937) சங்கீத ஆசிரியர் சான்றிதழ் (1935) ஆங்கில ஆசிரியர் சான்றிதழ்(1950) றோ க. டிப்ளோமா (1944) சித்திர ஆசிரியர் சான்றிதழ் (1935) உடற் பயிற்சி ஆசிரியர் சான்றிதழ்(1936)

வெளியிட்ட நூல்கள்:

- புத்திப் பரீட்சை (5ம் வகுப்பு) மாணவர் கைநூல் (SSC)வேத உப தேசம் (4ம் தொடர் வெளியீடுகள்) தவக்காலம், திருவருகைக்காலம், புனித அந்தோனியார் நவநாள், வாழ்க்கைச் சுவடுகள்

கலை இலக்கியப்பணி:

- நாடக ஆசிரியர், நடிகர், நெறியாளர், இலங்கை வானொலி நாடகங் கள், பாடசாலை நாடகங்கள் பல இதில் அடங்கும்.

கல்விப்பணி:

- சித்திரப்பயிற்சி வகுப்புகள் (மட்டக்களப்பு, கல்முனை, திருகோண மலை, மூதூர், சியவச நூற்றாண்டுக் கண்காட்சி சித்திரக்கலை கண்காட்சி, மட். சங்கீதசபை ஸ்தாபிதம், ஜேசு அகடமி (மட்டக் களப்பு), அறிவகம் (திருகோணமலை) நிறுவியமை.

---



இயற்பெயர்; கமலா ஞானதாஸ்

கௌரவிக்கப் படும்துறை: நாட்டியத்துறை

தகைமைகள்:

- பத்தாவது வயதில்திரு.ம. கைலாச பிள்ளையிடம் நடனப்பயிற்சியினை ஆரம்பித்து யாழ் விருகதீஸ்வர நாட்டியாலயத்தில் பயிற்சிபெற்றுத் தேறினார். பரதக்கலையை விருத்தி செய்யும் நோக்கில் இந்தியா சென்று பிரபல நடன ஆசிரியர் கே. லக்ஷ்மனிடம் நாட்டியத்திலும் நட்டுவாங்கத்திலும் விசேட பயிற்சி பெற்றார்.

கலைப்பணி:-

- 1982 தொடக்கம் மட்டக்களப்பு விபுலானந்த இசை நடனக்கல்லூ ரியில் போதனாசிரியராகப் பணியாற்றுகின்றார்.
- பரத கலார்ப்பணா என்னும் பெயரில் நடன வகுப்பு ஒன்றை ஆரம் பித்து 1973ல் இருந்து கலைப்பணி ஆற்றி வருகின்றார்.
- இவரால் உருவாக்கப்பட்ட பல மாணவர்கள் கிழக்கிலங்கையிலும் உலகின் பல பாகங்களிலும் நடன ஆசிரியர்களாகக் கடமையாற்று கின்றனர்.
- 1995ல் மட்டக்களப்பு கலாலயம் 'நர்த்தன கலா துரந்திரி' என்ற பட்டத்தை வழங்கியுள்ளது.

(தொகுப்பு: திருமதி. நிர்மலா ஜெயராஜா)

# விமர்சன வீரகாவியம் வீ. ஆனந்தன்

*சம்மாந்துறையில் தோன்றி மாமாங்கத்தில் வாழ்ந்து மண்முனை புதுக்குடியிருப்பில் வீழ்ந்த விமர்சன வீர காவியம் 'வே. ஆனந்தகுமாரசாமி' எனும் வீ. ஆனந்தன்*

**தோற்றம்;** *08 - 04 - 1949*
**தொழில்;** *தபாலகத் தரப்பகுப்பு உத்தியோகஸ்தர்*
**மூச்சு:** *சமூக இலக்கிய விழிப்புணர்வு*
**மறைவு:** *05 - 12 - 1995*

## கலை இலக்கியத்தில்

'மட்டக்களப்பு கலைஇலக்கிய வளர்ச்சியில் ஆனந்தனின் பங்களிப்புப்பற்றி ஆராயும்போது அது பின்வரும் ஆதாரங்களை அடிப்படையாகக்கொண்டு அமையும்.

அ) ஆனந்தன் பங்கு பற்றிய கருத்தரங்குகளும் கருத்தரங்குக் குறிப்புக்களும் (மேடையே ஆனந்தனின் முக்கிய ஊடகம்)

ஆ) ஆனந்தன் எழுதிய ஒரு சில கட்டுரைகளும் இலக்கியக் குறிப்புக்களும் ('களம்' த்தில் இணைந்து எழுதிய 'பெட்டகம்'மும் 'படி'யில் எழுதிய 'மோசேயின் டயறி'யும்)

இ) மட்டக்களப்பு வாசகர் வட்டத்தின் முக்கிய உறுப்பினராக விளங்கி, வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் ஆற்றிய பணிகள்.

மேற்கூறிய ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு ஆழமாகச் சிந்திக்கும்போது அத்தகைய பங்களிப்பு பின்வருமாறு வெளிப்படுவதனை அவதானிக்கலாம்.

i) மட்டக்களப்பு எழுத்தாளர்கள், கவிஞர்கள் ஆகியோர்களது படைப்புக்களின் தரத்தை உயர்த்துதல்

ii) மட்டக்களப்பு வாசகரது ரசனையை உயர்த்துதல்

iii) மட்டக்களப்பின் மூத்தகலை இலக்கிய வாதிகளைக் கௌரவித்தல்.

iv) நாட்டார் இலக்கியங்களைப் பேணுதல்

v) இளந் தலைமுறையினரை இனங்கண்டு ஊக்கப்படுத்தல்

இவை மட்டக்களப்பு பிரதேசகலை இலக்கிய முயற்சிகளுடன்

நேரடியாகத் தொடர்புபட்ட விடயங்களாகும். அதே வேளையில் ஈழத்து இலக்கிய வளர்ச்சிப்போக்குடன் சங்கமித்துக்கொள்ளும் இரு முயற்சிகளுக்குமுரியவர் ஆனந்தன். அத்தகையவற்றுள் ஒன்று மலையாளச் சிறுகதை மொழிபெயர்ப்பு முயற்சி. ஏறத்தாள இருபது சிறுகதைகள் ஆனந்தனால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. மற்றொன்று ஆனந்தனது கவிதை முயற்சி. ஏறத்தாள இருபது கவிதைகளே ஆனந்தனால் இயற்றப்பட்டவை. எனினும் அக்கவிதைகளின் சமூக விமர்சன உள்ளடக்கமும் வெளிப்பாட்டு முறையும்-எண்ணிக்கையென்பது முக்கியமல்ல வெனில் – ஆனந்தனைக் குறிப்பிடத்தக்க ஈழத்துக் கவிஞர்களுள் ஒருவராக இடம்பெற வைக்கக்கூடியன என்றே கூறத்தோன்றுகிறது. இது 'பூவரசு' வில் திரு. செ. யோகராசா அவர்களின் திரட்டிய கருத்துக்கள். ஆனந்தனின் கலை இலக்கிய முயற்சிகளைச் சட்டமிட்டுக் காட்டுகிறது.

## பல்கோணப் பார்வையில்

மட்டக்களப்பு வாசகர் வட்டம் கடந்த 23 - 12 - 1995ல் மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் வைத்த அஞ்சலிக் கூட்டத்திலும் 28 - 04 - 1996 ல் கல்லடி உப்போடையில் 'தரிசனம்' விழிப்புலனற்றோர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்திலும் கூறப்பட்ட கருத்துக்களிலிருந்தும் பல்வேறு இலக்கிய சமூக நலமன்றங்களும், அன்பர்களும் ஆனந்தன் நட்டு வளர்த்த வாசகர் வட்டத்துக்கு அனுப்பி வைத்த இரங்கற் செய்திகளிலிருந்தும், அன்னாரைப் பற்றிய பல் கோணப் பார்வையொன்றைத் தொகுத்து நோக்கின் ஆதரவற்றோர்க்குதவும் மனிதநேயனாய், அடக்கப்பட்டோர்க்குதவும் நலன்காப்போனாய் கவிஞனாய், கதைஞனாய் கலைஞனாய், ஆய்வாளனாய், விமர்சகனாய், உரத்த சிந்தனையாளனாய், மனங்கவர் நண்பனாய் மண்ணின் மைந்தனாய் என்றவாறெல்லாம் விரியும் சிந்தனையோட்டம்.

## மீள அசைபோடல்

வேலையற்ற பட்டதாரியாய் விடியலே காணாதவானின்முடிந்து கொண்டு வரும் அறுபதுகளில் அமரர் வடிவேலுடனும் இளம் ஆனந்தனுடனும் மட்டக்களப்பு பொது நூலக முன்றலின் வாகை நிழலில் எதிர்காலக் கனவுகளைக் கற்பனை கலந்து கதை பேசி விட்டுக் கையிலொரு புத்தகத்துடன் ஆளையாள் பார்த்து ஐந்து சதப் 'பிளேன்டீ' யை அடித்துக் கொண்டு மைகழன்று பசைகாணாத பைசிக்கிள்களில் அடுத்த நாட் சந்திப்புக்குப் பிரியும் நினைவிலிருந்து கனக்கும் இதயத்துடன் தோப்பிலிருந்து பிரிந்து விட்ட தனி மரமாயிருக்கும் திருமதி வைரமுத்து செபமாலை வத்சலா ஆனந்தனுக்குஇறையருள் நிறைந்து வளமுடன் வாழப்பிரார்த்தித்து பிரிவால் துயருறும் அனைத்து இலக்கிய நெஞ்சங்களும் இணைந்து ஆனந்தன் விட்ட இலக்கியப் பணியைத் தொடர வேண்டும்.

— காசுபதி நடராசா —

மட்டக்களப்பு மண்முனை வடக்கு

# பிரதேச செயலக கலாசாரப் பேரவை

நடாத்தும்

# முத்தமிழ் விழாவும்

# "தேனகம்"

## சிறப்புமலர் வெளியீடும் - 1996

காலம் : 1996-05-11 சனிக்கிழமை

இடம் : மட்/தேவநாயகம் மண்டபம்
(கூட்டுறவுக் கலையரங்கம்)

தலைமை: திரு. செ. புண்ணியமூர்த்தி
(பிரதேச செயலாளர் ம.வ)

பிரதம விருந்தினர்: கலாநிதி சி. மௌனகுரு
(கலைப்பீடாதிபதி கிழக்குப்பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்: திரு. அ. கி. பத்மநாதன்
(மட்/அரச அதிபரும் மாவட்டச் செயலாளரும்)
திரு. க சண்முகலிங்கம்
(பணிப்பாளர் இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் கொழும்பு)

## நிகழ்வன

காலை நிகழ்வுகள்:-

8 30 மங்கல வாத்தியங்களுடன், பிரதம சிறப்பு விருந்தினர்கள் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்படல்

9.00 மங்கல விளக்கேற்றல்

9.05 தமிழ் வாழ்த்து சங்கீத பூஷணம் என்.ராஜு முதலியார்

9.10 வரவேற்புரை: திருமதி. க. பத்மராஜா
(உதவிப் பிரதேசச் செயலாளர் ம.வ)

9.15 தலைமையுரை: திரு. செ. புண்ணியமூர்த்தி
(பிரதேசச் செயலாளர் ம.வ)

9.25 சிறப்புப் பேச்சு: வித்துவான் சா. இ. கமலநாதன்

9.25 கவியரங்கு: நாளைய நாம் .........
தலைமை:- கவிஞர். திமிலைத்துமிலன்
பங்குகொள்வோர்:-
கவிஞர்கள்:- வெல்லவூர் கோபால்
சாந்தி முகைதீன்
இரா. தவராஜா
ஆரையூர் அமரன்

10.00 சிறப்பு விருந்தினர் உரை திரு. க. சண்முகலிங்கம்
(பணிப்பாளர், இந்து சமய கலாசார திணைக்களம்)

10.30 நபிகளாரின் பொன்மொழிப் பாடல்
தயாரிப்பு:- திருமதி. ஹபீபா காதர்

11.00 சிறப்பு விருந்தினர் உரை. அ. கி. பத்மநாதன்
(மட்/அரச அதிபர்)

11.10 பேச்சு: மேரி அனிற்றா அன்ரனி

11.15 பட்டிமன்றம்; கல்வி வளர்ச்சிக்குப் பிரத்தியேகக்கல்வி அவசியம்
அவசியம் இல்லை
(க.பொ.த.உயர்தர வகுப்பு மாணவர்கள்)

மாலை நிகழ்வுகள்:

2.30 "தேனகம்" சிறப்பு மலர் வெளியீடு
வெளியீட்டுரை: திரு. பாலசுகுமார்
(விரிவுரையாளர், கிழக்குப்பல்கலைக்கழகம்)

2.50 கலைஞர் கௌரவம்:
வித்துவான் சா. இ. கமலநாதன் (ஆய்வு)
சங்கீத பூஷணம் என். ராஜு முதலியார் (இசை)

- கவிஞர் எஸ். கிருஷ்ணப்பிள்ளை (திமிலைத்துமிலன்) (ஆக்க இலக்கியம்)
- திருமதி. கமலா ஞானதாஸ் (நடனம்)
- திரு. கு. பிரான்சிஸ் - (கல்வி, சமூகப்பணி)
- திரு. வ. சிவசுப்ரமணியம் (ஆக்க இலக்கியம்)
- திரு. எஸ். சிவஞானம் (வாத்தியம்)

3.15 பிரதம விருந்தினர் உரை: கலாநிதி சி. மௌனகுரு
(கலை பீடாதிபதி கிழக்குப்பல்கலைக்கழகம்)

3.30 பரிசில்கள் வழங்குதல்

கலையரங்கு:

3.35 வீணை இசை – செல்வி சந்திரகலா அரசரெத்தினம்
மிருதங்கம் – ஸ்ரீதரன்
வயலின் – விமலா சதாசிவம்

3.45 நாடகம் - கிழக்கு வானம் (பைனாட்ஸ் கலைக் கழகம்)
தயாரிப்பு – தேவநாயகம் அலோசியஸ் மட்டிக்கழி

4.15 நாட்டுக்கூத்து:- 'குந்தி புலம்பல்'
தயாரிப்பு: த. கனகையா
(திசவீரசிங்கம் சதுக்கம், கூழாவடி.)

4.50 நன்றியுரை: திருமதி. நிர்மலா ஜெயராஜா
(சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ம. வ)

4.55 பரதம்: திருமதி. வசந்தி நேருவின் மாணவிகள்

5.30 நிறைவு.

# இதய பூர்வ நன்றிகள் இவர்களுக்கு!

- ஆசியுரை, வாழ்த்துரை வழங்கிய பெரியார்களுக்கும்
- மலரிற்கு ஆக்கங்கள் தந்துதவிய படைப்பாளிகளுக்கும்
- விளம்பரம் தந்துதவிய வர்த்தகப் பெருமக்கள், வங்கி முகாமையாளர்கள், ப.நோ.கூ. சங்க தலைவர்களுக்கும்
- பல வழிகளிலும் ஆலோசனைகள் வழங்கி வழிகாட்டிய மண்முனை வடக்குப் பிரதேசச் செயலாளர், உதவிச் செயலாளர், கணக்காளர் ஆகியோருக்கும்
- நிதி திரட்டுவதில் முன்னின்று உழைத்த கிராம உத்தியோகத்தர்கள், கலாசாரப் பேரவை உறுப்பினர்கள் திரு கணேசானந்தம்,கதிர்பாரதிதாசன் ஆகியோருக்கும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும்
- அட்டைப்படத்தை அழகுற வரைந்துதவிய ஓவியர் பவான் அவர்களுக்கும்
- ஆக்கங்களைச் சேகரித்தும் ஆலோசனைகள் வழங்கியும் உதவியகலாசாரப் பேரவை உறுப்பினர்களுக்கும்
- மலர் வெளியீட்டுக்காக தமது உழைப்பினை வழங்கிய திரு. இரா. துரைரத்தினம், திரு. கே. லோரன்ஸ், திரு. காசுபதி நடராஜா ஆகியோருக்கும்
- மலரை அழகுற அச்சிட்டு உரிய நேரத்தில் வெளியிட உதவிய நியூசீன் அச்சகத்தினருக்கும்

விழா சிறக்க கரம் தந்தோர்:

- முத்தமிழ் விழாப் போட்டிகளில் பங்கெடுத்த மாணவர்கள், மண்முனை வடக்கு வாழ் கலைஞர்கள், ஆர்வலர்களுக்கும், பாடசாலை அதிபர்களுக்கும்
- போட்டிகள் நடத்துதலுக்கு வசதிகள் வழங்கிய புனித சிசிலியா பெண்கள் மகா வித்தியாலயம் ஆனைப்பந்தி இ.கி.மி.ம.வி. அரசினர் ஆசிரியர் கலாசாலை அதிபர்களுக்கும்

- ஒத்துழைப்பு வழங்கி சிறப்பான தேர்வினை நடத்தித்தந்த நடுவர் பெருமக்களுக்கும், உதவி புரிந்த கலாசாரப் பேரவை உறுப்பினர் களுக்கும்

- போட்டிகளில் வென்றோருக்கான பரிசில்களை வழங்குவதற்கு பெரு மனதுடன் முன்வந்த இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்க ளத்துக்கும் விசேடமாக அதன் பணிப்பாளர் திரு.க சண்முகலிங்கம் உதவிப் பணிப்பாளர் எஸ். தெய்வநாயகம் ஆகியோருக்கும்

- பல்வேறு பணிகளுக்கு மத்தியில் பிரதம சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்த சான்றோர்களுக்கும்

- சிறப்புப் பேச்சாளராகக் கலந்து சிறப்பித்த வித்துவான் சா.இ. கமலநாதன் அவர்களுக்கும்

- விழாவின் ஏனைய பல்வேறு நிகழ்வுகளையும் நிகழ்த்திச் சிறப்பித்த கலைஞர் பெருமக்களுக்கும், மாணவ மணிகளுக்கும்

- நிதியுதவி புரிந்த கிராமோதயசபைகள், கிராம அபிவிருத்திச் சங் கங்கள், கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக நிதியுதவி வழங்கிய மண்முனை வடக்குப் பொதுமக்களுக்கும்

- விழா சிறக்கப் பங்கு கொண்ட கலை இலக்கிய ஆர்வலர்களுக்கும்

- விழா நடத்த மண்டபம் வழங்கிய மட்/மாவட்ட கூட்டுறவுச் சபை யினருக்கும்

- உபசரணைகளுக்கு நன்கொடை வழங்கியவர்களுக்கும் உதவிகள் புரிந் தோருக்கும்

- சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய பிரதேசச் செயலக உத்தி யோகத்தர்களுக்கும் விடய எழுதுநரான செல்வி. மதிவதனி ஆறுமு கத்திற்கும்

- சிறப்பாகச் சகல நிகழ்வுகளையும் நடத்துவதற்கு ஆலோசனை வழங்கி ஒத்தாசையும் பங்களிப்பும் செய்திட்ட கலாசாரப்பேரவை யின் அனைத்து அங்கத்தவப் பெருமக்களுக்கும்

திருமதி. நிர்மலா ஜெயராஜா
இணைப்பாளர்
கலாசாரப் பேரவை மண்முனை வடக்கு

விவசாய நண்பர்களே!

அதிக பட்ச முளை திறன்
அமோக விளைச்சல் தரும்
விதை நெல் தேவைகளுக்கு

மண்முனை மேற்கு விதை நெல்
உற்பத்தியாளர் (PVT) லிமிடெட்
வவுணதீவு, மட்டக்களப்பு.

திட்ட அனுசரணை:

"கெயார்"
சர்வதேச நிறுவனம்
மட்டக்களப்பு.

நற்செய்தி!

நம்பிரதேசத்திற்கு ஏற்ற
அமோக விளைச்சல் தரும்
விதைநெல்லை பெற்றுக்கொள்ள

தொடர்பு கொள்ளுங்கள்

"ராஜா"
விதை நெல் உற்பத்தியாளர்

தம்பலவத்தை,
மண்டூர்.

திட்ட அனுசரணை:-
"கெயார்" சர்வதேச நிறுவனம்
மட்டக்களப்பு.

விவசாயிகளே!

உங்கள் விருப்பத்திற்கேற்ற
நெல் இனங்களை தெரிவு செய்து
அமோக விளைச்சலைப் பெற
நாடுங்கள்

"தேவா"
விதைப்பண்ணை

அரசடித்தீவு,
கொக்கட்டிச்சோலை.

திட்ட அனுசரணை:-
"கெயார் சர்வதேச நிறுவனம்"
மட்டக்களப்பு.

With Best Compliments

**Ebani Ice Cream**

*40/1, Pansala Road,*
*Batticaloa.*

# எமது கலை - இலக்கியங்கள் - பல்துறை நோக்கு.

— சுபா லோகநாதன் —

நமது சூழலில் வாழும் சாதாரண மக்களுக்கும் தேவையான பல அரிய விடயங்களைக் கூற வேண்டும் என்ற ஆர்வமும், பொறுப்புணர்ச்சியும் கற்றறிந்தவர்களிடமும் இக் காலத்தில் வெகுவாகக்குறைந்து வருகின்றது.

இத்தகைய ஆர்வமும், புதியன படைக்கும் திறனும் எம் இலக்கியவாதிகளிடமும், கலைஞர்களிடமும் கூட அருகி வருவதையிட்டு நான் சில வேளைகளில் சிந்தித்ததுண்டு.

இலங்கைக்கு வெளியே சில ஆசிய, ஆபிரிக்க, தென் அமெரிக்க ஐரோப்பிய நாடுகளில் பயணம் செய்த போதும் அங்குள்ள கலை வளர்ச்சியையும், இலக்கியச் செழுமையையும் அனுபவித்த போதும் எமது பிரதேச மொழி சார்ந்த கலை இலக்கிய வறுமையை ஆழமாக ஒப்பு நோக்க முடிந்தது. அதன் அடிப்படையிலேயே இக் கட்டுரை தரப்படுகின்றது.

எமது பிரதேச அல்லதுமொழி சார்ந்த கலை இலக்கியப் போக்கினையிட்டு ஒப்பீடு செய்யும் போது இது ஏனைய பிரதேசங்களிலுள்ள தமிழ் மொழியிலான கலை இலக்கிய உலகிற்கும் பொருந்தும் எனவும் கருதுகின்றேன்.

சில அம்சங்கள் அகலக் குறிப்பாகவும், கருத்துக் குறிப்பாகவும் இக் கட்டுரையில் முன்வைக்கப் பட்டுள்ளன. இருப்பினும் சில விடயங்கள் இலக்கிய உலகிற்கு மீளவும் நினைவூட்டும் வகையிலும் கூறப்படுகின்றன என்பதையும் கலை இலக்கிய வாதிகளும், திறனாய்வாளர்களும் கவனத்திற் கொள்வார்கள் எனும் நம்பிக்கையும் எனக்கு உண்டு.

மனித வாழ்வில் இருந்ததை, இடம் பெற்றதை, மக்கள் அனுபவித்ததை இன்னும் மக்களிடையே நடைமுறையில் இருப்பவற்றை, எதிர்காலத்திலும் இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பனவற்றை கருத்து நிலைச் சிந்தனையுடனும் கலை நயத்தோடும், அழகியற் பாங்குடனும் வெளிப்படுத்துவனவாகவே கலை இலக்கியங்கள் திகழ்கின்றன. இத்தகைய கலை இலக்கியங்கள் எக்காலத்திலும், மக்களுக்கு துன்பத்தையும், மனச் சிக்கல்களையும் ஏற்படுத்துமாயின் அவை பற்றிய ஆய்வுகளும், தேடல்களும் அடிக்கடி இலக்கிய உலகில் நிகழ்த்தப்பட வேண்டும் என்பது இன்று உணரப்பட்டுள்ளது,

உலகின் பல நாடுகளில் சில காலங்களில் ஆங்காங்கு வாழ்ந்த தேசிய வாதிகள், சமதர்மவாதிகள், இலக்கியச் சூழலைக் கட்டுப்

படுத்தியது போல, இன்றும் இலக்கியவாதிகளும், இலக்கியத் திறனாய்வாளர்களும் தமக்குள் ஒரு வட்டத்தைப் போட்டுக் கொண்டு இலக்கியத் துறையை தமக்காகவே கட்டுப் படுத்திக் கொண்டு; தம்மைச் சார்ந்தவர்களுக்குரிய ஒரு துறையாக மாற்றிக் கொண்டிருப்பது பெரும் வேதனையைத் தருகின்றது. இத்தகைய நிலைமைகள் மாக்சிய நாடுகளில் மட்டுமல்ல வளர்ச்சியடைந்த பிரித்தானியா, பிரான்ஸ், அமெரிக்க நாடுகளிலும் காணப்பட்டன. ஆனால் கடந்த இரு சகாப்தங்களாக ஏற்பட்ட திறனாய்வுகளின் வளர்ச்சியே கலை இலக்கியம் அந்நாடுகளில் விடுதலை பெற்றதற்கும், ஒரு சிலருக்கே உரிய துறையாக இருந்த கலை இலக்கியத்துறை பொதுமக்களின் துறையாக மாறியமைவதற்கும் வழிவகுத்தன என்பதனையும் நாம் இம் முன்னுரையில் குறிப்பிட விரும்புகின்றோம்.

## ஒப்பியலும் திறனாய்வும் -

இன்று உலகெங்கும் பல்துறை அணுகு முறைகள் (Inter - Discip -linary Approach) வழி நின்று கலை இலக்கியத்தை திறனாய்வு செய்யும் முறை வளர்ந்துள்ளது.

ஆனால் எமது நாட்டில், குறிப்பாக எமது பிரதேசங்களில் உலக நோக்கையும் (world view) கருத்து நிலைச் சிந்தனையையும் (Idiological) கொள்ளாத கலை இலக்கியங்கள் பற்றிய சில விமர்சனங்களும், ஒப்பாய்வுகளும் இடம் பெறுகின்றதை நாம் அவதானிக்கின்றோம்.

கலை வளர்ச்சியில் எமது சமூக பொருளாதார, அரசியல் மேம்பாடுகளின் அடைவுகளினால் ஏற்பட்ட முதிர்ச்சியால், முன்னொரு காலத்தில் கூறப்பட்ட கருத்துக்கள் சீர்திருத்தங்கள் தொடர்பாக, மாற்றங்களை நாம் ஏற்படுத்த வேண்டியுள்ளது. இதனால் சிறப்பானதும் வரலாறு, மரபுவழி நின்று உலக நோக்கோடு எமது பழங்கலை இலக்கியங்களின் உருவத்தையும், உள்ளீடுகளையும் ஒப்பாய்வு செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்பதையும் நாம் உணர்தல் வேண்டும்.

கலை இலக்கியத் திறனாய்விலும், ஒப்பாய்விலும், கலைஞன் அல்லது எழுத்தாளன், படைப்பின் கரு அல்லது விடயதானம், கலை நயம் ஆகியன முக்கியத்துவம் பெறுவதாக "அன்னதா சங்கர் ராய்" குறிப்பிடுவார்

நாம் ஏன் ஒரு திரைப்படத்தைப் பார்க்கப் போகின்றோம் எனப் பொதுவாக ஒரு வினா எழுப்பினால் இதனை நாம் உய்த்துணரலாம். ஒன்று குறிக்கப்பட்ட திரைப்பட இயக்குநரிற்காக அல்லது இசையமைப்பாளருக்காக அல்லது நடிகை, நடிகர்களுக்காக இரண்டு, அத்திரைப்படத்தின் கதை, பாடல்களுக்காக, மூன்று, அத்திரைப்படத்தின் கலைத்துவம்

மிக்க காட்சி அமைப்பு, படப் பிடிப்புக்களுக்காக என விடைகள் வரும்.

எனவே கலை இலக்கியங்கள் தொடர்பான திறனாய்வும், இத்த கைய விடய தானங்களைக் கொண் டுள்ளது என்பதை நாம் பல திற னாய்வாளர்களின் கருத்துக்களிலி ருந்து முன்வைக்கலாம்.

கலை இலக்கியங்களில் கண்ணி யமான படைப்புகள், கண்ணிய மற்ற படைப்புக்கள் என்பதும் தூயகலை இலக்கிய ஆக்கம், அவ்வா றானவை அல்ல என வகுப்பதும் ஒப்பிடுவதும் எமது சமூக ஒழுங்கு களையும், பண்பாட்டு பழக்க வழக்கங்களையும் அத்தகைய கலை இலக்கியப் படைப்புக்களின் மீது திணிப்பதன் விளைவே என இக் காலத்தில் ஆராயப்படுகிறது.

உலக நாடுகளில் சில இனங் கள், சமூகங்கள் தூய்மையற்றவை. அவர்களது கலை இலக்கியங்களில் சிறப்புக்கள் இல்லை எனக் காலா -காலமாக ஒதுக்கப்பட்டும் வந் துள்ளன. இத்தகைய போக்கிற்கு சிறப்பான திறனாய்வுகளும், தேடல்களும், ஒப்பாய்வுகளும் இல் லாமையே என்பதை நாம் பல நாடுகளினது சமூக வரலாறுகளில் இருந்து அறியலாம்.

ஆபிரிக்க நாட்டு மக்களை ஆட்சி செய்த பல ஐரோப்பிய ஆட்சியாளர்கள் கண்ணியமற்ற முறையிலும், அநீதியாகவும், சுரண் டியும் வழிநடத்திபதால் அவர்கள் உலக அரங்கில் வறுமையானவர் களாக கல்வியறிவற்றவர்களாக, கொடிய நோய்கள் உள்ளவர்க ளாக வெளிப்படுத்தப்பட்டதாக இன்றும் அந்நாடுகளில் வதியும் புத்தி ஜீவிகள் கூறுவார்கள். இருப்பினும் தாம் பல்வேறு வித மான போராட்டங்கள் மத்தியி லும் தமது பழங்கலை இலக்கி யங்களைப் பேணி வந்ததாகவும் நவீன கலை வடிவங்களை அவற் றுடன் இணைத்துக் கொண்டு வளர்ச்சி மிக்க, செழிப்பு மிக்க கலை இலக்கியங்களுடன் இன்றும் வாழ்வதாகக் கூறுகிறார்கள்.

கலை இலக்கியப் படைப்புக் கள் யாவும் சமுதாய உற்பத்திப் படைப்புக்களேயாகும். சமுதாயம் காலத்திற்குக் காலம் அரசியல், பொருளாதார சூழ்நிலைகளால் மாறும் போது, வளரும் போது கலை இலககியமும் மாற்றங்களை உள் வாங்கியதாய் விளங்குகின் றன. வடிவமும், யாப்பும் கலை இலக்கியங்களுக்கு முக்கியத்துவம் இல்லை. கருத்தே தலையாயது. ஒரு காலத்திற்கு மட்டும் பொருத் தமானதாக கலை இலக்கியங்க ளில் கருத்து அமைவதும் உண்டு எக்காலத்திற்கும் பொருந்துவதா கவும் பொது உண்மைகள் அமை வதும் உண்டு. இதிலும் தமிழி லக்கியத்தைப் பொறுத்த வரை எல்லாக் காலங்களுக்கும் பொருத் தமான உண்மைகளை நாம் அனு

விக்கலாம் என டாக்டர் சிலம் பொலி சு. செல்லப்பன் கூறுவார்

எங்கோ ஒரு பகுதியில் ஏற் பட்ட மாற்றங்கள் உலகின் வேறு ஒரு பகுதியிலும் தாக்கத்தை உண்டு பண்ணுகின்றன. சில வேளைகளில் உலகின் சில நாடு களில் கலை வடிவங்களும் யாப்பும் அதே மாதிரியானவைகளாகவும் அமைந்து விடுகின்றன.

அண்மையில் மட்டக்களப்பில் இடம் பெற்ற கூத்து அரங்க ஆய் வின் போது மட்டக்களப்பில் ஆடும் கூத்துக்கள் எங்கிருந்து வளர்ச்சி பெற்றன? என்ற அடிப் படையில் கருத்துப் பரிமாற்றங் கள் இடம் பெற்றன. வடமோடி தென்மோடிக் கூத்துக்கள் மட்டக் களப்பு பிரதேசங்களுக்கு உரித் தான மரபு வழியிலான கலை வடிவங்களா? எனும் ஆய்வு முனைப்படைவது போலிருந்தது அல்லது தென்னிந்தியாவிலிருந்து வந்திருக்கலாம் என்பதும், வட இலங்கையிலிருந்து வந்திருக்கலாம் என்பதும் போன்ற கருத்துக்களும் முன்வைக்கபபட்டன.

எமது பிரதேசங்களில் உள்ள பறை, மேளக் கூத்து வடிவங்கள் ஆபிரிக்க நாடுகளிலும் உண்டு ஆபிரிக்க நாடுகளான கென்யா, தன்சானியா நாடுகளிலும் இன்றும் மரண வீடுகளில் பறை மேளங்க ளைப் பயன்படுத்துவதும், அதற் குரிய ஆட்டங்களில் ஈடுபடுவதும் வழக்கத்தில் உண்டு. இவற்றைப் பார்க்கும் போது இலங்கையிலி ருந்து ஆபிரிக்காவுக்குச் சென்றதா? ஆபிரிக்காவிலிருந்து இலங்கைக்கு பறை மேளக் கூத்து வந்ததா? என்ற ஆய்வு அவசியமற்றது என் பது எமது கருத்தாகும்.

இன்றும் கிழக்கைரோப்பாவில் சிலவேனிய மக்கள், குறிப்பாக இளம் பெண்கள், வைன் திரவம் கணிசமான அளவு நிரம்பிய கண் ணாடிக் குவளையை (Glass) தலையில் வைத்து ஆடும் வழக்கம் உண்டு. இதனை நான் பார்த்த போது எமது பிரதேசங்களில் இடம்பெறும் ''கரகம்'' எனும் ஆட்டத்திற்கும் இதற்கும் தொடர் பிருப்பது போல எனக்குப்பட்டது. இங்கு கரகத்திலிருந்து சிலவேனிய மக்கள் அந்த ஆட்டத்தினைப் பெற்றனரா? அல்லது நாம் சில வேனிய மக்களிடம் இருந்து கர காட்டத்தை வளர்த்துக் கொண் டோமா? எனும் ஆய்வு தேவையா? திறனாய்வுக்கு ஒப்பீடு அவசியம் தான். ஆனால் மானிடவியலை (**Anthropology**) விளங்கிக் கொள் வதற்கும் இத்தகைய நிகழ்வுகளின் இலக்கு, இயல்பு, எத்தகையன என ஆய்வு செய்வதுதான் மிகமிக அவசியம் என்பதையும் நாம் வலி யுறுத்த விரும்புகின்றோம்.

சமூகப் பகுப்பாய்வும் - இலக்கியமும்:-

''இலக்கியத் திறனாய்வுக்கு சமூகவியற் பகுப்பாய்வு அவசியம்'' என சோவியத் இலக்கியத் திற னாய்வாளர் லூனா சார்ஸ்கி (*Luna Charsky*) கூறுவார்.

மக்களின் விருப்பு வெறுப்புக் களை அறிந்து உயரிய உண்மை களை வெளிக்கொணர விரும்பும் கலை இலக்கியவாதிகள் யாவரும் இலக்கியத்தை ஆய்வு செய்யும் போது அவ் இலக்கியம் தோன்றிய காலத்தில் சமூகப் பொருளாதார அமைப்பையும், அவ் இலக்கியம் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்த சமூகவியற் காரணிகளை யும், ஆராய வேண்டுமென எதிர் பார்க்கப்படுகிறார்கள். மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் ஆபிரிக்க, தென் அமெரிக்க நாடுக ளிலும் வளர்ந்துள்ள இப்பல்துறை நோக்கு எம் நாட்டவரிடம், பிர தேசத் திறனாய்வாளர்களிடம் மிகக் குறைவாகும்.

''ஒரு படைப்பிலக்கியத்தைத் திறனாய்வு செய்ய வேண்டுமா னால் அப் படைப்பிலக்கியத்தில் இலக்கியத்திற்குரிய இலக்கணங்கள் அணிகலன்கள், செம்மை, செழி ப்பு அமைந்துள்ளனவா? எனக் கண்டு பாராட்டவோ, புறக்கணிக் கவோ செய்யலாம். ஆனால் அவ் இலக்கியம் அடிப்படையாகக் கொண்டு எழுந்துள்ள சூழ்நிலை கள், சமூகப் பின்னணி நல்லவை யாக இல்லை என்பதற்காக அந்த இலக்கியத்தைக் குறை கூறுவது முறையாகாது'' என ஆங்கிலேயத் திறனாய்வாளர் டேவிற்டெய்ச்சஸ் (*David Daiches*) குறிப்பிடுகின்றார்

இங்கு கலை இலக்கியமானது வரலாற்றை ஏற்படுத்த வேண்டும் என்ற ஆர்வமும், தேவையும் வலி யுறுத்தப்படுகின்றது' இலக்கிய வர லாற்றின் நோக்கம் வரலாற்று ரீதி யாக இலக்கியங்களை ஒழுங்கு படுத் துவதும், வரலாற்றின் வளர்ச்சி யைக் கவனத்திற் கொண்டு விஞ் ஞான பூர்வமாக இலக்கியங்க ளைத் திறனாய்வு செய்வதும் அவ சியம் எனக் கூறப்படுகிறது.

இன்று எமது கீழைத்தேய நாடு களில் மட்டுமல்ல, மேற்கைரோப் பிய நாடுகளில் கூட வரலாற்றுப் பார்வையை நிராகரிக்கும் இயல்பு கள் அதிகரித்து வருகின்றன. இருப் பினும் வரலாற்றுப் பார்வை, சமூக மறுமலர்ச்சிகளுக்கும், தேசிய எழுச்சிகளுக்கும் உத்வேகம் கொடுத்ததை நாம் மறக்க முடியாது.

கலை - இலக்கியங்கள் ஏன் வளர்ச்சியடையவில்லை?

கலை இலக்கியங்கள் மனித வாழ்க்கையை பிற்காலச் சந்ததிக்கு கடத்தும் ஏடுகள் என்பதையும், எதிர் கொள்ளும் வாழ்க்கைச் சிக் கல்களுக்கு தகுந்த விளக்கங்களைத் தரும் சமூக ஆவணங்கள் என்பதை யும் தெரிந்து கொண்டோர் மிகச் சிலரே.

எந்தக் கலை இலக்கியங்கள், மனித வாழ்க்கை இன்பங்களுக்கும் நிறைவுகளுக்கும் இடையூறாக எழக் கூடிய பெரும் தடைகளை உடைத்தெறியும் மன வலிமையை மக்களுக்கு கொடுத்ததோ - அவையே வளர்ச்சியுமடைந்தன நிலைத்தும் நிற்பனவுமாகும்.

எமது கலை - இலக்கியவாதி

கள் பலர் வெறும் எண்ணவாதிக ளாக, வறட்டுத் தத்துவ மேதை களாக, தாங்கள் பெரும் கலைஞர் கள் என்ற இறுமாப்பில் தங்களுக் கும் பயன்படாமல், மற்றவர்களுக் கும் பயன்படாமல் இலக்கிய முயற் சிகளில் ஈடுபடுவதனால் அக்கலை இலக்கிய வடிவங்கள் நிலைத்து நிற்பதில்லை. சமுதாயத்தில் அநீ திகள் இடம்பெறும் போது, பய னற்ற வேலைகள் இடம் பெறும் போது, அவற்றைத் தணிக்காது அவ் அநீதிகளையும், பயனற்ற வேலைகளையுமே பேசுவார். அதற்கான தீர்வுகளைக் கேடப் பின்நிற்பர். இன்னும் சிலர் வேறு பட்ட கலை இலக்கியக் குழுக்களி டையே பிளவுகளையும் ஏற்படுத்தி தம்மை எப்படியாவது இனங் காட் டிக் கொள்வதிலேயே முயற்சிக்கின் றனர். இத்தகையோரும் அவர்க ளது பணிகளும் இருக்கும்வரை கலைஇலக்கியம் எவ்வாறு வளரும் என்பது கேள்விக் குறியே.

எமது நாட்டில் ஒரு குறிப் பிட்ட பிரதேசங்களில், ஒரு குறிப் பிட்ட பகுதிக்கு அல்லது சமூகத் திற்குப் பிரச்சனைகளாக இருப்ப னவே அனைவருக்குமான பிரச் சனை என்பது போன்ற உணர்வு எமது கலை இலக்கியவாதிகளிட மும் உண்டு. எமது கலை இலக்கிய வாதிகளிடமும், தமிழ் பேசும் மக் களிடமும் உள்ள தாழ்வு மனப் பான்மையும் கலை - இலக்கியம் வளராமைக்குரிய அடிப்படைக் காரணிகளில் ஒன்றாகும்.

## இலக்கியத்தின் முக்கிய பணி

கலை இலக்கியங்கள் இன்றைக் காக மட்டுமல்ல, நாளைக்காக வும் எனும் மனநிலை கலை இலக் கியவாதிகளுக்கு எற்பட வேண் டும்.

பழமை பேசிப்பேசியே வாழ்க் கையில் முன்னேறத்தான் வேண் டும். அதேவேளை நிகழ்காலப் பிரச்சினைகளையும் ஆய்வுணர்வு டன் நோக்க வேண்டும்.
காரண காரிய உண்மைகளை புரிந்து அவற்றை எடுத்துக் கூற வேண்டும்.

அரசியற் தொடர்புடன், வர்க்கப் பார்வையுடன், சமூக விஞ்ஞான நடைமுறைப் போக் கின் தெளிவுடன் தங்கள் படைப் புக்களை, வழங்கும் இலக்கிய வாதி கள் உருவாக வேண்டும்.

இலக்கியவாதிகள் சமுதாயத் தைக் கற்க வேண்டும். சமுதாயக் கட்டுமானங்களை, பரஸ்பர உறவு நிலைகளை, மனோவியலை இவை கள் அனைத்தையும் தேர்ந்து கொள்ளும்போதே நமது உள்ள டக்கத்தில் தேவையானதும் ஈடு பாடு கொள்ளத் தக்கதுமான இலக்கியத்தை தரமுடியும் எனக் கூறலாம்.

ஒரு குறிப்பிட்ட கலைப் படைப்பை அது சிறந்த படைப் பாக இருக்கும்போது அதனை நாம் மீள் உற்பத்தி அடிப்படையில்

புதுப்பிக்கலாம் அல்லது எமது இக்கால கலை - இலக்கியங்களுக்கு மூலாதாரமாகக் கொள்ளலாம் என்பது இதனால் உருவாகும்.

ஷேக்ஸ்பியரும் கூட தமது நாடகங்களுக்கான சிலகதைகளின் மூலகங்களை, இத்தாலிய கிரேக்க நாடகக்கதையிலிருந்து பெற்றதாக கூறப்படுகிறது. எனினும், எமது பிரதேச கலை இலக்கிய வளர்ச்சிக்கு தொலை நோக்குப் பார்வையுடைய படைப்பாளிகள் தேவை இவர்களே மக்கள் உள்ளத்தைப் பண்படுத்த முடியும் ஐரோப்பிய ஆபிரிக்க கலை - இலக்கியங்கள் பல இன்றும் உயிரோட்டம் கொண்டனவாக விளங்குவதற்கு அந்நாடுகளின் இலக்கிய வாதிகளின் தொலை நோக்குப் பார்வையே அடிப்படையானதாகும் என இன்றும் அந்நாடுகளில் விமர்சிக்கப்படுகிறது. தேசிய சமூக முரண்பாடுகளையும் பிரச்சினைகளையும் புரிந்து கொள்ளும் வகையிலும் அவற்றிற்கான தீர்வுகளை தெரிந்து கொள்ளும் தகைமையிலுமே இலக்கியப் படைப்பின் வெற்றி - தோல்வி தங்கியுள்ளது எனும் கருத்து இங்கு நினைவு படுத்தத் தக்கதாகும்

ஒரு செய்தித்தாள் அரைகுறையாக அறிவிக்கும் செய்தி போன்றோ வானொலிச் செய்தியைப் போன்றோ உடனடியாகக் காற்றில் கலந்து விடும் செய்தி போன்றோ இலக்கியப் படைப்புக்கள் அமைய முடியாது என்பதனை எமது பிரதேச கலை - இலக்கியவாதிகளும் - திறனாய்வாளர்களும் உணர்தல் அவசியமாகும்

கலை - இலக்கியவாதிகள் தமது சுதந்திரங்களை இழந்து விடலாம். ஆனால் கலை இலக்கியங்கள் தம் சுதந்திரத்தை இழந்து விடக் கூடாது. ஏனெனில் கலை இலக்கியத்தைப் படைக்கும் போது நாம் வெறும் மனிதர்கள் அல்ல. உண்மையின் உரிமையையும், அழகின் பரிமாணத்தையும் வெளிப்படுத்தும் படைப்பாளி என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

கண்டனத்திற்கும், தண்டனைக்கும் படைப்பாளிகளும், திறனாய்வாளர்களும் பயம் கொள்ளக் கூடாது. அதே போல் தற்காலிகப் பாராட்டுக்களுக்கும். பரிசில்களுக்கும், புகழ் மாலைகளுக்கும் படைப்புக்களைப் பலவீனப்படுத்தவும் கூடாது. ஏனெனில் எமது ஆயுளை விட எமது படைப்பின் திறனாய்வின் ஆயுள் எவ்வளவோ அதிகமானது என்பதனை நாம் உணர்வோமானால் உலக இலக்கியங்களோடு எமது இலக்கியங்களையும் இணைத்து விடுவோம் என்பது எமது அபிப்பிராயமாகும்.

*Wtih Best Compliments*
*From*

# U.K. Enterprise (Pvt) Ltd.

*(Sole Agent and Distributors for East West Marketing (PVT)Ltd The House of Turkey Brand Cooking Oil Products, Bakery Margarine, Shortening Yeast and Nutri "C" Orange Drink Etc)*

*Orient Toffees*
*L.P. GAS CO,*
*Caves Marketing Srvices Ltd.*

**49/1, Pansala Road,**
**Batticaloa,**
**Sri Lanka.**
**☎ 065-2636**

**Head Office:**
**F-84, People's park,**
**Gasworks Street,**
**Colombo -11**
**☎ 421571**

*With Best Compliments From*

# Rajeswary Stores

Prop : **K. K. Shanmugam J. P.**

19, 21, Trinco Road,

Batticaloa.

T' Phone : 065 - 2417, Fax : 065 - 4460 / 2945

Residence : 065 - 2638

மக்கள் சேவையில் தொடர்பு கொண்ட நாம்
எமது சேவைக்கரங்களை இன்னும் சற்று நீடிக்கிறோம்.

❀ நுகர்ச்சிச்சேவை

❀ பிரயாணச் சேவை

மற்றும் ஒரே கூரையின் கீழ் தங்கள்
தேவைகளை சுயமாக தெரிவு செய்துகொள்ள
மட்டக்களப்பில் ஒரே அமைவிடம்

மட்/ ப. நோ. கூ. சங்க
*"சுயசேவை விற்பனை நிலையம்"*

இன்னும் கதிரை, படங்கு,
ஒலிபெருக்கி வாடகை, அத்தோடு நியாய விலையில்
"அந்திய காலச் சேவை"
தேவைகளுக்கு நாடுங்கள்
நாம் காத்திருக்கின்றோம்.

**மட் / ப. நோ. கூ. சங்கம்**

105, திருமலை வீதி, மட்டக்களப்பு.

*Printed By: New Keen Press, Batticaloa.*